




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:236 | 12-03-2026 | வியாழக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

12.03.2026 மாசி 28
வியாழக்கிழமை

---

சூரிய உதயம் 6.24

---

திதி:
இன்று அதிகாலை 4.05 வரை அஷ்டமி பின்பு நவமி.

---

நட்சத்திரம்:
இன்று முழுவதும் மூலம்.

---

யோகம் :
இன்று காலை 9.37 வரை சித்தி பின்பு வ்யாதீபாதம்.

---

கரணம்
இன்று அதிகாலை 4.05 வரை கௌலவம் பின்பு மாலை 5.00 வரை தைதுலம் பின்பு கரசை.

---

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.23 வரை யோகம் சரியில்லை பின்பு சித்த யோகம்.

---

சந்திராஷ்டமம் :
இன்று முழுவதும் கார்த்திகை..

---

நல்ல நேரம்
காலை 10.30 – 11.30.
மாலை 12.30 – 1.30

---

இராகு காலம்
பிற்பகல் 1.30 – 3.00.

---

எமகண்டம்
காலை 6.00 – 7.30.

---

குளிகை
காலை 9.00 – 10.30.

---

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# “தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கு முழு அர்ப்பணிப்போடு இருக்கிறது மத்திய அரசு”

**பிரதமர் மோடி**



**திருச்சி, மார்ச் 12:** “மேம்பட்ட இந்தியாவை உருவாக்க மேம்பட்ட தமிழ்நாட்டை உருவாக்குவதுதான் எங்கள் இலக்கு. தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கு முழு அர்ப்பணிப்போடு இருக்கிறது மத்திய அரசு ” என்று திருச்சியில் பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

சுமார் ரூ.5,650 கோடி மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்து, அடிக்கல் நாட்டுவதற்காக பிரதமர் மோடி, இன்று திருச்சிக்கு வருகை தந்தார்.

திருச்சி பஞ்சப்பூரில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் இரண்டு அமிர்த பாரத் விரைவு ரயில்கள், இரண்டு விரைவு ரயில்கள் மற்றும் ஒரு பயணிகள் ரயில் ஆகியனவற்றின் சேவையை பிரதமர் மோடி கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

பின்னர் விழாவில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, “இன்றைய நிகழ்ச்சி தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானது. சுமார் ரூ.5,650 கோடி மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களோடு தொடர்புடையது இந்த நிகழ்ச்சி.

இந்த திட்டங்கள், தூய்மையான எரிசக்தி, பெட்ரோல் தயாரிப்பு, கிராமப்புற இணைப்பு, நெடுஞ்சாலை மேம்பாடு உள்ளிட்ட முக்கிய திட்டங்கள் தொடர்பானவை. இந்த திட்டங்கள் எரிசக்தியின் அணுகலை அதிகரிப்பதோடு, தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்பை அளிக்கவல்லது.

பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தின் நகர எரிவாயு கட்டமைப்புக்கு அடிக்கல் நாட்டுவது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த திட்டத்துக்காக சுமார் ரூ.3,700 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம், நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகள் உருவாகும். இயற்கை எரிவாயு என்பது சுற்றுச்சூழலுக்கு ஏற்றது. 8 ஆண்டுகளில், 4 கோடி மரங்களை நடுவதற்கு இணையான சுற்றுச்சூழல் நன்மைகளை அளிக்க வல்லது இந்த திட்டம் என்று எனக்கு தெரிவிக்கப்பட்டது.

சென்னையில் உள்ள மசகு எண்ணெய் கலவை ஆலை இன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இந்த வகை ஆலைகளில் இது உலகிலேயே மிகப் பெரியது என்பது உங்களுக்கு பெருமிதத்தை அளிக்கும். இந்த ஆலை தமிழ்நாடு மற்றும் பிற மாநில தொழிற்சாலைகளின் தேவையை நிறைவேற்றும். இந்த ஆலை காரணமாக மசகு எண்ணெய் இறக்குமதி பெருமளவில் குறையும். இது நாட்டுக்கு மிகப் பெரிய சேமிப்பை வழங்கும்.

இன்று நான், தமிழ்நாட்டில் 370 கி.மீ நீளமுள்ள 89 கிராமப்புற சாலைகளை தொடங்கிவைத்துள்ளேன். இந்த பணிகள் அனைத்தும், பிரதமரின் கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது கிராமப்புறங்களில் சந்தைகள், பள்ளிகள் மற்றும் சுகாதார வசதிகளுக்கான இணைப்பை கணிசமாக மேம்படுத்தும்.

ஆடி திருவாதிரை விழாவில் கலந்து கொள்ள கடந்த ஆண்டு கங்கைகொண்ட சோழபுரத்துக்கு வருகை தந்தது மகிழ்ச்சி நினைவில் உள்ளது. மாமன்னன் ராஜேந்திர சோழன் கட்டிய கங்கை கொண்ட சோழபுரம் ஆலயத்தின் ஆயிரமாவது ஆண்டு தொடக்கத்தை நாம் கொண்டாடினோம். அது யுனெஸ்கோ அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட இடம்.

உலகின் பல பகுதிகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளை அது ஈர்த்து வருகிறது. இன்று நாம் கங்கைகொண்ட சோழபுரம் அருகே பசுமை புறவழிச்சாலைக்கு அடிக்கல் நாட்டியுள்ளோம். இந்த நெடுஞ்சாலை, ஆலயத்துக்கு வெகு அருகில் இருப்பதால் சுற்றுலாப் பயணிகளுக்கும் பக்தர்களுக்கும் பாதுகாப்பானதாக இருக்கும். கோயிலுக்கு வரும் வாகனங்கள் தவிர்த்து மற்ற வாகனங்கள் புறவழிச் சாலையில் திருப்பிவிடப்படும்.

கடந்த வாரம் நான் மதுரை வந்தபோது 8 நவீன மறுவடிவமைக்கப்பட்ட ரயில் நிலையங்களை திறந்து வைத்தேன்.

இன்று பல புதிய ரயில்களின் இயக்கத்துக்கு பச்சைக் கொடி காட்டி உள்ளேன்.

இந்த நிகழ்ச்சியில், மத்திய அமைச்சர் பியூஷ் கோயல், எல். முருகன், மாநில அமைச்சர் தங்கம் தென்னரசு, எதிர்க்கட்சித் தலைவரும், அதிமுக பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ‘காஸ் சிலிண்டர் தடையின்றி கிடைக்கச் செய்வீர்’

## பிரதமருக்கு முதல்வர் கடிதம்



**சென்னை, மார்ச் 12:** வளைகுடா பகுதியில் நடைபெற்று வரும் போரினால் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், தமிழக மக்களுக்கு தடையின்றி காஸ் சிலிண்டர் கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் மோடிக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பாக அவர் எழுதியுள்ள கடிதத்தில், ‘ஈரான் மற்றும் பிற வளைகுடா நாடுகளை உள்ளடக்கிய வளைகுடா பகுதிகளில் தொடரும் போர், இந்தியாவுக்கான எல்பிஜி (திரவ பெட்ரோலிய வாயு) விநியோகத்தை வெகுவாக சீர்குலைத்துள்ளது. ,

விநியோகக் கட்டுப்பாடுகளைக் கருத்தில்கொண்டு, எண்ணெய் நிறுவனங்கள் வீட்டு இணைப்புகளுக்கு முன்னுரிமை அளித்து, தொழில்துறை மற்றும் வணிக நுகர்வோருக்கு எல்பிஜி விநியோகத்தை நிறுத்திவிட்டது. இதனால், ஹோட்டல் துறைக்கு நெருக்கடியை உருவாக்கியுள்ளது. பல உணவகங்கள் மூடப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பெரும்பாலான தொழில் துறை நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகளுக்கு எல்பிஜி.யைப் பயன்படுத்தும் நிலையில், அவற்றின் விநியோகம் திடீரென நிறுத்தப்பட்டிருப்பது தொழில்நிறுவனங்களை கடுமையாகப் பாதிக்கும்.

எனவே, தமிழகத்தில் உள்ள வீடு, வணிக மற்றும் தொழில்துறை நுகர்வோருக்கு தடையற்ற எல்பிஜி விநியோகம் செய்வதை உறுதிசெய்ய சம்பந்தப்பட்ட அமைச்சகம் மற்றும் எண்ணெய் நிறுவனங்களுக்கு உத்தரவிடுமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்’ என்று அவர் கூறியுள்ளார்.

இதனிடையே, மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி, எரிசக்தித் துறை அமைச்சர் மனோகர் லால் கட்டார் ஆகியோருக்கும் முதல்வர் ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில், ‘எரிவாயு தட்டுப்பாடு காரணமாக, ஹோட்டல்கள் மற்றும் பிற நிறுவனங்கள் உட்பட சில தொழில்துறை மற்றும் வணிக நுகர்வோர், எரிவாயு பயன்பாட்டிலிருந்து மின்சாரத்துக்கு மாறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

இத்தகைய மாற்றம் உச்சபட்ச அளவுக்கு மின்சாரத் தேவையை அதிகரிக்கக்கூடும். இதனால் எரிவாயு அடிப்படையிலான மின் உற்பத்தி நிலையங்களின் மின்கட்டமைப்புக்கு சமநிலை ஆதரவை வழங்க வேண்டியது அவசியம்.

எனவே, முந்தைய ஆண்டின் ஒப்பிடத்தக்க காலக்கட்டத்தில் 65 விழுக்காடு அளவிலான எரிவாயு நுகர்வைக் கருத்தில் கொண்டும், மின் உற்பத்தி நிலையங்களுக்கு எரிவாயு ஒதுக்கீட்டைத் தீர்மானிப்பதற்கான வழிமுறையை மறுபரிசீலனை செய்ய வேண்டும்’ என்று அவர் கூறியுள்ளார்.

# மதிமுகவுக்கு 4 தொகுதிகள்!

**சென்னை, மார்ச் 12:** சென்னை அண்ணா அறிவாயலத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது. மதிமுக பொதுச் செயலாளர் வைகோ தனது கட்சி நிர்வாகிகளுடன் வருகைப் புரிந்து ஒப்பந்தத்தை பெற்றுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து அண்ணா அறிவாலயத்திற்கு வெளியே செய்தியாளர்களுடன் வைகோ பேசியதாவது:

”வரும் சட்டப் பேரவைத் தேர்தலில் திமுக கூட்டணியில் எங்கள் கட்சிக்கு 4 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. கட்சியின் பாதுகாப்புக்காக ஒரு தொகுதியில் தனி சின்னத்தில் போட்டியிடுகிறோம். 3 தொகுதிகளில் திமுகவின் உதய சூரியன் சின்னத்தில் மதிமுக வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள்” எனக் குறிப்பிட்டார்.

சட்டப் பேரவைத் தேர்தலையொட்டி கூட்டணி கட்சிகளிடையேயான தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தைகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. பல்வேறு கட்சிகள் கூட்டணிகளுக்கான தொகுதிகளை ஒதுக்கீடு செய்து வருகின்றன.

அந்த வகையில் திமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள மதிமுகவுக்கு 4 சட்டப் பேரவைத் தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. கடந்த தேர்தலில் 6 தொகுதிகளில் போட்டியிட்ட மதிமுக, இந்த தேர்தலில் இரண்டு தொகுதிகள் குறைவாகப் போட்டியிடுகிறது.

திமுக கூட்டணியில் இதற்கு முன்பு காங்கிரஸ் கட்சிக்கு 28 பேரவைத் தொகுதிகளும் ஒரு மாநிலங்களவை இடமும் ஒதுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# ஈரானின் 16 கண்ணிவெடி கப்பல்கள் அழிப்பு

## வீடியோ ஆதாரத்தை வெளியிட்டது அமெரிக்கா

**தெஹ்ரான், மார்ச் 12:** ஈரான் மீது அமெரிக்கா-இஸ்ரேல் இணைந்து தொடுத்துள்ள போர் தீவிரமடைந்து வருகிறது. இன்று 12-வது நாளாக நீடிக்கும் இப்போரில் இருதரப்பும் தாக்குதல்களை தொடர்ந்து வருகின்றன. இதில், ஈரான் ராணுவ உள்கட்டமைப்புகள், போர்க் கப்பல்கள், விமானங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டன. இந்த தாக்குதலில் ஈரானின் 44 போர்க் கப்பல்கள் அழிக்கப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்தது.

மேலும் ஈரான் மீது இஸ்ரேல் இன்று கடுமையான வான்வழித்தாக்குதலை நடத்தியது. இதில் தலைநகர் தெக்ரானில் உள்ள ஒரு வங்கி கட்டிடம் மீது குண்டு வீசப்பட்டது. மேலும், ராணுவ நிலைகளை குறிவைத்து தாக்கினர். அதேபோல் இஸ்பஹான் உள்பட ஈரான் முழுவதும் தாக்குதல்கள் நடந்தன. இஸ்பஹான் நகரில் நடந்த தாக்குதலில் அங்குள்ள ரஷிய துணை தூதரகம் சேதம் அடைந்தது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இஸ்ரேல் மீது ஈரான் தனது பதிலடி தாக்குதல்களை தீவிரப்படுத்தியது.

இன்று அதிகாலை இஸ்ரேலை நோக்கி சரமாரியாக ஏவுகணைகளை ஈரான் வீசியது. இந்த பல அடுக்கு தாக்குதல்களில் கோ ரம்ஷஹர் ஏவுகணைகளை பயன்படுத் தியதாகவும், இஸ்ரேலின் டெல் அவிவின் தெற்கே உள்ள ஹேலா செயற்கைக்கோள் தகவல் தொடர்பு மையத்தையும், பீர் யாகூப், மேற்கு ஜெருச லேம் மற்றும் ஹைபாவில் உள்ள ராணுவ தளங்களையும் 2-வது முறையாக குறிவைத்து தாக்கியதாக ஈரான் தெரிவித்து உள்ளது. அதேபோல் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்களை குறி வைத்து ஈரான் தனது தாக்குதலை தொடர்ந்து வருகிறது. ஈரானில் இருந்து ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நோக்கி ஏவப்பட்ட டிரோன்கள், ஏவுகணைகளை இடைமறித்ததாக அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்தது.

சவுதி அரேபியாவில் உள்ள சுல்தான் விமானதளத்தை நோக்கி ஏவப்பட்ட 6 ஏவுகணைகளையும், நாட்டின் கிழக்கு பகுதியில் ஒரு ஏவுகணையும் இடைமறிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. மேலும், சவுதி அரேபியாவின் ஷைபா எண்ணெய் வயலை நோக்கி வந்த 5 டிரோன்கள் அழிக்கப்பட்டன. குவைத்தில் உள்ள கேம்ப் அரிப்ஜான் அமெரிக்க தளத்தை குறிவைத்து 2 ஏவுகணைகள் வீசப்பட்டன. ஈராக்கின் பாக்தாத் அருகே அமெரிக்க தூதர்கள் தங்கியிருந்த ஒரு தளத்தை ஈரான் டிரோன் தாக்கியது.

இதற்கிடையில் உலகின் கச்சா எண்ணெய் விநியோகத்தில் 20 சதவீதம் நடைபெறும் ஹோர்முஸ் ஜலசந்தி கடல் பகுதியில் ஈரான் கண்ணிவெடிகளை வைத்திருந்ததால் அதை உடனடியாக அகற்றவேண்டும் என்றும் தவறினால் முன்பு கண்டிராத அளவில் தாக்குதல் நடத்தப்படும் என்றும் அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரித்திருந்த நிலையில் 16 கண்ணிவெடி படகுகள் அழிக்கப்பட்டுள்ளன. ஹோர்முஸ் ஜலசந்தி அருகே 16 கண்ணிவெடி பதிக்கும் கப்பல்கள் உள்பட பல ஈரான் கடற்படை கப்பல்களை தாக்கி அழித்து உள்ளதாக அமெரிக்க ராணுவ மத்திய கட்டளை பிரிவு அறிவித்து உள்ளது. மேலும், கப்பல்கள் தாக்கி அழிக்கப்படும் வீடியோ காட்சிகளையும் வெளியிட்டது.


ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
➢ Public Notice | ➢ Loss of Share
➢ Legal Notice | ➢ Merger
➢ Tender Notice | ➢ Acquisition
➢ Society Notice | ➢ AFR, UFR, etc.
for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர்
9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com


# 2வது நாளாக வணிக சிலிண்டர்கள் தட்டுப்பாடு: ஓட்டல் உரிமையாளர்கள் திணறல்

**சென்னை, மார்ச் 12:** சென்னையில் 2வது நாளாக தொடரும் வணிக சிலிண்டர்கள் தட்டுப்பாடு காரணமாக ஓட்டல் உரிமையாளர்கள் பெரும் சிரமத்தை சந்தித்து வருகின்றனர்.

சில ஓட்டல்கள் மூடப்படும் நிலையில், சில டீக் கடைகளில் மின்சார அடுப்புகள் பயன்படுத்தப்பட்டும், சில ஓட்டல்களில் விறகு அடுப்புகள் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேல் ஈரான் போர் பதட்டம் காரணமாக நாடு முழுவதும் வணிகப் பயன்பாட்டிற்கான சிலிண்டர்கள் விநியோகம் செய்வதை பெட்ரோலிய நிறுவனங்கள் நிறுத்தியுள்ளன. ஓட்டல்களுக்கு வழங்கப் படும் வணிக சிலிண்டர்கள் நேற்று முதல் நிறுத்தப்பட்டதால் பல சிரமங்களுக்கு ஓட்டல் உரிமையாளர்கள் தள்ளப் பட்டுள்ளனர்.

இதுதவிர ஆட்டோ டிரைவர்களும் பாதிக்கப்பட்டு உள்ளனர். கியாசில் ஓடக்கூடிய ஆட்டோக்கள் கியாஸ் தட்டுப்பாடு காரணமாக நேற்று முதல் ஓடவில்லை. இன்று 2-வது நாளாக பிரச்சினை அதிகரித்தது. எல்.பி.ஜி. கியாஸ் மூலம் ஓடக்கூடிய 30 ஆயிரம் ஆட்டோக்கள் சென்னையில் உள்ளன. இந்த ஆட்டோக்கள் ஓட்ட முடியாமல் முடங்கியுள்ளன. கியாஸ் நிரப்பக்கூடிய பங்குகளில் கியாஸ் இல்லாததால் வேறு வழியில்லாமல் ஆட்டோக்களை ஆங்காங்கே நிறுத்திவிட்டனர். எல்.பி.ஜி. கியாஸ் ஓடக்கூடிய ஆட்டோக்கள் சென்னையில் ஓடாததால் பள்ளி மாணவர்கள், பொது மக்கள் பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் வணிகப் பயன்பாட்டிற்கான சிலிண்டர்கள் விநியோகம் 2வது நாளாக தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் சென்னையில் 15 சதவீத ஓட்டல்கள் மூடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக ஓட்டல் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். ஒரு சில ஓட்டல்களில் உணவு பொருட்கள் குறைக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட வகை உணவு பொருட்கள் மட்டும் தயாரிக்கப்பட்டு வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படு கின்றன. சென்னையில் உள்ள ஒரு சில டீக்கடைகள் மற்றும் சிறிய ஓட்டல்களில் மின்சார அடுப்புகள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் மின்சார அடுப்புகளுக்கும் தட்டுப்பாடுகள் ஏற்படத் தொடங்கிவிட்டன. இதுதவிர ஒருசில சிறிய ஓட்டல்களில் விறகு அடுப்புகள் பயன்படுத்த தொடங்கிவிட்டனர்.




## திருக்குறள் குறள்-556

**மன்னார்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல்
மன்னாவாம் மன்னர்க் கொளி**



அரசர்க்கு புகழ் நிலைபெறக் காரணம் செங்கோல் முறையாகும், அஃது இல்லையானால் அரசர்க்கு புகழ் நிலைபெறாமல் போகும்.

## சிந்திக்க ஒரு நொடி



தன்னைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாத எந்த மனிதனும்..

உயர்ந்ததாக சரித்திரம் இல்லை

**ஆர்.சுந்தரராஜன்**
சிதம்பரம்-608001.

## மாசி மாதம் தேய்பிறை அஷ்டமி வழிபாடு





**திருவண்ணாமலை, மார்ச் 12:**
திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் ஆலயத்தில் பிரம்ம தீர்த்தம் குளத்தருகில் அமைந்திருக்கும் ஸ்ரீ காலபைரவருக்கு மாசி மாதம் தேய்பிறை அஷ்டமியை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள், அலங்காரங்கள், தீபங்கள் ஏற்றி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் வேண்டுதல் வைத்து தீபங்கள் ஏற்றி ஸ்ரீ காலபைரவரை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## திருவிடைமருதூர் நூலக வாசகர் வட்டத்தின் முப்பெரும் விழா



தஞ்சைத் தமிழ்மன்றம், கும்பேசுவரர் அரிமா சங்கம், தி.ம. தூர் கிளை நூலக வாசகர் வட்டம், இணைந்து நடத்திய மகளிர் தின விழா, நூலாய்வு, கவியரங்கம், மற்றும் கருத்தரங்கம் ஆகிய "முப்பெரும் விழா" தவத்திரு திருவடிக் குடில் சுவாமிகள் முன்னிலையில்திரு.ராஜா வரவேற்புரை யுடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது. செய்தி: குடந்தை பரிபூரணன்.

## இறுதி அஞ்சலி




வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் வட்ட தலைவர் திரு.மாலக்கொண்டையா அவர்களின் மறைவையொட்டி நேற்று 11/03/2026, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு.கு.செல்வப்பெருந்தகை MLA அவர்களும், மாநில பொருளாளர் திரு.ரூபி மனோகரன் MLA, மாநிலத் துணைத் தலைவர் திருமதி.இமயா கக்கன், வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் மதாரம்மா கனி பாரூக், வடசென்னை மேற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் *திரு.ஜெ.டில்லிபாபு MC, M. மோகன் குமார் உட்பட மாவட்டத்திற்கு உட்பட்ட முக்கிய நிர்வாகிகள், சர்க்கிள் தலைவர்கள், வட்டத் தலைவர்கள் மற்றும் காங்கிரஸ் பேரியக்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

## "மகளிர் தின விழா"



ராகவி சினி ஆர்ட்ஸ் சார்பிலும், நீலாவதி டிரஸ்ட் சார்பிலும் மகளிர் தின விழா மிக மிக கோலாகலமாக கொண்டாடப்பட்டது. திரைப்பட இயக்குனரும், நடிகரும், தென்னிந்திய நடிகர் சங்க உறுப்பினரும், சமூக சேவகருமான சேவா ரத்னா டாக்டர் ஜெ.விக்டர் தலைமையிலும், நடிகர் மீசை மனோகரன், நடிகர் அப்பா பாலாஜி, எழுத்தாளர் விவேக் ராஜ் ஆகியோர் முன்னிலையிலும் காவல் அதிகாரிகள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், தொழிலதிபர்கள், கல்லூரி மாணவிகள் குழந்தைகள் அனைவருக்கும் மேக்கப் ஆர்டிஸ்ட்ம், நடிகையுமான அங்கிதா, குழந்தை நட்சத்திரம் லியானா இணைந்து விருதுகள் வழங்கினார்கள். அனைவருக்கும் இனிப்புகள், தேநீர் வழங்கப்பட்டது.

## அரசு கல்லூரி நூலகத்திற்கு நூல்கள் அன்பளிப்பு



**அறந்தாங்கி, மார்ச் 12:**
அறந்தாங்கி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நூலகத்திற்கு, பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள நூல்களை அன்பளிப்பாக வழங்கும் நிகழ்வு, கல்லூரி முதல்வர் (பொ) மற்றும் கல்லூரிக் கணினி அறிவியல் துறைத்தலைவர் முனைவர் து.சண்முகசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

ஒன்றிய அரசு மூலம் கடந்த 2025 ஆம் ஆண்டில் தனக்கு வழங்கப்பெற்ற பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள 61 நூல்களையும், ஆவணத்தாங்கோட்டை மேற்கு ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பட்டதாரி ஆசிரியராகப்பணியாற்றும் ஸ்ரீபாஸ்கரன் என்பவர், கல்லூரி முதல்வர் (பொ) மற்றும் கல்லூரிக் கணினி அறிவியல் துறைத்தலைவருமான முனைவர் து.சண்முகசுந்தரம் அவர்களிடம் வழங்கினார். இந்நிகழ்வில் அறந்தாங்கி வட்டாரக் கல்வி அலுவலர் பெ.துரையரசன், மற்றும் ஆவணத்தாங்கோட்டை மேற்கு நடுநிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் க. மேகலா (பொ),கல்லூரி ஆங்கிலத்துறை விரிவுரையாளர் முனைவர் ரா.அபிராமி, கண்காகாணிப்பாளர் பா.மகாராஜன் ஆகியோர் உடன் இருந்தனர்.

## வனத்துறையின் இயற்கை விழிப்புணர்வு முகாம்



தமிழ்நாடு வனத்துறை, வன உயிரினச் சரகம், மண்டபம் நடத்திய இயற்கை விழிப்புணர்வு முகாமில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, சின்னப்பாலம் மாணவர்கள் மண்டபம் வட்டாரக் கல்வி அலுவலர் இராமநாதன் தலைமையில் கலந்து கொண்டனர்.

வனவர் சாமிநாதன் வரவேற்றுப் பேசியதுடன், இயற்கைவிழிப்புணர்வு முகாமின் நோக்கம் குறித்து விளக்கிப் பேசினார்.

அவரது மேற்பார்வையில், வனக்காப்பாளர் மணிகண்டன் மற்றும் குருசடைத் தீவு வனத்துறை பணியாளர்கள் குருசடைத் தீவிற்கு அழைத்து சென்று வழிநடத்தினர்.

மியூசியம், நூலகம், தங்கும் விடுதி, ஆய்வுக் கூடம், பற்பசை தயாரிக்க உதவும் மிஸ்வாக் மரம், வருடத்திற்கு ஒரு முறை பூக்கும் சிலோனிக்கா, சிறுநீர் கல் கரைக்கும் தண்ணீர் விட்டான் கிழங்கு (அஸ்பெரகஸ்), ஹேர் டைக்கு உதவும் இன்டிகோ பெரஸ் டிங்டோரியா, மூட்டு வலிக்கு உதவும் கஸ்குட்டா கொடி, கருத்து விளக்க மையம் போன்றவற்றை பார்வையிட்டனர்.

மாணவர்களுக்கு பள்ளியிலிருந்து குந்துகால் வரை வாகன போக்குவரத்து, படகு பயணம், உணவு போன்றவற்றை வனத்துறையினர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

நிறைவாக, ஆசிரியர் ஜெ.ஜே. லியோன் நன்றி கூறினார்

இயற்கை விழிப்புணர்வு முகாமில் பள்ளி தலைமை யாசிரியர் செல்லம்மாள், ஆசிரியர்கள் நிஷா, மிக்கேல் ராணி, ஞான சௌந்தரி, சந்திரமதி, லாரன்ஸ் எமல்டா, நான்சி மற்றும் 46 மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

## வாராந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம்



திருப்பத்தூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் வாராந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் V.சியாமளா தேவி., தலைமையில் நடைபெற்றது. இக்குறைதீர்வு கூட்டத்தில் பொது மக்களிடம் மொத்தமாக 42 மனுக்கள் பெறப்பட்டன. மனுக்களை விசா ரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப் படும் என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

## செய்யாறு சட்டமன்றத் தொகுதியில் வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலை சரிபார்த்தல்





**திருவண்ணாமலை, மார்ச் 12:**
திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு சட்டமன்ற தொகுதியில் வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலை அஇஅதிமுக சார்பில், எம்ஜிஆர் மன்ற மாநில துணைச் செயலாளரும் செய்யாறு நகர பூத் கமிட்டி பொறுப்பாளருமான ,வழக்கறிஞர் ஜாகீர் உசேன் அவர்கள் வீடு வீடாக நேரில் சென்று வாக்காளர் பட்டியலை சரிபார்த்தல் பணியில் ஈடுபட்டார்.

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியான பிறகு, 18 வயது நிரம்பியவர் வாக்காளராக புதிதாக சேர்த்தல், இறந்தவர்கள் மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் வாக்காளராக உள்ளவர்கள், பற்றிய ஆய்வு அஇஅதிமுக சார்பில் மேற்கொள்ளப்பட்டது. செய்யாறு நகர செயலாளர் வெங்கடேசன் தலைமையில், அவைத்தலைவர் ஜனார்த்தனன், தணிகாசலம், திருச்சிற்றம்பலம், சுரேஷ்குமார், இளையராஜா,ராஜி, குணா, சக்திவேல் மற்றும் பூத்கமிட்டி பொறுப்பாளர்கள் உட்பட அனைத்து நிர்வாகிகளும் உடன் இருந்தார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## புதுப்பாளையம் புதியதாக கட்டப்பட்ட ரூபாய் 5.57 கோடி மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய கட்டிடம் திறப்பு விழா





**திருவண்ணாமலை, மார்ச் 12:**
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக திருவண்ணாமலை மாவட்டம் மார்ச் 11 புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடம் புதியதாக கட்டப்பட்ட ரூபாய் 5.57 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடத்தை காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ. வ. வேலு அவர்களின் வழிகாட்டுதலின்படி மாண்புமிகு துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி, ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ. சு. தி. சரவணன் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா. இராம்பிரதீபன் அவர்கள், மாவட்ட திட்ட இயக்குனர் திரு. இரா.மணி அவர்கள், உதவி இயக்குனர் திரு மணிவாசகம் அவர்கள் உள்ளிட்ட அரசு அதிகாரிகள், புதுப்பாளையம் ஒன்றிய கழகச் செயலாளர் திரு. சுந்தரபாண்டியன் அவர்கள்,திரு.ஆறுமுகம் அவர்கள், பொதுக்குழு உறுப்பினர் திரு. இளங்கோவன் அவர்கள், மாவட்ட ஆதிதிராவிடர் அணி தலைவர் திரு. மனோகரன் அவர்கள் உள்ளிட்ட கழக தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## 25 ஆண்டுகளாக கட்சிப் பணி ஆற்றிய வந்த அ.லோகுவிற்கு நகர செயலாளர் பதவி வழங்கிய வி.சி.க., தலைவர் திருமாவளவன் !



**செய்யாறு, மார்ச் 12:**
செய்யாறு நகரில் விடுதலை சிறுத்தைகள் கட்சியில் 25 ஆண்டுகளாக பணியாற்றி வந்த அ.லோகுவிற்கு செய்யாறு நகர செயலாளர் பதவியை கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் வழங்கி உத்தரவு பிறப்பித்துள்ளார். திருவண்ணாமலை வடக்கு மாவட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி செயல்பட்டு வருகிறது.

இங்கு மண்டல செயலாளராக செ.நன்மாறன், மாவட்ட செயலாளராக ஆ.மதியழகன் ஆகியோர் பொறுப்பில் இருந்து வருகின்றனர். இவர்கள் இடும் கட்சிப் பணிகளை அ.லோகு சிறப்பாக செய்து முடிக்க கூடியவர். இதுதவிர கட்சி தலைமை அறிவிக்கும் ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம், கூட்டணி கட்சிகளின் ஆலோசனை கூட்டங்களில் அ.லோகு முதல் நபராக முன்வந்து கலந்து கொண்டு தொண்டர்களை ஒருங்கிணைத்து நடத்தக்கூடிய வராக இருந்து வருகிறார்.

இதுதவிர செய்யாறு சட்டசபை தொகுதிக்கு உட்பட்ட இரு ஊர்களுக்கிடையே கோயில் - பொதுவழிப் பிரச்சனை ஏற்படும் சமயங்களில், காவல் துறை மற்றும் வருவாய் துறை அதிகாரிகள் மூலம் 'சமாதான பேச்சுவார்த்தை' நடக்கும்போது வி.சி.க., சார்பில் அ.லோகுவுக்கு மேற்கண்ட அதிகாரிகள் அழைப்பு விடுத்து, இவரால் பேச்சுவார்த்தையை முடிவுக்கு கொண்டு வருவார்கள்.

இதனால், அ.லோகுவுக்கு கட்சி, அரசு அதிகாரிகள் மற்றும் பொது மக்களிடமும் நற்பெயரை பெற்று விளங்குகிறார். தேர்தல் சமயங்களில் கூட்டணி'தர்மத்தை கடைப்பிடித்து' தேர்தல் பணிகளை சிறப்பாகச் செய்து கணிசமான ஓட்டுக்களை வாங்கிக் கொடுப்பவராக திகழ்ந்து வருகிறார். வி.சி.க.,வில் செய்யாறு நகர இணை செயலாளராக பொறுப்பு வகித்து வந்த அ.லோகுவுக்கு இக்கட்சியின் தலைவர் திருமாவளவன், செய்யாறு நகர செயலாளராக பதவி உயர்வை கொடுத்து அழகு பார்த்துள்ளார்.

கட்சியில் உழைப்பை கொடுத்து, நேர்மையாக பணியாற்றி வருபவர்களுக்கு 'உயர் பதவிகள்' தானாகவே வந்து சேரும் என்பதற்கு வி.சி.க.,வின் அ.லோகு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறார் என்பதுதான் உண்மை. பதவி உயர்வு பெற்ற அ.லோகு, கட்சி தலைமைக்கும், மண்டல செயலாளர் செ.நன்மாறன், மாவட்ட செயலாளர் ஆ.மதியழகன் ஆகியோருக்கு தனது நன்றியை தெரிவித்துள்ளார்.

# 2026 தேர்தல் கொண்டாட்டம்



## இவர்கள் கூறுவதென்ன?

### அதிமுக தனித்து தான் ஆட்சி அமைக்கும்: நயினார் நாகேந்திரன் உறுதி



"அதிமுக தனித்துத் தான் ஆட்சி அமைக்கும். எனவே, அதுபற்றி திமுக கவலைப்பட வேண்டாம்" என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று அவர் திருச்சியில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: பிரதமர் மோடி தலைமையில் திருச்சி பஞ்சப்பூரில் அரசு விழா மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணியின் பொதுக்கூட்டம் புதன் கிழமை நடைபெற உள்ளது. இதில், அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கலந்து கொள்கின்றனர். திருச்சியில் நடக்கும் விழா தமிழ்நாட்டின் ஆட்சி மாற்றத்துக்கான விழாவாக இருக்கும். இதில் 7 லட்சம் பேர் பங்கேற்பார்கள். கூட்டணிக் கட்சித் தலைவர்களுடன் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையை விரைவில் தொடங்குவோம்.

மீண்டும் திமுக வெல்லும் என முதல்வர் கூறுகிறார். யார் வெற்றி பெறுவார்கள் என்பதை தீர்மானிக்கப் போவது தமிழக மக்கள் தான். 200 இடங்களுக்கு மேல் நாங்கள் உறுதியாக வெற்றி பெறுவோம். திமுக அரசு வாக்கு வங்கி அரசியலை மட்டும் தான் செய்கிறது. மத்திய அரசு, தமிழகத்தில் 47 லட்சம் விவசாயிகளுக்கு ஆண்டுக்கு தலா ரூ.6 ஆயிரம் வழங்கியது. இப்போது 26 லட்சம் விவசாயிகள் தான் கணக்கில் உள்ளனர். மத்திய அரசின் நிதி மக்களுக்கு நேரடியாகச் சென்றால், அவர்கள் மத்திய அரசுக்கு ஆதரவாக இருப்பார்கள் என்ற எண்ணத்தில் திமுக அரசு, விவசாயிகளின் எண்ணிக்கையை குறைத்து விட்டது. பிரதமரின் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்தில் ரூ.15,704 கோடியில் 6 லட்சம் வீடுகள் தமிழகத்துக்கு ஒதுக்கப்பட்டதில் 3 லட்சம் வீடுகளை முதல்வர் இன்னும் கட்டித்தரவில்லை. திமுக ஆட்சி அமைந்ததும் ஆயிரம் தடுப்பணைகள் கட்டுவோம் என்றனர். ஆனால், இதுவரை கட்டவில்லை. அதிமுக தனித்துத் தான் ஆட்சி அமைக்கும். எனவே, அதுபற்றி திமுக கவலைப்பட வேண்டாம். எங்கள் கூட்டணியில் புதிய கட்சிகள் வரலாம். விஜய் எங்கள் கூட்டணிக்கு வருவது குறித்து கருத்துக் கூற முடியாது என்று கூறினார்.

### கைக்கூலிகள் ராமதாஸை இந்த நிலைக்கு கொண்டு வந்துவிட்டார்கள்" - அன்புமணி வேதனை

தமிழகத்தில் சமூக நீதிக்காகவும், மது ஒழிப்பிற்காகவும், கல்விக்காகவும், நீர் மேலாண்மைக்காகவும் பல்வேறு போராட்டங்களை நடத்தி பல சாதனைகளை படைத்த கட்சி பாமக. ஆனால், நமக்கு உரிய அங்கீகாரம் இன்னும் கிடைக்கவில்லை என்ற வருத்தம் உள்ளது.

கடந்த 6 மாதமாக எனக்கு என்ன நடக்கிறது என்று நீங்கள் பார்த்துக் கொண்டு இருக்கிறீர்கள். அவற்றையெல்லாம் நாம் கடந்து வந்து கொண்டிருக்கிறோம். ராமதாஸ் 10 வயது குழந்தை போல ஆகிவிட்டார். அவரது சூழ்நிலையை பயன்படுத்திக் கொண்டு, அவரைச் சூழ்ந்து நிற்கும் சில துரோகிகள், திமுக கைக்கூலிகள் ராமதாஸ் மனதை கெடுத்து, இந்த நிலைக்கு கொண்டு வந்து விட்டார்கள்.

ராமதாஸ் தான் நமக்கெல்லாம், குலதெய்வம். அதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. நாம் சமூகத்துக்கு பாடுபட வேண்டிய நிறைய விஷயங்கள் இருக்கிறது. அதை நோக்கிச் செயல்படுவோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### "தமிழகம் காவிமயமாக துணை நின்றவர் கருணாநிதி" - ஃப்ளாஷ் பேக் பேசும் நாராயணன்



1999-லேயே அவரது தந்தை கருணாநிதி தான், காவிமயமாக தமிழகம் வர வேண்டும் என்று விரும்பினார். அதற்குத் துணையும் நின்றார். கருப்பு சிவப்பு இருக்கும் வரை காவி உறுதியாக இருக்கும். அதேபோல், ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது ஒரு நோய். அந்த நோயை பாஜக பரப்புகிறது என முதல்வர் சொல்லியிருக்கிறார். அப்படியானால், முதல்வர் ஸ்டாலினின் தந்தை இந்த நோயை பரப்பினாரா... நோய் பரப்புவதில் வல்லுநராக இருந்தாரா கருணாநிதி?

ஒரே நாடு ஒரே தேர்தல் குறித்து சட்டப்பேரவையில் கருணாநிதி தெளிவாகப் பேசியிருக்கிறார். அப்படியென்றால், கருணாநிதியை மீறி முதல்வர் ஸ்டாலின் செயல்படுகிறாரா? அப்படி செயல்படுவதற்கு இப்போது என்ன தேவை என்பது புரியவில்லை.

## இறுதிக் கட்டத்தில் திமுக தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை

திமுக தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில் கம்யூனிஸ்ட், கொமதேக உள்ளிட்ட கூட்டணி கட்சிகளுடன் இன்று ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

ஆளும் கட்சியான திமுக கூட்டணியில் காங்கிரஸ், மதிமுக, விசிக, கம்யூனிஸ்ட் கட்சிகள், தேமுதிக, மக்கள் நீதி மய்யம் உள்ளிட்ட 26 கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. திமுக சார்பில் கூட்டணி கட்சிகளுக்கான தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை கடந்த பிப்ரவரி 22-ம் தேதி தொடங்கி நடத்தப்பட்டு வருகிறது. இதில் காங்கிரசுக்கு 28, முஸ்லீம் லீக், மமக-க்கு தலா 2 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதர கட்சிகளுடன் திமுக பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

இந்நிலையில், திமுக-மார்க்சிஸ்ட் இடையேயான 2-ம்கட்ட தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை சென்னை அறிவாலயத்தில் நேற்று நடைபெற்றது. திமுகவில் பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையிலான குழுவும், மார்க்சிஸ்ட் கட்சியில் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.



அப்போது, மார்க்சிஸ்ட் 8 தொகுதிகளை கேட்டதாகவும், அதற்கு 6 தொகுதிகள் வரை ஒதுக்க திமுக ஒப்பு கொண்டதாகவும் கூறப்படுகிறது. இதில் உடன்பாடு எட்டப்படாததால் பேச்சுவார்த்தை மீண்டும் இன்று (மார்ச் 11) தொடர்கிறது.

இதுதொடர்பாக மார்க்சிஸ்ட் மாநிலச் செயலாளர் சண்முகம் நிருபர்களிடம் கூறும்போது, "இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் திமுக கூறிய எண்ணிக்கையில் உடன்பாடு இல்லை.

கடந்த முறை கொடுக்கப்பட்ட எண்ணிக்கையைவிட கூடுதலாக தொகுதிகள் ஒதுக்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளோம். திமுக தலைவருடன் கலந்தாலோசித்த பின்னர் இன்று பேச்சுவார்த்தைக்கு மீண்டும் அழைப்பதாக தெரிவித்துள்ளனர்" என்றார்.

இந்திய கம்யூனிஸ்ட்: இதற்கிடையே இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் தலைமையில், கட்சியின் நிர்வாகக் குழு கூட்டம் தி.நகரில் நேற்று நடைபெற்றது. இதில் திமுகவுடனான தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையில் என்ன முடிவு செய்யப்பட்டுள்ளது, மக்களிடம் நிதி வசூல் பெறுவது உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டன.

கடந்த தேர்தலில் போட்டியிட்ட 6 இடங்களில் ஒன்றை குறைத்து தருவதாக திமுக தெரிவித்த நிலையில், அதற்கு மறுப்பு தெரிவித்து இந்திய கம்யூ. 7 இடங்களை கேட்டுள்ளது. அதன்படி 2 கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் கடந்த தேர்தலை போல் தலா 6 இடங்களுக்கு பேசி முடிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

## ஐஜேகே கட்சிக்கு 'மைக்' சின்னம் ஒதுக்கீடு

தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள ஐஜேகே கட்சிக்கு 'மைக்' சின்னத்தை ஒதுக்கியுள்ளதாக இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. முன்னதாக கடந்த 2024 நாடாளுமன்ற தேர்தலில் 'மைக்' சின்னம் நாம் தமிழர் கட்சிக்கு ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது ஐஜேகேவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. நாம் தமிழர் கட்சி 36 லட்சம் வாக்குகளை பெற்று அங்கீகாரம் பெற்ற கட்சியானது 'மைக்' சின்னத்தில் போட்டியிட்டு தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பாக ஐஜேகே தலைவர் ரவிபச்சமுத்து வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் நடைபெறவுள்ள 2026 சட்டப்பேரவை தேர்தலில், ஐஜேகே தனி சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்பதற்காக தேர்தல் ஆணையத்திடம் கோரியிருந்தோம். அதன்படி தேர்தல் ஆணையம் ஐஜேகேவுக்கு 'மைக்' சின்னத்தை ஒதுக்கியுள்ளது.

தமிழகத்தில் தற்போது நிலவிவரும் லஞ்சம், ஊழல், போதை கலாசாரத்தை முற்றிலும் ஒழிக்கவும், அநீதிக்கு எதிராக குரல் கொடுக்கவும், தமிழக மக்களுக்காக ஐஜேகே எப்போதும் துணை நிற்கும் என்பதை உரக்க சொல்வதற்காக கிடைத்திருக்கிறது இந்த மைக் சின்னம்.

தமிழகத்தின் 234 தொகுதிகளிலும் உள்ள கட்சியின் மாவட்ட பொறுப்பாளர்கள் அனைவரும் மைக் சின்னத்தை மக்களின் மனதில் பதியவைக்க வேண்டும். 2026 தேர்தலில் வெற்றிபெற்று, தலைசிறந்த மாநிலம் தமிழகம் என்ற குரலை உலகெங்கும் ஒலிக்க வைக்க வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## விருப்ப மனு அளித்த 60 பேரிடம் விஜய் நேர்காணல்



பாஜக தலைமையிலான தேஜ கூட்டணிக்கு தவெகவை இழுக்கும் முயற்சி தீவிரமாக நடந்து வருவதாக தகவல்கள் வெளியாகியிருக்கும் சூழலில், 60 பேருடன் தவெக தலைவர் விஜய் திடீரென கலந்துரையாடல் நடத்தியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் களம் தற்போதே சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. பல மாதங்களாக காங்கிரஸ் தங்களது கூட்டணிக்கு வரும் என எதிர்பார்த்து காத்திருந்த தமிழக வெற்றிக் கழகத்திற்கு இறுதியில் ஏமாற்றமே மிஞ்சியது. இதனால் அப்செட் மனநிலையில் இருக்கும் விஜய்யை, தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குள் இழுக்கும் முயற்சிகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

இப்படியான பரபரப்பான சூழலில்தான், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவித்த நிர்வாகிகளுடன் விஜய் நேற்று நேரடியாகக் கலந்துரையாடினார். சென்னை கிழக்கு கடற்கரை சாலை, பனையூரில் உள்ள தமிழக வெற்றிக் கழக அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. முதற்கட்டமாக நேற்று 60 நிர்வாகிகள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர். முதலில் தி.நகர் தொகுதியில் போட்டியிட விருப்பம் தெரிவித்திருந்த கட்சியின் பொதுச்செயலாளர் ஆனந்திடம் விஜய் நேர்காணல் நடத்தினார். அவரைத் தொடர்ந்து மற்றவர்களிடமும் வரிசையாகப் பேசினார்.

அப்போது விஜய், "மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்பது தான் நமது நோக்கமாக இருக்க வேண்டும். இந்தப் பாதையில் நமக்கு நிறைய தடைகள், சவால்கள் வரலாம். அதையெல்லாம் முன்கூட்டியே தெரிந்துதான் நான் களத்திற்கு வந்திருக்கிறேன். நிச்சயம் நாம் வெற்றி பெற்று, மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற நமது கொள்கையில் வெல்வோம்!" என உற்சாகப்படுத்தியதாக கூறப்படுகிறது.

நேர்காணல் முடிந்ததும் அவர்கள் ஒவ்வொருவருடனும் கை குலுக்கி வழியனுப்பி வைத்தார். வெளியே வந்தவர்களுக்கு, அவர்கள் போட்டியிட விரும்பிய தொகுதியின் பெயருடன் கூடிய பிரத்யேக 'பை' ஒன்று வழங்கப்பட்டது.

## "விஜய் கட்சியுடன் பேச்சுவார்த்தையா? டீயும் காபியும் ஒன்றாக கலக்காது" - அண்ணாமலை

விஜய் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறதா என்ற கேள்விக்கு டீயும் காபியும் ஒன்றாக கலக்காது என அண்ணாமலை பதில் அளித்துள்ளார்.

சென்னை சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் ஆர்.எஸ்.பாரதிக்கு எதிரான அவதூறு வழக்கில் சாட்சியம் அளித்த பின், செய்தியாளர்களைச் சந்தித்த பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை கூறியதாவது: கள்ளக்குறிச்சி விஷ சாராய விவகாரத்தில் பாஜகவுக்கும், எனக்கும் தொடர்பிருப்பதாக அவதூறு பரப்பிய ஆர்.எஸ். பாரதி மீது தொடரப்பட்ட வழக்கில் சாட்சியம் அளித்துள்ளேன்.

மன்னிப்பு கேட்காததாலும், ஒரு கோடி ரூபாய் நஷ்டஈடு வழங்காததாலும் இந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த முறை நீதிமன்ற விசாரணையின் போது, என் மீது அபாண்டமான குற்றச்சாட்டுகளை முன்வைத்த திமுக எம்.பி டி.ஆர்.பாலு மீது இன்று புதிய அவதூறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதற்கான



சாட்சியம் ஏப்ரல் 7-ம் தேதி அளிக்கப்படும். யார் மீதும் அவதூறு வழக்கு தொடரக்கூடாது என்ற கொள்கையில் இருந்தவன் நான். ஆனால், திமுகவின் எல்லையற்ற வன்மப் பேச்சுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவே, என் வாழ்நாளில் முதல்முறையாக இந்த சட்டப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளேன். முதல்வரின் கண்ணீர் அவரது கட்சிக்காக இருக்க வேண்டுமே தவிர, அதிமுகவுக்காக அல்ல. ஐந்து ஆண்டு கால ஆட்சியில் சொல்லிக்கொள்ளும் படி எந்த சாதனையும் இல்லாததால், மக்களைத் திசைதிருப்ப முதல்வர் 'நீலிக்கண்ணீர்' வடிக்கிறார்.

"பாஜக அதிமுகவை விழுங்கிவிடும்" என முதல்வர் ஸ்டாலின் சொல்கிறார். "1999 முதல் 2003 வரை திமுகவுடன் பாஜக கூட்டணியில் இருந்தபோது திமுக விழுங்கப்பட்டதா? அல்லது தற்போது கூட்டணியில் உள்ள காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளை திமுக விழுங்கிவிடுமா?" மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் கூறியது போல, விஜய் கட்சியுடன் அதிகாரப்பூர்வப் பேச்சுவார்த்தை எதுவுமில்லை. என்னை பொறுத்தவரை "டீயும் காபியும் ஒன்றாகக் கலக்காது". ஏனென்றால், சித்தாந்தங்கள் வேறானவை. தற்போதுள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணி வலிமையாக உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## அங்கீகாரம் பெற முயற்சிக்கும் மதிமுக: ஆசைக்கு அணைபோடும்....

தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் விரைவில் நடைபெற உள்ள நிலையில், அரசியல் கட்சிகள் கூட்டணி கணக்குகள், தொகுதி பங்கீடு என பரபரப்பாக இயங்கி வருகின்றன. இந்நிலையில் திமுக கூட்டணியில் நீண்ட காலமாக அங்கம் வகிக்கும் கட்சிகள் கூடுதல் சீட்களை பெறலாம் என எண்ணினர்.

ஆனால் திமுக கூட்டணியில் புதிதாக கட்சிகள் இணைந்ததால் கடந்த முறை போட்டியிட்டதை விட தொகுதிகளும் குறையலாம் என கூறப்பட்டதால் கூட்டணி கட்சியினர் கலக்கம் அடைந்தனர். கடந்த 2021-ம் சட்டப்பேரவை தேர்தலில் மதிமுக 6 தொகுதிகளில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு 4 தொகுதிகளில் வென்றது. இந்நிலையில் 2024 நாடாளுமன்ற தேர்தலில் திருச்சி தொகுதியில் துரை வைகோ தனி சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

இந்நிலையில் இந்த சட்டப்பேரவை தேர்தலில் கட்சிக்கான அங்கீகாரத்தை மீண்டும் பெற வேண்டும் என மதிமுக முயற்சிக்கிறது. இதனிடையே திமுக தொகுதிப்பங்கீட்டு குழுவினர் உடன் நடந்த பேச்சுவார்த்தையில், மதிமுக குழுவினர் 12 தொகுதிகளில் தனி சின்னத்தில் போட்டியிடுவோம் என்று கூறியிருந்தனர். ஆனால் திமுக குழுவினர் 5 தொகுதிகளில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட வலியுறுத்தியதாக கூறப்படுகிறது.



குறைந்தபட்சம் 7 தொகுதிகளில் வெற்றிபெற்று மாநில கட்சி அங்கீகாரத்தை பெற வேண்டும் என மதிமுக ஆசைப்படும் நிலையில் கடந்த தேர்தலை விட குறைவான தொகுதிகள் ஒதுக்கப்படுவதால் துரை வைகோ அப்செட்டில் உள்ளார் என்று கூறப்படுகிறது.

இது குறித்து மதிமுக மூத்த நிர்வாகிகள் கூறுகையில் "உதயசூரியன் சின்னத்தில்தான் போட்டியிட வேண்டும் என வைகோவிடம் முதல்வரே நேரடியாக கோரியிருக்கிறார். முதல்வரே நேரடியாக பேசுவதால் ஒப்புக்கொள்ளலாமா என வைகோ யோசிக்கிறார். ஆனால், இதில் துரை வைகோவுக்கு துளியும் விருப்பமில்லை. திமுகவின் இந்த கோரிக்கையை நாம் ஏற்க கூடாது என அவர் வலியுறுத்தி வருகிறார்." என்றனர்.

அவசர உயர் நிலைக் குழுக் கூட்டம்: இந்நிலையில், மதிமுக அவசர உயர் நிலைக் குழுக் கூட்டம் இன்று காலை 11 மணி அளவில் அவைத் தலைவர் ஆடிட்டர் அர்ஜுனராஜ் தலைமையில் தாயகத்தில் நடைபெறும் என வைகோ அறிவித்துள்ளார். இந்த கூட்டத்தில் இந்த விவகாரம் குறித்து ஆலோசிக்கப்படும் என்றும் திமுக கூட்டணியில் தொடர்வது குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாம் என மதிமுக வட்டாரங்களில் கூறப்படுகிறது.

# தேர்தல் முடியும் வரை நேரில் ஆஜர் ஆக விலக்கு?...நீதிமன்றம் செல்லும் விஜய்

**சென்னை, மார்ச் 12:**

தேர்தல் முடியும் வரை டெல்லியில் சிபிஐ விசாரணைக்கு நேரில் ஆஜர் ஆக விலக்கு அளிக்க வேண்டும் என விஜய் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிகிறது.

தேர்தல் நேரத்தில் அடிக்கடி டெல்லியில் சிபிஐ விசாரணை செல்வதால் தமிழகத்தில் தேர்தல் பரப்புரை செய்ய முடியவில்லை என்றும் ஆகவே தேர்தல் முடியும் வரை நேரில் ஆஜர் ஆவதற்கு தடை விதிக்க நடிகர் விஜய் நீதிமன்றம் செல்ல உள்ளார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

கரூர் கூட்ட நெரிசல் விவகாரம் தொடர்பாக இன்று விசாரணைக்கு ஆஜராகும்படி சிபிஐ சம்மன் அனுப்பியிருந்தது. ஆனால், தேர்தல் பரப்புரை மற்றும் அரசியல் பணிகளைக் காரணம்காட்டி, நேரில் ஆஜராவதிலிருந்து 15 நாட்கள் விலக்கு அளிக்க வேண்டும் என்று விஜய் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிகிறது.

ஒருவேளை சிபிஐ இந்த கோரிக்கையை ஏற்க மறுத்து, தொடர்ந்து சம்மன் அனுப்பினால், விஜய் நீதிமன்றத்தை அணுகி தேர்தல் முடியும் வரை நேரில் ஆஜராவதிலிருந்து விலக்கு அல்லது சம்மனை நிறுத்தி வைக்கக் கோரி மனு தாக்கல் செய்ய வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு கரூரில் நடந்த தவெக மாநாட்டின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக இந்த விசாரணை நடைபெற்று வருகிறது. ஏற்கனவே இந்த வழக்கில் விஜய் இரண்டு முறை நேரில் ஆஜராகி விளக்கம் அளித்துள்ளார்.

# தூத்துக்குடியில் துணை ராணுவத்தினர் கொடி அணிவகுப்பு

தமிழக சட்டமன்ற தேர்தல் விரைவில் நடைபெற உள்ள நிலையில், தேர்தல் ஆணையம் அதற்கான முன்னேற்பாடு பணிகளைத் தீவிரப்படுத்தியுள்ளது. தேர்தல் பணிகளுக்காகப் பல்வேறு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, அவர்களுக்குத் தொடர்ந்து பயிற்சிகள் அளிக்கப்பட்டுவருகின்றன. இதனிடையே பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுவதற்காக வெளி மாநிலங்களிலிருந்து துணை ராணுவப் படையினர் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு வரவழைக்கப்பட்டுள்ளனர். தூத்துக்குடி மாவட்டத்திற்குச் சத்தீஸ்கர் மாநிலத்திலிருந்து எல்லை பாதுகாப்புப் படையினர் (BSF) 85 பேர் கொண்ட குழுவினர் வருகை தந்துள்ளனர். இவர்களை உள்ளடக்கிய கொடி அணிவகுப்பு நேற்று மாலை தூத்துக்குடியில் நடைபெற்றது. இந்த அணிவகுப்பிற்கு மாவட்ட எஸ்.பி. மதன் தலைமை தாங்கினார். தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் தொடங்கிய அணிவகுப்பு, அண்ணா சிலை சந்திப்பு, பெரியார் சிலை சந்திப்பு மற்றும் வி.வி.டி. சிக்னல் சந்திப்பு வழியாகச் சென்று வ.உ.சி. கல்லூரி முன்பு நிறைவடைந்தது.

# பழனி முருகன் கோவிலில் பங்குனி உத்திர திருவிழா: 26-ந்தேதி கொடியேற்றம்

**பழனி, மார்ச் 12:**



அறுபடை வீடுகளில் மூன்றாம் படை வீடான பழனி தண்டாயுதபாணி சுவாமி கோவிலில் கொண்டாடப்படும் முக்கிய திருவிழாக்களில் பங்குனி உத்திர திருவிழாவும் ஒன்றாகும். இவ்விழாவின் முக்கிய அம்சமே ஈரோடு மாவட்டம் கொடுமுடியில் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தீர்த்தம் எடுத்து வந்து முருகபெருமானுக்கு அபிஷேகம் செய்து வழிபடுவதுதான்.

அவ்வகையில் இந்த வருடத்திற்கான திருவிழா வருகிற 26-ந்தேதி (26.3.2026) பழனி அடிவாரத்தில் உள்ள திருஆவினன்குடி கோவிலில் கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. விழா நடைபெறும் 10 நாட்களும் வாகன வீதியுலா நடைபெறும். வெள்ளி காமதேனு, வெள்ளி ஆட்டு கிடா, வெள்ளியானை, தங்க குதிரை, தங்க மயில் உள்ளிட்ட பல்வேறு வாகனங்களில் வள்ளி தெய்வானை சமேத முத்துக்குமார சுவாமி எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். விழாவின் முக்கிய நிகழ்ச்சியான திருக்கல்யாணம் மார்ச் 31-ந்தேதி நடைபெறும். அன்றைய தினம் இரவு வள்ளி தெய்வானை சமேத முத்துக்குமார சுவாமிக்கு திருக்கல்யாணமும், இரவு 9 மணி அளவில் வெள்ளி ரதத்தில் மணக்கோலத்தில் சுவாமி சன்னதி வீதி, கிரி வீதிகளில் உலா வரும் நிகழ்ச்சியும் நடைபெறும். பங்குனி உத்திர திருவிழாவின் சிகர நிகழ்ச்சியான தேரோட்டம் ஏப்ரல் 1-ந்தேதி மாலை 4.20 மணி அளவில் நடைபெறும். ஏப்ரல் 4-ந்தேதி கொடி இறக்குதலுடன் திருவிழா நிறைவு பெறுகிறது.

திருவிழா நடைபெறும் 10 நாட்களும் குடமுழுக்கு நினைவரங்கில் பக்தி சொற்பொழிவு, இன்னிசை, பரதநாட்டியம், நாதஸ்வர கச்சேரி, வீணை இன்னிசை, பொம்மலாட்டம், தேவராட்டம், சாக்ஷபோன் இசை நிகழ்ச்சி, நாட்டுப்புற பாடல்கள் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

விழாவிற்கான ஏற்பாடுகளை கோவில் இணை ஆணையர் மாரிமுத்து, துணை ஆணையர் வெங்கடேஷ் தலைமையிலான அதிகாரிகள் செய்து வருகின்றனர்.

# கன்னியாகுமரி பகவதி அம்மனுக்கு 'பானகம்' நைவேத்தியம்.. 15-ந்தேதி தொடங்கி 60 நாட்கள் சிறப்பு பூஜை

**கன்னியாகுமரி, மார்ச் 12:**



பங்குனி, சித்திரை மாதங்கள் கோடை காலம் ஆகும். இந்த மாதங்களில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும். அக்னி நட்சத்திரம் ஆரம்பித்தவுடன் வெயிலின் உக்கிரம் அதிகரித்து அனல்காற்று வீசும். இந்த கோடை வெயில் காலங்களில் பொதுமக்கள் இளநீர், நுங்கு, பானகம், மோர், கரும்பு ஜூஸ், குளிர் பானம் போன்றவற்றை குடித்து சூட்டைத் தணித்துக் கொள்வார்கள்.

இதேபோல இறைவனுக்கும் கோடை காலத்தில் வெப்பம் நீங்கி குளிர்ச்சியுடன் இருப்பதற்காக பல்வேறு கோவில்களில் பானகம் (பானக்காரம்) என்ற குளிர்பானம் மாலை நேரத்தில் நைவேத்தியமாக படைக்கப்பட்டு சிறப்பு பூஜைகள் நடக்கின்றன. பின்னர் அந்த பானகம், பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படும். அவ்வகையில், கன்னியாகுமரி பகவதி அம்மனுக்கு பங்குனி, சித்திரை ஆகிய 2 மாதங்களும் தினமும் மாலை 4மணிக்கு கோவில் நடை திறந்தவுடன் "பானகம்" நைவேத்தியமாக படைத்து சிறப்பு பூஜை நடக்கிறது. எலுமிச்சம்பழம், சர்க்கரை, ஏலம், சுக்கு, புளி ஆகியவற்றை தண்ணீரில் கரைத்து தயாரிக்கப்படுவதுதான் "பானகம்" ஆகும். இந்த ஆண்டு பங்குனி மாத பிறப்பான வருகிற 15-ந்தேதி முதல் 60 நாட்கள் தினமும் மாலை 4 மணிக்கு பகவதி அம்மனுக்கு பானகம் படைக்கப்படுகிறது. மாலை 6.30 மணிக்கு சாயராட்சை தீபாராதனை முடிந்ததும் அம்மனுக்கு படைக்கப்பட்ட பானகம் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படுகிறது. இதனை அருந்தினால் வெப்பம் சம்மந்தமான நோய்கள் வராது என்பது ஐதீகம் ஆகும். இதனால் பானகம் பிரசாதத்தை வாங்கி குடிக்க கோவிலில் தினமும் மாலையில் பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருக்கும். இதற்கான ஏற்பாடுகளை கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில் மேலாளர் ஆனந்த் தலைமையில் கோவில் நிர்வாகத்தினர் செய்து வருகிறார்கள்.

# மண்டைக்காடு பகவதி அம்மன் கோவிலில் ஒடுக்கு பூஜை

**கன்னியாகுமரி, மார்ச் 12:**



மண்டைக்காடு பகவதி அம்மன் கோவில் மாசிக் கொடைவிழா கடந்த 1ம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கி விமரிசையாக நடைபெற்றது. விழாவின் மூன்றாம் நாள் முதல் காலை மற்றும் இரவு அம்மன் வெள்ளிப் பல்லக்கில் பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். தினசரி மாலையில் சந்தனகுடம் பவனி, காலை, மதியம், மாலை மற்றும் இரவு நேரங்களில் சிறப்பு தீபாராதனை நடைபெற்றது.

விழாவின் பத்தாம் நாளான நேற்று காலை 4.30 மணிக்கு அடியந்திர பூஜையுடன் திருநடை அடைக்கப்பட்டது. மாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு, 6.30 மணிக்கு சாயரட்சை தீபாராதனை நடைபெற்றது. இரவு 9 மணிக்கு அத்தாழபூஜை நடைபெற்றது. இரவு 10 மணிக்கு அம்மன் வெள்ளிப்பல்லக்கில் பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

நள்ளிரவு 12 மணிக்கு ஸ்ரீகண்டன் சாஸ்தா கோவிலில் இருந்து ஒடுக்கு பூஜைக்கு அம்மனுக்கு படைக்கப்படும் உணவு பதார்த்தங்கள் பவனியாக எடுத்து வரப்பட்டன. 12.30 மணிக்கு மேல் 1 மணிக்குள் அம்மனுக்கு இந்த உணவு பதார்த்தங்கள் படைக்கப்பட்டு ஒடுக்கு பூஜை விமரிசையாக நடைபெற்றது. தொடர்ந்து திருக்கொடி இறக்கப்பட்டு விழா நிறைவு பெற்றது.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



## நலம் தரும் மருத்துவம்

# சோர்வை ஏற்படுத்தும் உணவுகள்

1. சுத்திகரிக்கப்பட்ட கார்போஹைட்ரேட்டுகள்:

வெள்ளை அரிசி, புரோட்டா, பிரட் போன்ற மைதா உணவுகள் மற்றும் பாஸ்தா போன்றவை இரத்தத்தில் சர்க்கரை அளவை சட்டென்று உயர்த்தும். இதனால் இன்சுலின் சுரப்பு அதிகரித்து, பின் சர்க்கரை அளவு வேகமாக குறையும். இந்த 'சர்க்கரை வீழ்ச்சி' மிக விரைவில் சோர்வடையச் செய்யும்.

2. சர்க்கரை நிறைந்த உணவுகள்:

இனிப்புகள், சோடா மற்றும் எனர்ஜி பானங்கள் குடித்தவுடன் ஒரு உடனடி உற்சாகத்தைத் தருவது போலத் தோன்றும். ஆனால், அந்த உற்சாகம் சில நிமிடங்களிலேயே மறைந்து, முன் எப்போதும் இல்லாத அளவுக்கு உங்களை தளர்ச்சியடையச் செய்யும். அதிகமாக எடுத்துக்கொண்டால் நாள் முழுவதும் ஆற்றல் ஏற்ற இறக்கங்கள் (ENERGY FLUCTUATIONS) ஏற்படும்.

3. பதப்படுத்தப்பட்ட மற்றும் கொழுப்பு நிறைந்த உணவுகள்:

பீட்சா, பர்கர் மற்றும் வறுத்த உணவுகளில் ஆரோக்கியமற்ற கொழுப்புகள் அதிகம். இவற்றைச் செரிமானம் செய்வதற்கு உங்கள் உடல் அதிக ஆற்றலைச் செலவிட வேண்டியிருக்கும். இதனால், அதிக ஆற்றல் செரிமான மண்டலத்திற்கே செலவாகி, தூக்கத்தை வரவழைக்கலாம்.

4. காஃபின்:

காபி அல்லது டீ குடித்தால் சோர்வு நீங்கும் என்று நாம் நினைக்கிறோம். ஆனால், அளவுக்கு அதிகமான காஃபின் உங்கள் தூக்கச் சுழற்சியைப் பாதிக்கும். ஒரு கட்டத்தில் காஃபின் உடலில் குறையும் போது, நீங்கள் முன்னைவிட அதிக சோர்வை உணர்வீர்கள்.

5. பால் பொருட்கள் மற்றும் சிவப்பு இறைச்சி:

சிலருக்குப் பால் பொருட்களில் உள்ள டிரிப்டோபன் என்ற அமினோ அமிலம் மற்றும் மெலடோனின் தூக்கத்தை வரவழைக்கும். அதேபோல், அதிக புரதம் கொண்ட சிவப்பு இறைச்சியைச் செரிமானம் செய்ய உடல் அதிக நேரம் எடுப்பதாலும் சோர்வு ஏற்படலாம்.

சோர்வைத் தவிர்க்க நீங்கள் செய்ய வேண்டியவை:

வெள்ளை அரிசிக்கு பதில் கைக்குத்தல் அரிசி, சிறுதானியங்கள் மற்றும் ஓட்ஸ் போன்றவற்றைச் சேர்க்கவும். இவை மெதுவாகச் செரிமானமாகி நாள் முழுவதும் சீரான ஆற்றலை வழங்கும். பல நேரங்களில் சோர்வு என்பது தாகத்தின் அடையாளமாக இருக்கலாம். உடலில் நீர்ச்சத்து குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

ஒரே நேரத்தில் வயிறு முட்ட சாப்பிடுவதற்குப் பதிலாக, சிறிய இடைவெளிகளில் சத்தான உணவுகளைச் சாப்பிடுவது ரத்தச் சர்க்கரை அளவை சீராக வைத்திருக்கும்.

பாதாம், வால்நட் மற்றும் பூசணி விதைகள் போன்றவற்றைச் சிற்றுண்டியாகச் சேர்த்துக் கொண்டால் உடனடி மற்றும் நீடித்த உற்சாகம் கிடைக்கும்.

# விண்வெளியில் ஏன் சத்தம் இல்லை?: விண்வெளியில் சத்தம் கேட்காது என்பது உண்மையா?

திரைப்படங்களில் விண்கலங்கள் மோதும்போது பெரிய சத்தங்கள் கேட்பதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் உண்மையில் விண்வெளியில் சத்தங்கள் கேட்குமா? வாருங்கள் தெரிந்துகொள்வோம்.

சத்தம் எப்படி பரவுகிறது?

முதலில் சத்தம் என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொள்வோம். சத்தம் என்பது ஒரு அதிர்வு. இந்த அதிர்வு ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பரவுவதற்கு ஒரு ஊடகம் தேவை. அந்த ஊடகம் காற்றாகவோ, நீராகவோ அல்லது திடப்பொருளாகவோ இருக்கலாம்.

உதாரணமாக, பூமியில் நாம் பேசும்போது நமது குரல் காற்றின் மூலம் மற்றவர்களின் காதுகளுக்கு சென்று சேருகிறது. அதேபோல், கடலில் இருக்கும் திமிங்கிலங்கள் நீரின் மூலம் ஒன்றுக்கொன்று சத்தத்தை அனுப்புகின்றன.

விண்வெளியில் ஏன் சத்தம் இல்லை?

விண்வெளியில் பெரும்பாலும் வெற்றிடம்தான் உள்ளது. அதாவது அங்கு காற்று அல்லது வேறு எந்த ஊடகமும் மிகவும் குறைவாக இருக்கிறது. சத்தம் பரவ காற்று போன்ற ஊடகம் தேவைப்படுவதால், அந்த ஊடகம் இல்லாத இடத்தில் சத்தமும் பரவ முடியாது.

இதனால்தான் விண்வெளி அமைதியானது என்று கூறப்படுகிறது. உண்மையில், விண்வெளியில் நிகழும் பல பெரிய சம்பவங்களின் சத்தத்தைக் கூட நம்மால் கேட்க முடியாது.



உதாரணமாக, பூமியில் ஒரு பெரிய எரிமலை வெடித்தால் கூட, விண்வெளியில் அதை ஒரு சிறிய சத்தமாகக் கூட கேட்க முடியாது.


ஏனெனில், அந்த சத்தம் பூமியின் வளிமண்டலத்தைத் தாண்டி விண்வெளிக்கு செல்ல முடியாது. காற்று இல்லாததால் அந்த அதிர்வு விண்வெளிக்கு பரவுவதில்லை.

அப்படியானால் விண்வெளி வீரர்கள் எப்படி பேசுகிறார்கள்?

விண்வெளியில் பணிபுரியும் விண்வெளி வீரர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும்போது அவர்கள் சாதாரணமாக குரல் எழுப்பி பேச முடியாது. அதற்குப் பதிலாக அவர்கள் ரேடியோ அலைகளை பயன்படுத்துகிறார்கள்.

ரேடியோ அலைகள் என்பது மின்காந்த அலைகள். இந்த அலைகள் காற்று இல்லாத இடத்திலும் பயணம் செய்ய முடியும். அதனால்தான் விண்வெளியில் உள்ள விண்வெளி வீரர்களும் பூமியில் உள்ள கட்டுப்பாட்டு மையமும் ரேடியோ மூலம் தொடர்பு கொள்கின்றனர்.

விண்வெளி வீரர்களின் உடையில் இருக்கும் ஹெல்மெட்டில் மைக்ரோபோன் மற்றும் ஸ்பீக்கர் இருக்கும். அவர்கள் பேசும் குரல் மைக்ரோபோன் மூலம் ரேடியோ சிக்னலாக மாற்றப்படுகிறது. பின்னர் அது மற்ற விண்வெளி வீரர்களின் கருவிகளுக்கு அனுப்பப்படுகிறது. அங்கே அது மீண்டும் சத்தமாக மாற்றப்படுகிறது.




இங்கு ஒரு சுவாரசியமான விஷயம் என்னவென்றால், விண்வெளி முற்றிலும் வெற்றிடம் என்றாலும், சில பகுதிகளில் மிகச்சிறிய அளவில் வாயுக்கள் மற்றும் துகள்கள் இருக்கலாம். அந்த இடங்களில் அதிர்வுகள் ஏற்படலாம். ஆனால், அந்த அதிர்வுகளை மனிதனின் காதுகளால் நேரடியாக கேட்க முடியாது.

சில நேரங்களில் விஞ்ஞானிகள் அந்த அதிர்வுகளை மின்னணு கருவிகளால் பதிவு செய்து பின்னர் அதை ஒலிவடிவமாக மாற்றி வெளியிடுகின்றனர்.

# வேர் பழசு... துளிர் புதுசு



கிராமத்தின் ஒதுக்குப்புறத்தில் இருந்தது மாணிக்கம் தாத்தாவின் பழைய ஓட்டு வீடு.
வாசலில் நின்றிருந்த முருங்கை மரம் காய்ந்து கருவாடாகிப் போய் நின்றது.
அதன் கிளைகள் விறகுக்குக் கூட உதவாது போல மொட்டையாகத் தெரிந்தன.
ஆனாலும் விடாப்பிடியாய், கடந்த ஒரு மாதமாக மாணிக்கம் தாத்தா அதிகாலையிலேயே எழுந்து, ஒரு குடம் தண்ணீரோடு அந்த மரத்தடிக்கு வந்து விடுகிறார். மண்டியிட்டு அமர்ந்து, அதன் அடி மண்ணில் மெல்லத் தண்ணீரை ஊற்றுவார்.

"தாத்தா... செத்தப் பிணத்துக்குப் பன்னீர் தெளிக்கிற கதையாவல்ல இருக்கு நீங்க பண்றது..., இந்தப் பட்டுப் போன மரத்துக்குத் தண்ணி ஊத்துறீங்களே?... என்ன பிரயோஜனம்?... பேசாம வெட்டி விறகுக்குப் போடுங்க!" - அவ்வழியே சென்ற ரங்கன் கிண்டலாகச் சிரித்தான். தாத்தா நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. "மரம் வெளிய காய்ஞ்சு போயிருக்கலாம் ரங்கா... ஆனா மண்ணுக்குள்ள இருக்கிற வேர் இன்னும் சாகலைன்னு என் மனசு சொல்லுதுப்பா," என்றார் மெல்லிய புன்னகையுடன்.

நாட்கள் நகர்ந்தன. ஊர்க்காரர்கள் தாத்தாவைப் "பைத்தியக்காரக் கிழம்" என்று முணுமுணுத்தனர்.
வெயில் சுட்டெரித்தது. பூமி பிளந்து கிடந்தது. ஆனாலும் தாத்தாவின் தண்ணீர் அந்த மரத்தின் வேர்களைத் தேடித் தினமும் போய்க்கொண்டே இருந்தது.

தாத்தா எப்போதும் போலத் தண்ணீரோடு மரத்தடிக்குச் சென்றார். அங்கே, பழைய மரத்தின் அடிப் பகுதியில், சாம்பல் நிறப் பட்டையை உடைத்துக்கொண்டு ஒரு சிறு புள்ளி தெரிந்தது. தாத்தா கண்களைக் கசக்கிவிட்டுப் பார்த்தார். அது ஒரு பச்சைத் துளிர்! மிகச் சிறியது, ஆனால் அதில் ஒரு பிரபஞ்சத்தின் உயிர்ச்சக்தி அடங்கியிருந்தது.

ஒரு மாதப் போராட்டத்திற்குப் பிறகு, அந்த மரம் "நான் இன்னும் சாகவில்லை" என்று உலகுக்குச் சொன்ன தருணம் அது. தாத்தாவின் கண்கள் பனித்தன.

மாலையில் ரங்கன் வந்தபோது ஆச்சரியத்தில் உறைந்தான். "இது எப்படிச் சாத்தியம்? செத்துப் போச்சுன்னு நினைச்ச மரத்துல உயிர் வந்திருச்சே!"

தாத்தா அந்தத் துளிரைத் தடவிக் கொடுத்தபடி சொன்னார். "நம்பிக்கை ஒரு போதும் செத்துப் போகாது ரங்கா... நாம ஒரு விஷயத்தைக் கைவிடுற வரைக்கும் அதுக்குத் தோல்வி கிடையாது. வேர் உயிர்ப்போட இருக்கிற வரைக்கும், எந்தக் கிளையையும் மீண்டும் துளிர்க்க வைக்க முடியும்... அது மரமானாலும் சரி, மனித மனமானாலும் சரி!"



**-முகில் தினகரன்**
கோயமுத்தூர்.

# சங்கடங்கள் !





ஐயா தெரியாதையா , இந்தமாதிரி நடக்குன்னு! நல்லது செய்யப்போய் இப்படி ஏடாகூடமா மாட்டுவேன்னு ! வேலியில போற ஓணானை எடுத்து வேஷ்டியில விட்டுக்கொண்டு அவஸ்தையைத்தான் பெற்றேன்.உலகத்தில் இனி யாருக்கும் எந்த உதவியும் தேவை என்கிற பட்சத்தில் ஒன்றுக்கு நாலுதடவை யோசனை பண்ணனும்ங்க ! யோசனை பண்ணாம உதவி செய்யப்போய்த்தான் நல்லா வாங்கிக் கட்டி க்கிட்டேனுங்க !
நான் ஒருத்தன் விஷயம் என்னன்னு சொல்லாமலே பினாத்தறேன் !

ஒண்ணுமில்லீங்க. ஒருமணிநேரம் முன்னால ஒருத்தர் வந்தாருங்க. வழியில யார்கிட்டயோ எதைப்பற்றியோ விசாரிச்சிக்கிட்டிருந்தார். கேள்வி கேட்கப்பட்ட நபர் பதில் சொல்லத் தெரியாம முழிச் சிக்கிட்டிருந் தாருங்க.
சட்டுனு வீட்டிலேர்ந்து படியிறங்கிப் போய் என்ன ஏதுன்னு கேட்டேனுங்க. அதற்கு அவர் ," ஐயா ! இவர் வெளியூ ர்க்காரர்.ஹோமியோபதி ஆஸ்பத்திரி எங்க இருக்குன்னு கேட்குறார் " என் றார்.
" அட இவ்வளவுதானா...." என கர்வத்துடன் கேட்டுவிட்டு நான் அந்த வெளியூர்க்காரரைப் பார்த்து ஆஸ்பத்திரி இருக்கும்இடத்தை ஸ்கெட்ச் போட்டுக் கூறினேன்.

அவர் அகமகிழ்ந்து , " ரொம்ப நன்றி சார் !" எனக் கூறிவிட்டு அத்தோடு நான் விட்டிருந்தால் பரவாயில்லை. ஏழரை நாள் சனி என்பார்களே அது என் விஷயத்தில் நல்லாவேப் பொருந்தும்ங்க !
" ஐயா ! நீங்கள் போற காரியம் நல்லபடியா நடந்ததுன்னா என்கிட்டச் சொல்லிட்டுப் போங்க. இதோ இதுதான் என் வீடு !" என்ற என் நாக்கில் சனி இருக்கவேண்டும். கூடவே விதியும் சிரிக்க ஆரம்பித்ததை என் மரமண்டைக்கு உறைக்கவே இல்லை.

மனுஷன் மெலிதாகச் சிரித்தபடி " ஆகட்டும்ங்க..நான் புறப்படு றேன்ங்க !" இருகரம் குவித்து வணங்கி விடைபெற நான் பெருமிதத்தோடு என் பக்கத்தில் இருந்த ஆளைப்பார்த்தேன். அவர் " எனக்குத் தெரியும்ங்க.ஆனால் வழி எப்படின்னு சொல்லத்தெரியல்லீங்க !" என்றார் அசடு வழிய.
" அட அத விடுங்க ! அதான் நான் ஒருத்தன் இருக்கேன்ல...." கொசுறாக வார்த்தையை விட அவர் என்னை ஒருமாதிரியாகப் பார்த்தபடி அகன் றார். நேரம் போனது. நான் அந்த வெளியூர்க்காரருக்காக வழிமேல் விழிவைத்துக்காத்துக்கொண்டிருந்தேன்.
" என்ன, ரொம்பவும் ரெஸ்ட்லெஸ்ஸா இருக்கீங்க?" கேட்ட என் சகதர்மணியிடம் விஷயத்தைச் சொன்னேன்.
" அது சரி , இன்னிக்கு எங்கப்பாவை செக்கப்புக்கு டாக்டர்கிட்ட கூட்டிக்கிட்டு போகணும். மறந்துடாதீங்க." சந்துல சிந்து பாடி என் கடமை உணர் ச்சியை நியாபகப்படுத்திவிட்டுச் சென்றாள்.
அந்த நபரும் வந்தார். முகம் கடு கடுவென்று இருந்தது . நான் விரைந்தோடிச் சென்று அவர் அருகில் நின்று கர்வத்துடன் அவரைப் பார்த்தேன்.
" என்ன சார் ! ஆஸ்பத்திரியைப் பார்த்தீங்களா ? டிரீட்மண்ட் எடுத்துக்கிட்டீங்களா ?"
அவர் முகத்தில் மேலும் எள்ளும் கொள்ளும் வெடித்தன. " கிழிஞ்சுது, ஹோமி யோபதி ஆஸ்பத்திரி இருக்குதா இல்லையான்னுகூட தெரியாம நகர்ல இருக்கீங்க.."
நான் திடுக்கிட்டேன்." சார்...என்ன சொல்றீங்க ?"
" ம்..சொல்றேன் சொரைக்காய்க்கு உப்பில்லேன்னு.." கடு கடுத்தபடி தொடர்ந்தார். " ஹோமியோபதி ஆஸ்பத்திரி இங்கேர்ந்து ஷிப்ட் பண்ணி வேற இடத்துக்குப்போய் ஒருவாரமாச்சாம் ! இது தெரியாம நகர்லஇருக்கீங்க. இதுல ஸ்கெட்ச்போட்டு வழி வேற அதுவும் ரொம்பப்பெருமையாச் சொல்றீங்க... அவ்வளவு தூரம் நடந்துபோய் வந்ததில கால்வலிதான் மிச்சம் ! " எனக் கூறிவிட்டுத் திரும்பியவர் மீண்டும் என்னிடம் "இனிமே நீங்க யாருக்கும் எந்த உதவியும் செய்ய வேண்டாம். உங்க ஜோலிய மட்டும் பார்த்துக்கிட்டால் போதும்.?அதுதான் உத்தமம் !" என்று விட்டு அகன்றார்.
கூடுதல் போனஸாக என்னவள் 'க்ளுக்' சிரித்தது என் காதில் வந்து விழுந்தது.



**- வி.கே.லக்ஷ்மிநாராயணன்**
ராமகிருஷ்ணா நகர்
போரூர், சென்னை- 600 116

# Boomer to Gen Z

பாகம் 23



**வி.பிரபாவதி**
**மடிப்பாக்கம்.**

" மாலு, பையன் ஜாதகம் நன்னா பொருந்தியிருக்கு. ஆனா வெளிநாட்டு வரன் போல இருக்கு. நன்னா விசாரிக்கனும். வாத்தியாராத்து மாமி சொன்னா அமெரிக்கா வரன் இப்பெல்லாம் நறையா வருதாம். பொண்களே தனியா வெளிநாட்டுல போய் தனியா படிக்கிறாளாம். வேலை பார்க்கிறாளாம். பயம் இல்லைங்கறா. பாத்து விஜாரிச்சு முடிவெடுக்கனும்" கோமளம் நோக்கியா மொபைலில் பேசினாள்.
"சரிம்மா. இவர்கிட்ட சொல்றேன். பையனோட அப்பா நன்னாப் பேசினார். பார்ப்போம். பகவான் சித்தம்".

"நீயும் அப்பாவும் எப்படி இருக்கேள்? சுந்தரி எதுவும் வந்தாளா? ஒடம்பப் பாத்துக் கோங்கோ. சுவாமிநாத சுவாமிகிட்ட வேண்டிக்கோ. எல்லாம் நல்லபடியாக நடக்கணும்" மாலு போனை வைத்துவிட்டு
துணி காயப்போடப் போனாள்.
கோவிலிலிருந்து வந்த வாசுவிடம் அம்மா சொன்னதை சொன்னாள். நன்றாக விசாரிக்க வேண்டும் என்று முடிவு செய்தனர்.
நிறைய நண்பர்கள், தெரிந்தவர்கள் மூலம் விசாரித்த பின்னர் திருமணம் நிச்சயம் செய்யப்பட்டது. சத்திரம் பிடித்து அமர்க்களமாக நடந்தது. மாலு தனக்கு வாசுவுடன் நடந்த சிம்பிளான நிச்சயதார்த்தத்தை நினைத்துப் பார்த்தாள். ஊரிலிருந்து கோமளமும், வரதனும் சுந்தரி, மாப்பிள்ளை, பேரன் பேத்தியுடன் காரில் வந்துவிட்டு போனார்கள். நிச்சயதார்த்த சிலவுகளே ஒரு திருமண சிலவு போல் இருந்தது.

ஒன்றரை மாதமே மாப்பிள்ளை இந்தியாவில் இருப்பதால் உடனேயே திருமணம் இருபது நாட்களில் வைத்துக் கொண்டார்கள்.
கேட்டரிங், பக்ஷணங்கள், எல்லாம் ஆர்டர் கொடுக்கப்பட்டது. நகரத்தில் ஒரு பெரிய திருமண மண்டபம் (உடனே கிடைக்க வேண்டி அதிகத் தொகை கொடுத்து புக் செய்தார்கள்) கிடைத்தது.

ஸ்ரீஹரி குடும்பம், சுந்தரி குடும்பம், கோமளம், வரதன் எல்லோரும் நான்கு நாட்கள் முன்னதாக வந்திருந்து திருமண வேலைகளில் பங்கேற்றனர். கல்யாணியும் சந்தோஷத்தில் கொஞ்சம் தெம்பாகக் காணப்பட்டாள்.
தனது கல்யாணத்தைப் போல் சம்பிரதாயங்கள் குறையாமல் பார்த்து பார்த்து செய்தார்கள் மாலுவும் வாசுவும்.



ஸ்ரவந்தி தன் தோழிகளுடன் சேர்ந்து ஒருசில சங்கீத், ரிசப்ஷனில் லைட் மியூசிக் என்றெல்லாம் ஏற்பாடு செய்திருந்தது புதுமையாக இருந்தது.
செலவுகள் கைமீறிப் போனாலும் எப்படியோ சமாளித்து திருமணத்தை மிகச் சிறப்பாக செய்தார்கள். இருந்தாலும் மாப்பிள்ளையின் நண்பர்களுக்கென ரூம் புக் செய்வதில் சில குழப்பங்கள் ஏற்பட்டது. மண்டபத்திற்கு அருகில் ரூம் கிடைக்காததால் போக்குவரத்து சிரமம் ஏற்பட்டதில் மாப்பிள்ளையின் சித்தப்பா கொஞ்சம் பிரச்சினை பண்ணிவிட்டார்.

வாக்குவாதம் முற்றிவிடாமல் ஸ்ரீஹரி பார்த்துக் கொண்டான். ஒரு சின்ன வருத்தமாக ஆகிவிட்டது. திருமண வைபவம் கட்டுசாதக் கூடையுடன் நல்லபடியாக நடந்தது. சுந்தரியும், அவள் கணவரும் பொண்ணு மாப்பிள்ளையை கொண்டுவிட விரும்பினார்கள். மாலுவும் வாசுவும் மிகவும் சந்தோஷத்தோடு ஒப்புக் கொண்டனர்.

கொண்டு விடப் போனதில் சுந்தரிக்கும் சந்தோஷம். போகும்போது காரில் மாலு வாசுவின் கல்யாணத்தைப் பற்றிப் பேசிக்கொண்டே வந்தாள். மாப்பிள்ளை சுதாகரின் அக்காவும் ரசித்துக் கொண்டே வந்தாள். மதுரையில் புக்ககத்தில் விட்டு விட்டு மறுநாள் மீனாட்சியை தரிசனம் செய்துவிட்டு சென்னை திரும்பி விட்டார்கள். ஒருசில முக்கியமான வேண்டுதல்களையும் குலதெய்வ வழிபாட்டுக்களையும் முடித்துக் கொண்டு சுதாகர் கிளம்பியாயிற்று.
ஸ்ரவந்தி கிளம்ப சில பாஸ்போர்ட், விசா ப்ராசஸ் இருக்கிறது. ஓரிரு மாதங்களில் கிளம்பி விடுவாள். அபிஷேக் மிகவும் கஷ்டப்படுவான். அக்காதான் எல்லாம் அவனுக்கு. இருவரும் நல்ல நண்பர்களைப் போலவே இருப்பார்கள்.
ஸ்ரவந்திக்கு வெளிநாடு செல்வதில் மகிழ்ச்சி என்றாலும் இவ்வளவு குறுகிய நாட்களில் அனைவரையும் விட்டுச் செல்வதும் கவலையைத் தந்தது.

நல்லது பொல்லாததற்கு உடனே வரமுடியுமா என்ற கவலை. அங்கு தனக்கு நல்ல வேலை கிடைக்க வேண்டும். தனியாக இருக்கும் மாமனாரை கவனித்துக் கொள்ள வேண்டும் என்று நினைவுகளில் மூழ்கினாள்.

தொடரும்...

# கோடீஸ்வர யோகம் தரும் ஏலக்காய் மாலை வழிபாடு!


இந்த உலகில் வாழ்வதற்கு அறிவு மட்டும் தேவையில்லை. கூடவே பொருளாதாரமும் இருந்தால் மட்டுமே வாழ்க்கை சிறக்கும். ஆன்மிக நம்பிக்கைகளில் செல்வத்துக்கு அதிபதியாக மகாலட்சுமி தேவி வணங்கப்படுகிறார். பொதுவாகவே, நறுமணம் கொண்ட பொருட்களில் மகாலட்சுமி தேவி வாசம் செய்வதாக நம்பப்படுவது உண்டு.



மகாலட்சுமியின் அம்சம் சில மணமிக்க பொருட்களில் இருப்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். இதில் கிராம்பு மற்றும் ஏலக்காய் போன்றவையும் அடங்கும். இவற்றை சமையலுக்குப் பயன்படுத்துவதால் சாதாரண பொருளாகி விடாது. கிராம்பும் ஏலக்காயும் மூலிகை வகையைச் சார்ந்த தாவரங்கள். மகாலட்சுமி தேவிக்கு மிகவும் விருப்பமான பொருட்களில் இவை அடங்கும். இந்த இரண்டையும் வைத்து செல்வ வளத்தை பெருக்குவது எப்படி என்பது பற்றி இந்தப் பதிவில் காண்போம்.

செல்வத்தில் நாட்டம் கொண்ட பலருக்கும் தங்கள் குடும்பத்தில் மகாலட்சுமி தேவி நிரந்தரமாக வாசம் செய்ய ஆசை இருக்கும். மகாலட்சுமியை வசியம் பண்ண பலவிதமான வழிகள் உண்டு. பணம் சம்பாதிப்பது கடினமான காரியம் என்றால், சேர்த்த பணத்தை நிலைக்க வைப்பது அதைவிட கடினமானதாக இருக்கும். ஒரு பக்கம் பணம் வந்து வந்து கொண்டே இருந்தாலும் மறுபக்கம் அது நிலைக்காமல் தேவையற்ற வழிகளில் கரைந்து கொண்டே இருக்கும். அடிக்கடி மருத்துவ செலவுகள் ஏற்படுதல், இயந்திரங்கள் பழுதடைதல், வண்டி வாகன செலவுகள் என்று எதிர்பாராத செலவுகள் உண்டாகிக்கொண்டே இருக்கும். இதற்குக் காரணம் மகாலட்சுமியின் அருள் குறைவு என்பதுதான் அர்த்தம்.

மகாலட்சுமியின் அருளைப் பெறுவதற்கு சுலபமான வழிபாடு ஒன்று உண்டு. ஒரு வெள்ளிக்கிழமை அன்று நீங்கள் வழக்கமாக செய்யக்கூடிய பூஜைகுரிய ஏற்பாடுகளை செய்த பின் குத்துவிளக்கு ஒன்றை தனியே பூஜையில் வைக்கவும். விளக்கிற்கு மஞ்சள், குங்குமம் வைத்து மலர்களால் அலங்காரம் செய்து விளக்கின் பாதத்தை சுற்றி பூக்களால் அலங்காரம் செய்யவும். பூக்களில் மணமிக்க மகாலட்சுமி பெரிதும் விரும்பும் மல்லிகை மலர் கட்டாயம் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும்.





பின்னர் கிராம்புகளை 54 அல்லது என்ற 108 என்ற எண்ணிக்கையில் எடுத்துக் கொள்ளுங்கள். அதே எண்ணிக்கையில் ஏலக்காயும் எடுத்துக் கொள்ளுங்கள். ஏலக்காயை ஊசி நூல் கொண்டு கோர்த்து மாலையாக செய்து கொள்ளுங்கள். கிராம்பை பூ கட்டுவது போன்று ஒவ்வொன்றாக வைத்து கட்டிக் கொள்ளுங்கள். நைவேத்தியமாக சர்க்கரை பொங்கல், உலர் திராட்சை, மாதுளம் பழம், நெல்லிக்கனிகள் ஐந்து இவற்றை ஒரு தட்டில் விளக்கின் முன்னால் வைத்துக் கொள்ளுங்கள்.

வெற்றிலைப் பாக்கு, பழம் வைத்து அதன் மீது ரூபாய் 501 (அவரவர் இஷ்டம்) காணிக்கை வைத்து இந்த இரண்டு மாலைகளையும் விளக்கின் மீது சாற்றி விளக்கின் ஐந்து முகங்களிலும் தீபம் ஏற்ற வேண்டும். தீபம் ஏற்றிய பின் மகாலட்சுமி சுலோகத்தை வாசிக்கலாம். தொடர்ந்து 21 வாரங்கள் இந்த வழிபாட்டை முறையாக செய்து வருவதன் மூலம் குபேர யோகத்தை அடையலாம் என்று சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது. இதனால் மகாலட்சுமி தேவியின் அருள் பரிபூரணமாக உங்களுக்குக் கிடைக்கும்.

மாலைகளை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. அதன் நிறமும் மணமும் மாறும் பட்சத்தில் வேண்டுமானால் மாற்றிக் கொள்ளலாம். இந்த பூஜையை வெள்ளிக்கிழமை செய்ய முடியாத நிலையில் ஒரு பௌர்ணமியிலும் துவங்கி செய்யலாம். மகாலட்சுமி உங்களது வீட்டில் வாசம் செய்ய இந்த பூஜை முறை சிறந்த பலனளிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், முழு நம்பிக்கையோடு இதை செய்து பயனடையலாம். பூஜை செய்ய வேண்டிய நேரம் காலை 6 முதல் 7, மதியம் 1 முதல் 2, இரவு 8 முதல் 9 மணி வரை.

நாமும் மகாலட்சுமியின் அம்சமான குத்துவிளக்குக்கு மணமிக்க ஏலக்காய் மாலைகளை அணிவித்து வாழ்வில் செல்வந்தராக உயர்வோம்.


-எம்.அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி
திருச்சி _620015

தினம் ஒரு தலைவர்கள்

# கர்த்தார் சிங் வரலாறு

கர்த்தார் சிங் 1896-ஆம் ஆண்டு மே 24 ஆம் நாள் பிறந்தார். பகத் சிங் இவரைத் தன் வழிகாட்டியாக குறிப்பிடுகிறார். இவர் கதர் கட்சியை உருவாக்கியவர்களில் முதன்மையானவர்.





இளமைக்காலம்

கர்த்தார் சிங் பஞ்சாப் மாநிலத்தில் லூதியானா மாவட்டத்தில் சரபா என்ற கிராமத்தில் பிறந்தார். அவரது தந்தை சர்தார் மங்கள் சிங். அவரது தாயார் சாஹிப் கபூர். அவரின் இளவயதிலேயே அவரது தந்தை இறந்துவிட்டார். அவரது தாத்தாவின் அரவணைப்பில் சொந்த கிராமத்தில் ஆரம்பக் கல்வியை முடித்தார். பின்னர் லூதியானாவில் மெட்ரிகுலேஷன் படித்தார். பின்னர் ஒரிசாவில் உள்ள அவரது சித்தப்பா வீட்டில் இருந்து பத்தாவது முடித்துக் கல்லூரியில் சேர்ந்தார். பின்னர் அமெரிக்காவில் வேலை பார்க்கச் சென்றார்.

அமெரிக்க வாழ்க்கை

ஜனவரி 1912-ல் சான்ஃபிரான்சிஸ்கோ துறைமுகத்தில் கப்பல் நங்கூரமிட்டது. அமெரிக்க அதிகாரிகள் மற்ற நாட்டவரைவிட இந்தியர்களைக் கடுமையாக சோதனையிட்டனர். கர்த்தார் சிங் இது பற்றி மற்றவர்களிடம் விசாரித்தபோது அவர்கள் "இந்தியர்கள் அடிமை நாட்டு குடிமக்கள் என்பதால் மோசமாக நடத்தப்படுகின்றனர்" என்றனர். இது கர்த்தார் சிங்கை கடுமையாகப் பாதித்தது. அந்த காலகட்டத்தில் (1914) இந்தியர்கள் வெளி நாட்டில் தொழிலாளியாகவோ பிரித்தானிய அரசின் சாம்ராஜ்ய விஸ்தரிப்புக்குப் போராடும் இராணுவ வீரர்களாகவோ தான் இருந்தார்கள். கர்த்தார் சிங் பெர்க்ளேயில் உள்ள கலிபோர்னிய பல்கலைக்கழகத்தில் வேதியியல் பட்டப்படிப்புக்காக சேர்ந்தார். பழத்தோட்டத்தில் பழம் சேகரிக்கும் வேலையும் செய்தார். அப்போதிருந்தே கர்த்தார் சிங் மற்றவர்களுடன் சேர்ந்து இந்தியா சுதந்திரம் பெறுவதற்கான முயற்சிகளைச் செய்தார்.

கதர் கட்சியும் கதர் செய்தித்தாளும்

கர்த்தார் சிங் 1913-ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் நாள் சோஹன்சிங், ஹர்தயாள் ஆகியோருடன் சேர்ந்து கதர் கட்சியை உருவாக்கினார். அதன் தாரக மந்திரம் "இந்திய சுதந்திரத்திற்காக அனைத்தையும் பணயம் வைப்போம்" என்பதாகும். 1913-ஆம் ஆண்டு நவம்பர் 1 அன்று "கதர்" என்ற செய்தித்தாள் வெளியானது. பஞ்சாபி, ஹிந்தி, உருது, பெங்காலி, குஜராத்தி, புஷ்டோ மொழிகளில் வெளியானது. ஹர்தயாள் எழுத்து வேலையும் கர்த்தார் சிங் அச்சு வேலையும் செய்தனர். உலகம் முழுவதும் உள்ள இந்தியர்களுக்கு அனுப்பப்பட்டது. குறைந்த காலத்தில் இது எல்லோருடைய ஆதரவையும் பெற்றது. கர்த்தார் சிங்கின் வீரம் பகத் சிங்கைக் கவர்ந்தது. அவர் கர்த்தார் சிங்கைத் தனது குருவாக ஏற்றார்.

இந்து-ஜெர்மன் ஆலோசனை

முதலாம் உலகப்போர் ஆரம்பித்த உடன் கதர் கட்சி இந்திய சுதந்திரத்திற்கு இது நல்ல சந்தர்ப்பம் என்று நினைத்தது. பிரித்தானிய அரசுக்கு எதிரான போர் என்று அச்சிட்டு ஆயிரக்கணக்கான பிரசுரங்கள் கிராமம், நகரம், இராணுவம் என்று எங்கெங்கும் விநியோகிக்கப்பட்டன. கர்த்தார் சிங் கொழும்பு வழியாக இந்தியா வந்தார். அவருடன் சத்யேன்சென், விஷ்ணு கணேஷ் பிங்களே மற்றும் பலர் வந்தனர். இன்னும் 20,000 வீரர்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்தனர் . கர்த்தார் சிங்கும் பிங்களேயும் ராஷ் பிஹாரி போஸ் அவர்களை பனாரஸில் சந்தித்தனர். பஞ்சாப் ராணுவத்துடன் சேர்ந்து பிரித்தானிய அரசை எதிர்க்கத் திட்டமிட்டிருந்தனர். இது இந்து-ஜெர்மானிய சதி என்று குறிப்பிடப்படுகிறது.

கிர்பால் சிங்கின் துரோகம்

கதர் கட்சியின் செயல்பாடுகளை கிர்பால் சிங் என்ற போலீஸ்காரர் அரசிடம் காட்டிக் கொடுத்துவிட்டார். பெரும்பாலான கதர்கட்சியினர் கைது செய்யப்பட்டனர். கர்த்தார் சிங், ஹர்னாம் சிங், ஜகத் சிங் ஆகியோர் ஆப்கானிஸ்தானத்திற்குத் தப்பிச் செல்லும்படி கூறப்பட்டனர். அவரது தோழர்கள் அனைவரும் அரசாங்கத்திடம் சிக்கிக் கொண்டிருக்கும் பொழுது தாம் மட்டும் தப்பிச் செல்ல விருப்பமில்லாமல் திரும்பிவிட்டனர். அரசிடம் மாட்டிக்கொண்டனர். வழக்கு விசாரணையின் போது அவரது திறமைகள் நீதிபதியைக் கவர்ந்தது. அவர் இரக்கத்தை எதிர்பார்க்கவில்லை. தனது செயலுக்குப் பெருமைப்பட்டார். எனவே அவர் ஆபத்தானவராகக் கருதப்பட்டு 1915-ஆம் ஆண்டு நவம்பர் 16 அன்று லாகூர் மத்திய சிறையில் தூக்கிலிடப்பட்டார். அப்போது அவருக்கு வயது 19. அவருடன் கதர்கட்சியைச் சேர்ந்த 24 பேர் தூக்கிலிடப்பட்டனர்.

# ஜேசன் சஞ்சய் இனிஷியலால் வெளிவந்த உண்மை?



நடிகராக இருந்து அரசியல்வாதியாக மாறியவர் விஜய். இவருக்கு சங்கீதா என்ற மனைவியும் ஜேசன் சஞ்சய் என்ற மகனும் திவ்யா சாஹா என்ற மகளும் உள்ளனர். சினிமாத்துறையில் விஜய் பயணித்த காலத்திலேயே அவர் குடும்பத்தினருடன் விலகி இருந்ததாக தகவல்கள் வெளியாகி வந்த நிலையில் கடந்த மாதம் 27-ந்தேதி விஜயிடம் இருந்து விவாகரத்து கோரி செங்கல்பட்டு குடும்ப நல நீதிமன்றத்தில் அவரது மனைவி சங்கீதா மனு தாக்கல் செய்துள்ளது மற்றும் சென்னையில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சியில் விஜய், திரிஷாவுடன் பங்கேற்றது என அடுத்தடுத்து நடைபெற்ற வரும் சம்பவங்கள் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

இதனிடையே, விஜய்யின் மகன் ஜேசன் சஞ்சய் திரைப்பட இயக்குநராக அறிமுகமாகியுள்ளார். இவரின் முதல் திரைப்படம் வெளியீட்டுக்கு தயாராகி வருகிறது. ஆக்ஷன் கதையை மையமாகக் கொண்டு உருவாகும் இந்த திரைப்படம் தமிழ் மற்றும் தெலுங்கு என இரண்டு மொழிகளில் வெளியாக உள்ளது.

இதையடுத்து ஜேசன் சஞ்சய் தனது அடுத்த படத்திற்கான பணிகளையும் தொடங்கியுள்ளார். சினிமாவில் படுபிசியாக இருக்கும் ஜேசன் சஞ்சய் குறித்து தற்போது வெளியாகி உள்ள தகவல் சமூக வலைத்தளங்களில் பேசு பொருளாகி உள்ளது.

அதாவது, தமிழ் சினிமாவில் பல நடிகர்களின் குழந்தைகள் தங்களது தந்தையின் பெயரின் முதல் எழுத்தை பயன்படுத்துவது வழக்கம். ஆனால் ஜேசன் சஞ்சய் தனது புதிய படத்திற்கான டைட்டில் கார்ட் மற்றும் கையெழுத்துகளில் தந்தையின் பெயரை குறிக்கும் எழுத்தை பயன்படுத்தவில்லை என்று கூறப்படுகிறது.

தந்தையின் பெயருக்கு பதிலாக அவர் "Jason Sanjay S" என்ற முறையில் கையெழுத்திட்டு இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதில் வரும் 'S' என்பது அவரது தாய் சங்கீதா (Sangeetha Sor-nalingam) பெயரை குறிக்கிறது என இணையதள வாசிகள் பலர் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன் இன்ஸ்டாவில் தனது தந்தை விஜயைப் பின்தொடர்வதை ஜேசன் நிறுத்தியதாக தகவல் வெளியாகி இருந்தது குறிப்பிடத்தக்கது.




தமிழ் சினிமாவில் வேகமாக வளர்ந்து வரும் நடிகைகளில் ஒருவர் திவ்யபாரதி. படங்கள் மட்டுமின்றி வெப் சீரிஸிலும் அவர் நடித்து வருகிறார்.

இன்ஸ்டாகிராமில் மட்டும் அவருக்கு 3.7 மில்லியன் ரசிகர்கள் இருக்கின்றனர். திவ்யபாரதி வெளியிடும் கிளாமர் போட்டோக்களுக்கு லட்சக்கணக்கில் லைக்குகள் வந்து குவிகிறது.

தற்போது அழகிய உடையில் திவ்யபாரதி போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்களை பாருங்க.

# படங்களை பகிர்ந்த ஆர்யா கிண்டலடித்த சதீஸ்



தங்கலான் படத்தை தொடர்ந்து நடிகர் ஆர்யாவை வைத்து சர்பட்டா-2 படத்தை ரஞ்சித் இயக்குவார் என எதிர்பார்த்திருந்த நிலையில், வேட்டுவம் படப்பிடிப்பை தொடங்கினார்.

இப்படத்தில் அட்டக்கத்தி தினேஷ் நாயகனாக நடிக்க, ஆர்யா வில்லனாக நடிக்கிறார். இப்படம் விரைவில் வெளியாகவுள்ளது.

இதனையடுத்து ஆர்யா தனது 40 ஆவது படத்தில் நடிக்கிறார். நிகில் முரளி இயக்கும் இப்படத்தில் ஆர்யாவுக்கு ஜோடியாக நிகிலா விமல் மற்றும் தெலுங்கு நடிகை வைஷ்ணவி சைதன்யா நடிக்கிறார்கள். இப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் இசையமைக்கிறார்.

இந்நிலையில், இப்படத்திற்காக ஜிம்மில் நிகிலா விமல் மற்றும் வைஷ்ணவி சைதன்யா உடன் உடற்பயிற்சி செய்யும் புகைப்படங்களை நடிகர் ஆர்யா வெளியிட்டுள்ளார். இந்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகியுள்ளன.

இதையடுத்து ஆர்யாவை கிண்டலடிக்கும் வகையில் ஜிம்மில் உடற்பயிற்சி செய்யும் படங்களை பகிர்ந்த சதீஸ், "நான் எல்லாம் ஜிம்முக்கு போனா வந்த வேலையை மட்டும் தான் பாக்குறது" என்று பதிவிட்டுள்ளார். சதீஷின் பதிவை பகிர்ந்து நடிகர் ஆர்யாவும் அவரை கிண்டலடித்துள்ளார்.

# பெண்கள் மட்டுமே சரியா? ஆண்கள் தான் உண்மையில் பாவம்



ரவி மோகன், ஆர்த்தி இருவரும் 2009 ஆம் ஆண்டு காதலித்து திருமணம் செய்து கொண்டனர்.

இவர்கள் இருவருக்கும் இரண்டு மகன்கள் இருக்கும் நிலையில், கடந்த 2024 ஆம் ஆண்டு ரவி மோகன் மனைவியிடம் இருந்து விவாகரத்து கேட்டு நீதிமன்றத்தை நாடினார்.

15 ஆண்டுகள் இணைபிரியா தம்பதிகளாக வாழ்ந்து வந்த இவர்களின் பிரிவு பலரை கவலையில் ஆழ்த்தியது.

இதற்கிடையே ரவி மோகன் பாடகி கெனிஷா இடையே காதல் உறவு இருப்பதாக கூறப்பட்டு வருகிறது. இருவரும் பொது நிகழ்வுகளில் அவ்வப்போது ஒன்றாக கலந்துகொண்டு கவனம் ஈர்க்கின்றனர்.

மேலும், ரவி மோகனும், விவாகரத்து பெற்ற மனைவி ஆர்த்தியும் சமூக வளைதளங்களில் அவ்வப்போது பரஸ்பரம் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

இந்நிலையில் ரவி மோகன் இன்ஸ்டா பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் தன்னை விமர்சிப்பவர்களுக்கு ரவி மோகன் பதிலடி கொடுத்துள்ளார்.

அவர் தனது பதிவில், "நான் எனது வாழக்கையை அமைதியான முறையில் கட்டமைத்து வருகின்றேன். நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள்.

பெண்கள் செய்வது மட்டுமே சரி என்று நீங்கள் நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால் ஆண்கள் தான் உண்மையில் பாதிக்கப்பட்டவர்கள். நமது நீதித்துறை கூட அதை ஏற்றுக்கொள்கிறது.

எனது மனதையும், எனது நேசத்திற்குரியவர்களுக்கு நான் செய்தவற்றையும் ஒரு நாள் நீங்கள் அறிவீர்கள். ஒரு மனிதனை அமைதியுடன் வாழ விடுங்கள்.


உங்கள் கேவலமான எண்ணங்களை நீங்கள் உங்களுடனே வைத்துக் கொள்ளுங்கள். நான் என் வழியில் செல்கிறேன்" என்று தெரிவித்துள்ளார். இதனுடன் 'வாழ்க்கை என்பது அன்பினில்' பாடலுடன் வீடியோ ஒன்றையும் அவர் வெளியிட்டுள்ளார்.



நடிகை ராகுல் ப்ரீத் சிங் தமிழ், தெலுங்கு மட்டுமின்றி சமீப காலமாக ஹிந்தியிலும் ஏராளமான படங்கள் நடித்து வருகிறார். பாலிவுட்டில் அவர் தாராள கவர்ச்சி காட்டி நடித்து வருகிறார்.

மேலும் அவர் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள கிளாமர் உடையில் வரும் வீடியோக்களும் இணையத்தில் அடிக்கடி வைரல் ஆகின்றன.

தற்போது ராகுல் ப்ரீத் தாராள கவர்ச்சியில் போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்களை பாருங்க.



# துபாயில் இருந்து வந்தடைந்தார் அஜித்!

அமெரிக்காவும், இஸ்ரேலும் இணைந்து, ஈரான் மீது தாக்குதல் நடத்துகின்றன. அதற்கு, ஈரானும் பதிலடி கொடுத்து வருகிறது.

இந்தத் தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டார். இதனிடையே ஈரானும் நேற்றுமுதல் இஸ்ரேல் மீதும், மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்கக் கூட்டு நாடுகளான பஹ்ரைன், குவைத், கத்தார் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் (துபாய், அபுதாபி) மீதும் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியது.

துபாயில் கார் பந்தயத்திற்காக அஜித் தங்கியிருந்தார். அப்போது துபாயில் தாக்குதல் நடத்தப்பட்டதால் சென்னை திரும்ப முடியாமல் அஜித் துபாயில் சிக்கிக்கொண்டார். அஜித் பாதுகாப்பாக இருப்பதாக அவரது மேலாளர் சுரேஷ் சந்திரா தெரிவித்திருந்தார். இந்நிலையில், துபாயில் இருந்து அஜித் இன்று பாதுகாப்பாக சென்னை வந்தடைந்தார்.


Vilambaram
GET...
SET.....
SHOOT
YOUR SALES
WITH SOCIAL
MEDIA
ASK US HOW ?
CONTACT US TODAY!
+91-7789941009
www.vilambaram.com


Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale
Dealers In: Designer
Sarees, Chudidhar,
Laganga, Choli &
Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple)
Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennai
Real Choice Chennai
Real Choice Chennai


WANTED
Needed female staff
to look after
children, patients.
Contact
9150989424


WANTED
Retd, VRS, Home Makers,
NRIs, Business Person
Contact
8248951872


WANTED
Site Supervisor required
for construction work in Ambattur
Contact:
8428872887


Any Website
Rs.10,000/-
Professional Websites at Affordable Price!
Call: 7789941009


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


START YOUR OWN
EPAPER
WEBSITE TODAY!
CALL 7789941009



Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
PRESS
பேப்பர்பாய்
8122664699


தனியார் வாகன உதிரிபாகங்கள்
உற்பத்தி செய்யும் நிறுவனத்தில்
பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diplomo/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை /
மணப்பெண்ணைப்
பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ராசி
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள் , ஆருடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம் , சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில்
ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம்
இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com



தொலைத்து விட்ட காதல்
இன்னும் தொலையாமல்
இருக்கிறது பாழாய் போன
அந்த கல் நெஞ்சத்தில்!

சொடக்கு தக்காளியை
பார்க்கும் போதெல்லாம்
எடக்கு,மடக்காய் நோக்கும்–
உன் கிறுக்கு பார்வைகளின்
ஞாபகங்களடி!

அந்த மீள முடியாத கனவில்
இருந்து வெளியே வா
என்றனர் யாருமில்லாத,
ஆதரவில்லாத ,
தனிமையான அனாதை
தன்மை கொண்ட வாழ்வில்
அந்த புதைகுழி கனவு
மட்டுமே
பெரும் சுகம் என்பதை
எப்படி சொல்ல?!

இவையெல்லாம்
உன்னுடைய டெலுசன்
தமிழில் சொல்ல
வேண்டுமென்றால்
எல்லாம் மாயை என்றனர்.
அது கற்பனையாக,
மாயமாக இருந்தால் தான்
என்ன? அவளோடு ஒரு
நீண்ட தொடர் கனவு

தொடர்ந்தால் தான் என்ன?!
ஒரே ஒரு வரம் தான்
வேண்டும் இந்த ஜென்மம்
முழுதும் இப்படியே எனை
பார்த்து கொண்டிருக்க!

இத்தனை செருப்படி பட்டும்
அவளை விரும்புவதை
மட்டும் நிறுத்தவில்லை
மானம் கெட்ட என் மனசு!

ஒரு கடவுள் இன்னொரு
கடவுளை காண கோயில்
செல்வதை இப்போது தான்
காண்கிறேன்!

எனை கண்கள் என்னும்
சாட்டையால் அடிக்க
அவளால் மட்டுமே முடியும்!

இந்த மாத வாடகையென
அவளிடம் பணம்
கொடுத்தேன் உங்களுக்கு
எந்த வீட்டையும் நான்
குடியிருக்க கொடுக்க
வில்லையென சொன்னாள்.
எப்படி சொல்வேன்?
அவள் இதயத்தில்
நான் தான்
குடியிருக்கிறேனென்று!

**லி.நௌஷாத் கான்**

### ஹைக்கூ

நேற்று இருந்தார்
இன்று இருப்பதில்லை
அரசியல்

நடக்கும் என்பார் நடக்காது
நடக்காது என்பார்
நடந்துவிடும் அரசியல்

எண்ணங்களால் அன்று
எண்ணிக்கைகளால் இன்று
கூட்டணி

விரைவில் காதல்
விரைவில் திருமணம்
விரைவில் மணவிலக்கு

வேண்டாம் இனி
கொலைகாரனாக்கியது
பேருந்து தினம்

கிடைக்கவில்லை
எங்கு தேடியும்போதிமரம்

நல்ல கூட்டம்
பித்தலாட்டப் பயிற்சி
சோதிடப் பயிற்சி

புரட்டு அங்கிகாரம்
பல்கலைக்கழகப்பாடத்தில்
சோதிடம்

வேடந்தாங்கல் செல்லாத
இரும்புப்பறவைவிமானம்


நேசித்தால் இனிக்கும்
யோசித்தால் கசக்கும்
வாழ்க்கை

சுறுசுறுப்பின் சின்னம்
பறக்கச் சலிப்பதில்லை
தேனீ!

### சோதிடம்

உழைக்காமல் உண்ணும்
சோம்பேறிகளின் உளறல்
சோதிடம்

மடக் கட்டங்களால் மனக்
கட்டிடம் தகர்ப்பு சோதிடம்



எந்த சோதிடனும்
சொல்ல வில்லை
சுனாமி வருகை
இடித்துக் கட்டியதில்
நொடித்துப் போனார்
வாஷ்துப் பலன்

கடவுளைப் போல
கற்பிக்கப்பட்ட கற்பனை
சோதிடம்!

### ஹைக்கூ

பறவைகளின் எச்சம்
மரங்கலானது மிச்சம்
இயற்கையின் உச்சம் !

அமர்வதும் அழகு
பறப்பதும் அழகு பட்டாம்பூச்சி!

உணரந்தவர்கள் மட்டும்
உணரும் உன்னது உணர்வு
காதல் !

பொன்முட்டை வாத்து
அறுத்த கதையாக
மரம் வெட்டி விறகு !

விலங்கை முறி சிறகை விரி

இளம் விதவை !
அழுவதில்லை
சிறைபடுத்தப்பட்டும்
தொட்டி மீன்கள் !

பயமுறுத்தியது
கர்ஜனை சிங்கம் !

தேவையில்லை தண்ணீர்
செயற்கைச் செடிகள் !

ஏமாளித் தொண்டன்
கோமாளித் தலைவன்
அரசியல் !

சுதந்திர இந்தியாவில்
சுதந்திரக் கொள்ளை
அரசியல் !

ரணமானது மனசு
புயல் நிவாரணத்திலும்
கையூட்டு !

அப்போது எப்போது என்பது
தெரிந்து இப்போது எப்போது
என்பது தெரியாது
தொடரும் மின் தடை !

**கவிஞர் இரா .இரவி**

### துளிப்பாக்கள்

வீட்டுக் கதவில்
குடும்பம் நடத்துகிறது
குளவிக்கூடு!

மேகங்கள் மோதுகின்றன
வானம் கண்ணீர் வடிக்கிறது
மகிழும் மனிதன்!

விரித்து ஆடிய அழகு



இங்கு செத்துக் கிடக்கிறது
தோகை மயில்!

சிற்பி கைவண்ணம் கண்டு
புன்முறுவல் பூக்கிறது
அழகிய சிலை!



மரம் மெதுவாக
நடந்து செல்கிறது
தாத்தாவின்
கைத்தடி!

**பூ.சுப்ரமணியன்**
சென்னை



### விருந்தோம்பல்

முகம் மலர்ச்சியோடு
வரவேற்பு!

புன்னகையே சிறந்த
விருந்தோம்பல்!
அன்பு கலந்த அறுசுவை !

வாசல் தேடி வந்தவரை
இன்னமுகத்தோடு
வரவேற்போம்!

பசித்த வயிறுக்கு
உணவளித்து! பாசமலையில்
நனைப்போம் !

பகுத்துண்டு பல்லுயிர்
ஓம்புதல் தமிழர் பண்பாட்டு
சிகரம்!

விருந்தினர் மகிழும்
வேளையில் வீடே கவிதை
அரங்கமாம்!

மனக் கதவை திறந்து வைத்து
இன்சொல்பேசி அழைப்போம் !

பகிர்ந்து உண்ணும்
பண்பினால்
புண்ணியம் தேடி மகிழ்வோம்!

முகத்தில் மலர்ச்சி காட்டி
அகத்தில் ஈரம் சேர்ப்போம்!

வந்தவரைத் தெய்வமென
வாழ்த்தி வழியனுப்புவோம்!

உண்ணும் உணவை விட–
அங்கு சிந்தும் அன்பே
பெரிது!

தந்த பொருளை விட காட்டும்
பண்பே இனிது !

இருந்தோம்பி இல்வாழ்வ
தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற்
பொருட்டு.

வள்ளுவரின் குறலுக்கு ஏற்ப
ஒருவன் வீட்டில் தங்கி
பொருள் சேர்த்து .
வாழ்வதெல்லாம் ,வந்த
விருந்தினரை போற்றி
அவர்களுக்கு உதவி செய்யும்
நற்பண்பிற்காகவே ஆகும்.


மோப்பக் குழையும் அனிச்சம்
முகந் திரிந்து நோக்கக்
குழையும் விருந்து

வள்ளுவரின் குறலுக்கு ஏற்ப
அனிச்ச மலர் மோந்து
பார்த்தாலே வாடி விடும்:
ஆனால் ஒரு விருந்தினர்
நாம் முக வேறுபாட்டைக்
கண்டாலே அதாவது நாம்



முகம் மலராமல்
பார்த்தாலே
உள்ளம் வாடி
விடுவார்!

**பெ.திருமுகம்**
ஆசிரியர்
மணமேல்குடி



### கண்ணாடி பூக்கள்

கண்ணாடியில் ஒட்டி
இருக்கும் பூக்கள்
எண்ணிக்கையில் அதிகமாக
தெரிவது இயற்கை அதனை
புரியாமல் இருப்பது
அறியாமை – இங்கு
அத்தகைய அறியாமை
அடுக்கடுக்காய் உயர்ந்து
கொண்டே இருக்கிறது!
உண்மை எது என்பது...
சொல்பவனுக்கும் தெரியும்,
கேட்பவனுக்கும் புரியும்;
இருந்தும் – ஒரு போலி நாடகம்
இங்கே அரங்கேறிக் கொண்டே தான் இருக்கிறது!
அந்த நாடகத்தில் யார் நாயகன் என்பதை விட,
யார் 'கோமாளி' என்பதில் தான்
இந்தச் சமூகம் குறியாய் இருக்கிறது!
நேர்மையாளர்களைக் கோமாளிகளாக்கி – அவர்கள்
ஏமாளிகள் என ஒரு மாய பிம்பத்தைச் சூட்டுகிறார்கள்!
கோமாளியோ, ஏமாளியோ... அவன் யார் வயிற்றிலும் அடிக்காத
நேர்மையாளன்! சொல் தவறாதவன்; நல்வழி நடப்பவன்!
வலிகளைக் கடந்து – தன் வெற்றிக்காக அமைதியாய்
உழைப்பவன் அவன்! அவனை ஏமாற்ற நினைக்கும் நீங்களோ...
காலத்தின் கைப்பிடியில் சிக்கியவர்கள்! நிச்சயம் ஒருநாள் –
நீங்கள் அதே மேடையில் கோமாளிகளாய் நிற்பீர்கள்!
காலம் இப்போதெல்லாம்... வட்டமாகவோ, வளைவாகவோ



இருப்பதில்லை; அது நம் முகம் காட்டும்
'கண்ணாடியாக' நிற்கிறது! கவனமாகச்
செல்லுங்கள்...
இன்று நீங்கள் ஏமாற்றும் அந்த 'கோமாளிகளே'–
நாளை
உங்கள் அவசரத்திற்கு உதவும்
'ஆபத்துதவிகளாக' அமைவார்கள்!

**ஜனனி அந்தோணி ராஜ்**

### குடும்பச்சுமை !

கனக்கவில்லை தலைச்சுமை
கனத்தது நெஞ்சம்
குடும்பச்சுமை !

சுமை சுமையே இல்லை
சுமையும் சுகமேகுடும்பச்சுமை!

ஏழைகளின்
கவலைக்காரணி
குடும்பச்சுமை !

கூட்டுக்குடும்பம்
உடைந்ததால் கனத்தது
குடும்பச்சுமை !

குடும்பத்தலைவன்
தலையில் வந்தது
குடும்பச்சுமை !

எண்ணிக்கை குறைந்தும்
குறையவில்லை குடும்பச்சுமை!

விலைவாசி ஏற்றம்
மேலும் பாரம் குடும்பச்சுமை !

கொக்கின் தலையில்
பனங்காய் குடும்பச்சுமை !

வாழ்க்கையில் போராட்டமல்ல
போராட்டமே
வாழ்க்கையாக
குடும்பச்சுமை!

இயேசுவின்
சிலுவையென
சுமக்கின்றனர்
குடும்பச்சுமை!



தனிக்கட்டைகளுக்கு
என்றுமில்லை
குடும்பச்சுமை !

குடிகாரக் கணவனால்
மனைவியின் தலையில்
குடும்பச்சுமை !

பகிர்ந்துக் கொண்டால்
பாரம் குறையும்
குடும்பச்சுமை !

அரசியல்வாதிகளின்
ஊழல் பொதுமக்கள்
தலையில்
குடும்பச்சசுமை !

**கவிஞர் இரா .இரவி !**

# நூல் விமர்சனம்

நூல்: இறையன்பு ஓராண்டு உரைகள் தொகுதி 3
நூல் ஆசிரியர்: முதுமுனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப.
நூல் மதிப்புரை : கவிஞர் இரா.இரவி
வெளியீடு:நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41 பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை–600 050.
செல் : 044 – 26251968, 26258410 4 தொகுதிகள் ; விலைரூ.1500

25 உரைகளின் தொகுப்பு இந்த நூலில் உள்ளன. எங்கு, எப்போது பேசப்பட்டது என்ற குறிப்புடன் வரலாற்று ஆவணமாக உள்ளன. முதுமுனைவர் வெ. இறையன்பு அவர்கள் ஒருமுறை பேசியதை மறுமுறை பேசுவதில்லை. கூறியது கூறல் அவரின் உரையில் எப்பொழுதும் இருக்காது. ஒவ்வொரு உரையும் புதுப்புது தகவல்களைத் தந்தவண்ணம் இருக்கும். பயனுள்ள உரையாகவும் இருக்கும். வெற்று கூச்சல். இரைச்சல். அரட்டை என எதுவும் இருக்காது.

உரை நூலாகி உள்ளது என்று படித்தால் தான் தெரியும். அந்த அளவிற்கு உரை என்பது எழுதியது போலவே உள்ளன. அவருடைய எல்லா உரையையும் எல்லோரும் கேட்பதற்கு வாய்ப்பு இல்லை. பல்வேறு ஊர்களில், பல்வேறு இடங்களில் பேசிய உரைகள் மொத்தமாக தொகுப்பாக வந்துள்ளன.


இளையதலையமுறையினர் அவசியம் படிக்க வேண்டிய நூல் இது. எங்கு உரை நிகழ்த்தவும் பயன்படும். இதிலுள்ள கருத்துக்களை அவரது பெயருடன் மேற்கோள் காட்டி உரையாற்ற மிகவும் பயன்தரும் நூல் இது. 4 தொகுதிகளில் தொகுதிக்கு 25 உரைகள் மூலம் மொத்தம் 100 உரைகள் தொகுத்து உள்ளனர்.

அறிவியல் வளர்ச்சியின் பயனுள்ள விளைவு. இலக்கிய இமயம் மு.வரதராசன் அவர்கள், இலக்கியத் தேனீ இரா.மோகன் அவர்களிடம், "பேசிக்கொண்டே இருந்தால் காற்றில் கரைந்து காணாமல் போய்விடும். பேச்சைக் குறைத்து எழுத்தில் கவனம் செலுத்து, எதிர்காலத்திற்கு நிற்கும், ஆவணமாகும்" என்று அறிவுரை தந்தாராம். ஆம், அன்றைய காலத்தில் பேசிய பேச்சை ஆவணப்படுத்தும் அறிவியல் வளரவில்லை. ஆனால், இன்று முதுமுனைவர் வெ.இறையன்பு அவர்களின் உரைகளை ஆவணப்படுத்தி நூலாக்கி இருப்பது தொழில்நுட்ப வளச்சியின் உச்சம்.

முதுமுனைவர் வெ. இறையன்பு அவர்கள் பேசுவது, எழுதுவது அறம் சார்ந்து இருக்கும். அதுபோல அவரின் செயலும் அறம் சார்ந்ததே. அண்மையில் கண்ணகி நகர்வாழ் பெண்களுக்கு ஆட்டோ ஓட்டும் பயிற்சி வழங்கி 5 பேருந்து ஆட்டோ வழங்கி அவர்களின் வாழ்வில் ஒளிஏற்றி வைத்துள்ளார். இறையன்பு அறக்கட்டளை மூலம் பல மனிதநேய உதவிகளை அமைதியாக தொடர்ந்து செய்து கொண்டு வருகிறார். பேச்சு, எழுத்து, செயல் - வேறுபாடு இல்லாத மாமனிதராக விளங்கி வருகிறார்.

இந்த நூலில் "ஊர்கூடித் தேர் இழுப்போம்" என்று தொடங்கி, "அடுத்தது என்ன?" வரை 25 உரைகள் உள்ளன. உரையின் தலைப்பை தேர்ந்தெடுப்பதிலேயே மிகவும் நுட்பமாகத் தேர்ந்தெடுத்து. அவை தொடர்பான அத்தனை கருத்துக்களையும் அருவியாகக் கொட்டி உள்ளார். நியூ செஞ்சுரி புத்தக நிறுவனமும் மிக நேர்த்தியாக பதிப்பித்து உள்ளனர். ஒரே மனிதர் பேசி, 100 உரைகள் நூலாக இதுவரை யாருக்கும் வந்திருக்க வாய்ப்பில்லை. முதுமுனைவர் வெ.இறையன்பு அவர்களுக்குத்தான் இந்த வாய்ப்பு அமைந்துள்ளது.




எல்லோருடைய உரையையும் நூலாக்க முடியாது. வெகுசிலரின் உரையைத்தான் நூலாக்க முடியும். அந்த வெகுசிலரில் சிகரமாக விளங்குகிறார் இறையன்பு அவர்கள். உரையை ஒருவரி கூட விடாமல் அப்படியே நூலாக்கி உள்ளனர். காலத்தால் அழியாத கல்வெட்டாக உரைகள் வந்துள்ளன. பதச்சோறாக நூலிலிருந்து சில மட்டும் உங்கள் பார்வைக்கு இதோ!

"புதுமைப்பித்தன் எழுதிய மண்குதிரையை நீங்கள் படித்திருந்தால் அது மண்குதிரையாக இருக்கும். ஆனால், அந்த மண்குதிரையை உயிர்க்குதிரையாக மாற்றியது திரு. இராமகிருஷ்ணன் அவர்கள் விவரித்த விதம்". எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணன் சிறந்த எழுத்தாளர் மட்டுமல்ல, சிறந்த கதைசொல்லி என்பதை அவர் உரையைக் கேட்ட அனைவரும் அறிவோம். அதனை உணர்த்தி உள்ளார். சக எழுத்தாளரை மனம்திறந்து பாராட்டும் உயர்ந்த உள்ளம். புத்தகங்களைப் பற்றி கவிக்கோ அப்துல் ரகுமான் கவிதை நூலில் உள்ளது. இந்தக் கவிதையை மட்டுமல்ல, அனைத்து உரையும் கையில் குறிப்பு எதுவுமின்றி சொல்லக்கூடிய ஆற்றல் மிக்கவர்.

"நீங்கள் விழிப்புணர்வோடு எதைச் செய்தாலும் சரியாகச் செய்வீர்கள். உங்களுக்குக் கண்காணிப்பாளரே தேவையில்லை. விழிப்புணர்வுடன் மாணவர்கள் தேர்வு எழுதினால், அந்த அறையில் கண்காணிப்பாளர்கள் தேவையில்லை". விழிப்புணர்வின் அவசியத்தை நன்கு உணர்த்தி உள்ளார். எந்தஒரு செயலையும் விழிப்புணர்வோடு செய்தால் செயல் சிறக்கும் என்பது உண்மைதானே. "எப்போது ஒருவருக்கு விழிப்புணர்வு வருகிறதோ அப்போது அவர் நேர்மையாக இருப்பார். எந்த காலக்கட்டத்திலும் தவறு இழைக்கக் கூடாது என்ற எண்ணம் எற்படும். எதைச் செய்தாலும் அதை ரசித்துச் செய்வார்". எந்தஒரு செயலையும் இஷ்டப்பட்டு செய்ய வேண்டும், கஷ்டப்பட்டு செய்யக்கூடாது என்பார். "மேடைப்பேச்சுக்கு நீண்ட, நெடிய வரலாறு உலகமெங்கும் உண்டு. உலகத்தில் நாகரிக நாடுகள் அந்தக்காலத்தில் எங்கெல்லாம் இருந்தனவோ, அங்கெல்லாம் சொற்பொழிவாற்றுவது ஒரு தனிப்பெரும் திறமையாகக் கருதப்பட்டது".

இப்படி சொற்பொழிவின் முக்கியத்துவத்தை உணர்த்தி, அற்புதமாக நிகழ்த்திய அறிவுரையின், ஆழமான உரையின், அறவுரையின், இலக்கிய உரையின், இனிமை உரையின், கருத்துரையின் களஞ்சியமாக, தகவல் சுரங்கமாக நூல் உள்ளது– படித்துவிட்டு வைத்துவிடும் சராசரி நூல் அல்ல இது. நேரம் கிடைக்கும்போதெல்லாம் மறுவாசிப்பு செய்து புத்துணர்வு பெறும் புத்துணர்ச்சி நூல் இது.




## ஹைக்கூ

தியாக தீபங்கள்
தேய்ந்த சந்தனங்கள்
முதியோர் இல்லங்களில் !

கட்டாயமாக்கியதும்
விற்றுத் தீர்ந்தது
தலைக்கவசம் !

தேயவுமில்லை
வளரவுமில்லை நிலவு !

இன்பமயம் மறைந்து
துன்பமயம் வெப்பமயம் !

பிரித்து மரத்திலிருந்து இலை
காற்று !

விழித்தன தூங்கிய மலர்கள்
கதிரவன் !

தனித்தே இருந்தது
தாமரை இலையில் தண்ணீர் !

வசந்த காலத்தின் இனிமை
பரப்பின வாச மலர்கள் !

பூமியில் வானவில்
மலர்க் கண்காட்சி !

புதையல் மண்ணிற்கு மேலே
அறுவடை !

தூய்மையானது
பூமியில் விழும்வரை
மழை நீர் !

## தொ(ல்)லைக்காட்சி !

துண்டித்தது
உறவுகளின் உரையாடலை
தொ(ல்)லைக்காட்சி !

வளர்ச்சியை விட
வீழ்ச்சியே அதிகம்
தொ(ல்)லைக்காட்சி !

வன்மம் வளர்த்து
தொன்மம் அழித்தது
தொ(ல்)லைக்காட்சி !

பாலில் கலந்த பாழும் நஞ்சு
தொ(ல்)லைக்காட்சி !

இல்லத்தரசிகளின்
போதைப்போருளானது
தொ(ல்)லைக்காட்சி !

வளர்த்துவிடும்
மாமியார் மருமகள் சண்டை
தொ(ல்)லைக்காட்சி !

கைவினைப் பொருட்களின்
உற்பத்தி அழித்தது
தொ(ல்)லைக்காட்சி !

நன்மையை விட
தீமையே அதிகம்
தொ(ல்)லைக்காட்சி !

பணம் பறித்து
மனம் சிதைக்கும்
தொ(ல்)லைக்காட்சி !

பழிக்குப் பழி வாங்கும்
உணர்ச்சிப் போதிக்கும்
தொ(ல்)லைக்காட்சி !


இரண்டு மனைவிகள்
தொடர் நாயகர்களுக்கு
தொ(ல்)லைக்காட்சி !

பண்பாட்டைச் சிதைத்து
குற்றம் வளர்க்கும்
தொ(ல்)லைக்காட்சி !

பிஞ்சு நெஞ்சங்களில்
நஞ்சு விதைக்கும்
தொ(ல்)லைக்காட்சி !

மழலை மொட்டுகள்
மனத்தைக் ...

## நிலவு !



காதலிக்கு உவமை
கண்ணுக்கு இனிமை நிலவு !

பாடாத கவிஞர் இல்லை
பாடதவர் கவிஞரே இல்லை
நிலவு !

கண்ணால் காண்பதும் பொய்
வளரவுமில்லை தேயவுமில்லை
நிலவு !

அல்லியை மட்டுமல்ல
அனைவரையும் மலர்விக்கும்
நிலவு !

சூரியனின் கண்ணாடி
சுடாத சுடரொளி நிலவு !

வானில் மட்டுமல்ல
குளத்திலும் மிதக்கும் நிலவு !

தூரத்தில் இருந்தாலும்
துயரம் போக்கும் நிலவு !

பார்த்தால் பரவசம் பார்த்தவர்
உள்ளம் தன்வசம் நிலவு !

வானத்து தோசை
சுவைத்திட ஆசை நிலவு !

பார்வைக்கு வெண்மை
மனிதர்கள் இல்லை உண்மை
நிலவு !

கூடவே நடக்கும்
நின்றதும் நிற்கும் நிலவு !

எட்டத்தில் இருந்தாலும்
ஒட்டி இருப்பதாக உணர்வு
நிலவு !

காதலர்களின்
காதல் சாட்சி நிலவு !



புற இருள் மட்டுமன்றி
அக இருளும் அகற்றும்
நிலவு!


என்றும் குழந்தைக்குச்
சோறுட்ட இன்று
ஆய்வுக்கும் நிலவு !

**கவிஞர் இரா .இரவி**



## கிளாமர்

முழு மனதாக
உண்மையைச் சொல்ல
வேண்டுமென்றால்
ஒவ்வொரு முறையும் உன்
கிளாமர் தான் என்னை
க்ளைமாக்ஸிற்கு
அழைத்துச் செல்கிறது!
என்னைப்
பிடித்திருக்கிறதா?
என்று நீ கேட்கும்
கேள்விக்கு
உன்னைப்பிடித்ததால்
தான்
காதல் என்னைப்பிடித்தது
என்று நான் பதில் பகிர
வேண்டும்! காதல்
நேரத்தில்
மு த் த மி ட க் கூ டா து
என்று நீ உத்தரவிடுவது
எப்படி இருக்கிறது
தெரியுமா?
தேர்தல் நேரத்தில்
அரசியல் பேசக் கூடாது
என்பதைப் போலத்தான்
இருக்கிறது! எப்பொழுதும்
உன்னை
எப்படியெல்லாம்
கா த லி க் க லா ம்? என்ற
சிந்தனையே எனக்கு
மேலோங்குகையில் நீ
கிளாமராக இருப்பதைக்
கண்டு மயங்க என்
கா த லு க் கு
சொல்லியா தர
வேண்டும்?!



**முத்து ஆனந்த்**
வேலூர்

## மண்ணில் பிறந்தது சாதிப்பதற்குத்தான்

இமயம் தொட முடியாது என்றார்கள்
இமயம் தொட்டு வந்தான் சாதனையாளன் !

நிலவிற்கு செல்ல முடியாது என்றார்கள்
நிலவிற்கு சென்று வந்தான் சாதனையாளன் !

ஆழ்கடலில் நீந்த முடியாது என்றார்கள்
ஆழ்கடலில் நீந்தி வந்தான் சாதனையாளன் !

மனிதன் பறக்க முடியாது என்றார்கள்
மனிதன் பறந்தான் விமானத்தில் !

முடியாது என்பது மூடத்தனம்
முடியும் என்பதே மூலதனம் !

முடியாது என்பதை முடித்துக் காட்டு
மண்ணில் நீயே எடுத்துக்காட்டு !

நடக்காது என்பது அவ நம்பிக்கை
நடக்கும் என்பதே தன்னம்பிக்கை !

கிடைக்காது என்பது கோழைத்தனம்
கிடைக்கும் என்பதே நல்ல குணம் !

காலம் பொன் போன்றது அல்ல அல்ல
காலம் பொன்னை விட மேலானது !

பொன்னை வாங்கலாம் பணத்தால்
காலத்தை வாங்க இயலாது பணத்தால் !

ஒவ்வொரு நிமிடத்தையும் பயன்படுத்து
ஒரு நிமிடத்தைக் கூட வீணாக்காதே !

வாய்ப்பு வருமென்று காத்திருக்காதே
வாய்ப்பை உடன் நீயே உருவாக்கு !

உந்தன் முதல் எதிரி சோம்பேறித்தனம்
உன்னிடமிருந்து விரட்டிவிடு அவனை !

உந்தன் நல்ல நண்பன் சுறுசுறுப்பு
உன்னிடமே வைத்திடு அவனை !

நாளை என்று நாளைக் கடத்தாதே
இன்றே என்றே இனிதே முடித்திடு !

முயற்சி மூச்செ்ன எப்போதும் இருக்கட்டும்
தளர்ச்சி தள்ளியே எப்போதும் இருக்கட்டும்

வெற்றியை நீ தேடிச் செல்ல வேண்டாம்
வெற்றி உனைத் தேடி வாசல் சேரும்

மண்ணில் பிறந்தது வாழ்வதற்கு மட்டுமல்ல
மண்ணில் பிறந்தது சாதிப்பதற்குத்தான்

**கவிஞர் இரா .இரவி**



## உபகரணங்கள்.....

கையறு வாழ்வுதனை
கண்டிட நேரும்போது
விழிகள் மிதக்கிறது
கண்ணீரில்...

பசித்து வாடும் முகம்
கண்டால் நெஞ்சின் நிலை
மாறுகிறது பதபதைத்து
துடிக்கிறது மனசு ...

பாட புத்தகங்களை
வாசிக்கின்ற வயதில்
தினசரிகளை கையிலேந்தி...

கூவி கூவி விற்கும்
பிஞ்சுகள் எதிர்பட்டால்
நெஞ்சு வெடிக்கிறது...

பெண் குழந்தைகளின்
கிழிந்த ஆடைகளில்
சிதைந்து கிடக்கும்
தேசத்தை...

கண்டும் காணாத
சமூகங்கள் கொடிபிடித்து
கூறுகிறது இது நமது
இந்தியாவென்று...

ஒன்றுக்காக ஒன்றையும்
நாளைக்காக
மற்றொன்றையும்
மறந்தும் திரித்தும் பேசும்...

ஒன்று என்பதை உடைக்கும்
உதவாத உபகரணங்கள்
உயிர்த்தென்ன
மரித்தென்ன...?



**கவிஞர் முத்தையா மோகன்**
கோயம்புத்தூர்



அவளைப் பற்றித்
தெரியாத வரையில்
அறிய முற்படுகிறார்கள்.
தெரிந்தப்பின் தானாகவே
விலகிக் கொள்கிறார்கள்.

அவள் வந்த பாதையில்
இதுபோல எத்தனையோ
முட்களைப் பார்த்தவள்.
ஆனால், ஒரு முள்
குத்தியதில்லை.
ஒவ்வொரு முள்ளாய்
குத்தி இருக்கிறது.



பீறிட்டு
வழியும்
குருதியின்
கவுச்சி
வாடையோடும்
இரணங்களோடும்
வழிநெடுக தீட்டுகிறாள்
காவியமாக...

**துங்கன்,** கோயம்புத்தூர்

## துரோகி

நான் உன் தோள்சாய்ந்து
அழும்போதெல்லாம்
ஆறுதல் வார்த்தைகள் நீ
சொல்வாய் அப்புறம்தான்
தெரிந்தது என் அழுகைக்கு
காரணமான
அந்த
துரோகியே
நீதான்னென்று.



**நாகை ஆசைத்தம்பி**
கோவை



எள்ளு பூத்தால் ஏழைகள்
வருமை போகும்...
சொரக்காய் காய்த்தால்
ஏழைகள் பசி நீங்கி
போகும்...!

தும்பை பூ பூத்தால் தலைவலி
நீங்கி போகும்... தூதுவளை
உண்டால் பினி நீங்கி
போகும்...

கத்தாளை கால் ஆணி
கரைந்து போகும்...
மருதாணி தலையில்
வைத்தால் உடல் குளிர்ந்து
போகும்....

சீக்கா காய் நம் கையிருக்க
தலை சிக்கள் நீங்கிபோகும்..
வெந்தயம் உண்டு வந்தால்
உஸ்டணம் பறந்து போகும்...

நம் வீட்டு
வைத்தியமே...
வாழ்க்கை
சிறப்பாகும்...!!



**பொன். கருணா**
நவி மும்பை



## உலகம்

அழகிய நாடக மேடை,
அதில் அரும்பிடும் ஆயிரம்
பாதை, பாதையில் நடமிடும்
நேரம், அனுபவம் ஏற்றிடும்
தீபம், தீப ஒளியை மனம்
பார்க்கும், மாய வலையில்
நமை ஈர்க்கும், தேகம்
முழுதும் பொய்யாகும்.

இதைக் காலம் உணர்த்தி
மெய்யாக்கும், இந்த ஞான
ஒளியைக் கண்டுகொள்ள,
தினம் ஊன நடையில்
நடந்து
செல்ல, இது
அழகிய
நாடக
மேடை,
இதில்
அரும்பிடும்
ஆயிரம் பாதை.



**எஸ். தயாளன்**
காட்பாடி சேவூர்

## வசந்தம் வந்தது

வசந்தத்தின் கதவுகள்
திறந்தது, இதயத்தின்
கனவுகள் மலர்ந்தது,
உதயத்தில் ஒளிகள்
பிறந்தது, ஒளியினில்
காட்சிகள் இணைந்தது.


இனிவரும் காலம்
இனிமையின் கோலம்,

இருள்வரும் நேரம்
வளர்பிறையாகும்.
இருவிழிபாடும் இன்னிசை
கீதம், இமைகளினோரம்
பெருமிதம் சேரும், எழில்மிகு
பூமியின் ஆட்டத்திலே,
ஆடிடும் மக்கள்
கூட்டத்திலே, நறுமலர்
எழில்பெறும் தோட்டத்திலே,
நறுமணம் சுகம்தரும்
சுவாசத்திலே, என்முகம்
மலர்ந்திடும் மலராய், என்
மனம் எழுந்திடும் மணமாய்,
எனவசந்தத்தின்
கதவுகள்
திறந்தது.

என்
இதயத்தின்
கனவுகள்
மலர்ந்தது.



**மீனாட்சி பாண்டியன்**
திருவண்ணாமலை



## கோவில் !

கோவிலை சுற்றி மூன்று
முறை வலம் வந்து
விட்டேன்...

(கைப்பேசி உபயோகிக்காதீர் )
என்ற அறிவிப்பின் கீழ்...
ஒருவர் செல்போனில்
யாருடனோ பணம் கேட்டு
சத்தம் போட்டு பேசுகிறார்....

இரு இளம் வயது பெண்கள்
கோவிலை சுற்றி சுற்றி வந்து
செஃல்பி எடுக்கிறார்கள்... !

ஒரு புதுமண தம்பதி
கடவுளின் கர்ப்ப கிரகம்
தெரியும்படி
தங்களை
சேர்த்து
செஃல்பி
எடுக்கிறார்கள்...

கடவுளின்
கையில் செல்ஃபோனை
கொடுத்திருந்தால்...
அவரும் இறங்கி
வந்திருப்பாரோ என்று என்ன
தோன்றுகிறது !



**எம்.பி.தினேஷ்.**
கோவை

## தற்கொலை செய்யும் கனவுகள்!

தற்கொலை செய்யும் கனவுகள் பலருக்கும்
தற்செயலாக வருவதுண்டு வியப்பாக இருக்கும்!

உள்ளத்து உணர்வுகளே கனவாக வரும்
ஒருபோதும் தற்கொலை எண்ணம் வேண்டாம்!

உலகில் விலைமதிப்பற்றது நம் உயிர்
ஒருவரும் உலகில் தற்கொலை செய்யாதிருக்க வேண்டும்!

கோடிப்பணம் கொட்டிக் கொடுத்தாலும் யாரும்
கூத்தாடினாலும் மாண்ட உயிர் திரும்பாது!

தற்கொலை எண்ணம் என்பது கோழைத்தனம்
தரணியில் வாழ்வாங்கு வாழ்ந்திடல் வேண்டும்!

தற்கொலை என்பது என்றும் தீர்வாகாது
தன்னம்பிக்கை இருந்தால் தரணியில் வாழலாம்!

துன்பத்திற்காக தற்கொலை செய்வது என்றால்
தரணியில் ஒருவரும் வாழ முடியாது!

இழப்பிற்காக தற்கொலை செய்வது என்றால்
இழப்பின்றி இவ்வுலகில் ஒருவரும் இல்லை!

வாழ்க்கை என்பது போராட்டம் தான் அதனை
வசமாக்கிப் போராடி வென்றிட வேண்டும்!

சோகங்களுக்கு தற்கொலை தீர்வாகி விடாது
சோகம் மறந்து சாதிக்க வேண்டும்!

எதிர்நீச்சல் போன்றது தான் இந்த வாழ்க்கை
எதிலும் போராடி வென்றிட வேண்டும்!

இரவு பகல் மாறி வருவது போலவே
இன்பம், துன்பம் இரண்டும் உண்டு வாழ்வில்!

எனக்கு மட்டும் தான் இப்படி நடக்கின்றது
என்று எல்லோரும் நினைத்து வருகின்றனர்!

உலக மனிதர்கள் யாவருக்கும் துன்பமுண்டு
உலக நியதியை உணர்ந்திட வேண்டும்!

துன்பமில்லாத மனிதன் உலகில் இல்லை
துன்பத்திற்குத் துவளாத உள்ளம் வேண்டும்!

இயற்கை வழங்கிய இந்த இன்னுயிர்
இயற்கையாகவே பிரிந்திட வேண்டும்!



**கவிஞர் இரா. இரவி**

## விசுவாசம்

தன்னைக் காட்டிலும்
புகழுச்சிக்குப் போவதை
விரும்பாத புல்லுருவிகள்
உடனிருந்தே நெறிபிறழும்
ஆலோசனைகள் நல்குவர்
பாதிப்படைவது நீர்தானே!

நட்போ உறவோ தரும்
தவறான யோசனைகள்
பாதாளத்தில் தள்ளும்
மீண்டெழுந்திட முடியாத
புதைகுழிக்கு இரையாவர்
துரோகியை
விரைவில்
அறிந்திடு
விவேகியை
உடன்
வைத்திரு
வாழ்க்கை
பூந்தோட்டமாகும்.



**பி. பழனி,**சென்னை.

ஒரு காற்றில் தூசி போலப்
பறந்து விடுகிறது..
ஒரு சாரலில் நனைந்து
பின்னொரு ஒளிக்கதிரில்
உலரும் என்
மனம்
உன்
பார்வையில்
உணர்கிறது
இத்தனையும் !



**ரிஷபன்**

## மீண்டும்...

உழைக்காமல் போன...
காலத்திற்கும்...
சேர்த்து உழைக்கச்
செய்கின்றன..... தேவைகள்...

பகற்பொழுதில்
உடலுழைப்பைச்
செலுத்துபவர்களுக்கு...
ஒய்வுத் திருவிழாவாக...
அமைகின்றன....இரவுகள்.....

## புதுவாழ்வு...

ஏகாந்தமாய் பூனை உறங்கிய
விறகு அடுப்புகள்...

புத்துயிர் பெறுகின்றன...
எரிவாயு பற்றாக்குறை...

மனிதனின்
கண்டுபிடிப்புகள்... எப்போது
வேண்டுமானாலும்...
கைவிடக்கூடும்....

எப்போதும்
மனிதர்களை
அரவணைத்துக்
கொள்வது...
இயற்கையின்
பெருங்கருணை...



**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி



## மகளிர் மகிமை

கடவுளின் படைப்பில்
"அன்பான" "அற்புதமான"
பெண்ணே !

வலிமைமிக்க உள்ளத்தால்
எவ்வலியையும்
"தாங்கிக்கொண்டு"
வழிநடத்தும் பெண்ணே !

எந்தச் சூழலிலும்
ஆண்களுக்கு "துணையாக"
பல ரூபம் எடுக்கும்
பெண்ணே !

நீங்கள் என் வாழ்வில்
"தாயாக" "சகோதரியாக"
"மனைவியாக" "மகளாக"
"தோழியாக" பல உறவுகளில்
துணை புரியும் பெண்ணே !
என் கண்ணே !

மகளிர் தின வாழ்த்துக்களை
ஒரு "வரிகளில்" வாழ்த்தி
எழுதினால் போதாது !

"ஓராயிரம்" வரிகளில்
உங்களை வாழ்த்தி
எழுதினாலும்
உங்கள் "அன்பின் அருமை "
எண்ணிலடங்காது !

இதற்கு மேல் எனக்கு எழுதத்
தெரியாது !

என் வாழ்வில் வந்த
"பெண்மணிகளே" நீங்கள்
இல்லையேல் எனக்கு
உயிரேது !

மகளிர்க்கான
தினம் என்பது
"ஒவ்வொரு
நாளும்"
உண்டெண்பதை
உணர்ந்து வணங்கி "மகளிர்
தின" வாழ்த்துக்களை
வாழ்த்தி எழுதுகிறேன் !




**G.A.கோவிந்தராஜ் (எ)சுரேஷ்குமார்**
திருப்புவனம் புதூர்


கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI
ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


ManjalMart
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Call:7871617005


Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS
MONEY BACK GUARANTEE


just499
REAL ESTATE
SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009


WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990


ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247


WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/-
& Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367


WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349


ஐஸ் கடை
வேலைக்கு ஆட்கள்
தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998




# WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift

7540003588























# ST COURIER

The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601

Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs













FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


ADIYOGI
REAL ESTATE
WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
MK REAL ESTATE
JOINT VENTURES INVITED
Call :7871617005


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மிக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மிகத்தை
அறியுங்கள்..


LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009


MLMPERFECT.COM
Start Any MLM
Software @
Rs.499/Month
+ EMI Available
EMI
Trusted by
1000+
satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337/7436914247


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package
Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfollo to
padmamediapublications@gmail.com
Call: 9337501889
பாஸ்கர்
பேப்பர்பாய்
தெய்வம்
தமிழ்நாடு இபேப்பர்.காம்



# பல்சுவை களஞ்சியம்




# முளைகட்டிய தானியங்கள்



**முளைகட்டிய கொண்டைக்கடலை**

முளைகட்டிய கொண்டைக் கடலையில் ஃபோலிக் அமிலத்துக்கு அடிப்படையான ஃபோலேட்டும், மக்னீசியமும் போதுமான அளவில் உள்ளது. இரும்புச்சத்து, சோடியம், செலினியம், துத்தநாகம், மாங்கனீசு, தாமிரம் போன்ற கனிமச்சத்துகள் உள்ளன. இது மாரடைப்பு காரணிகளைத் தவிர்க்கிறது.

முளைகட்டிய கொண்டைக் கடலையை வேகவைத்து சாப்பிடுவது கர்ப்பிணிகளுக்கு மிகவும் நல்லது. இதனால் அவர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்து கிடைக்கிறது. ஆன்ட்டி ஆக்சிடென்ட் மற்றும் நார்ச்சத்து அதிகம் இருக்கிறது. நீரிழிவு நோயாளிகள் தொடர்ந்து எடுத்து வந்தால் சர்க்கரையின் அளவைக் கட்டுக்குள் வைக்க முடியும்.

**முளைகட்டிய தட்டை பயறு**

முளைகட்டிய தட்டை பயறில் கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச்சத்து மற்றும் வைட்டமின் பி காம்ப்ளெக்ஸ், ரிபோஃபிளேவின் போன்ற சத்துக்கள் அதிக அளவில் இருக்கிறது. இது உடலுக்கு நல்ல ஊட்டத்தை அளிக்கிறது. முளை கட்டிய தட்டை பயறுகளில் நார்ச்சத்து அதிக அளவில் இருப்பதால் உடல் எடையை குறைக்க உதவுகிறது.

மேலும் இதில் வைட்டமின் ஏ, ஆன்ட்டி-ஆக்சிடென்ட்டுகள், ஃப்ளேவனாய்டுகள், பொட்டாசியம் மற்றும் மக்னீசியம் போன்ற கனிமங்கள் மற்றும் கரையா நார்ச்சத்து அதிகம் அடங்கியிருக்கிறது. இத்துடன் அதிக அளவு நார்ச்சத்தும், புரதமும் இருப்பதால் மலச்சிக்கல் பிரச்னைகள் நீங்கி, வயிறு சம்பந்தப்பட்ட செரிமானம், மற்றும் வயிற்றுக் கோளாறுகளுக்கு சிறந்த உணவாக முளைகட்டிய தட்டை பயறு இருக்கிறது.

**முளைகட்டிய சோயா பயறு**

முளைகட்டிய சோயா பயறை எடுத்துக்கொள்ளும்போது உடலில் கொலஸ்ட்ரால் அளவு குறைகிறது. குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கு உதவுகிறது. ஹார்மோன் பிரச்னைகளுக்கு உள்ளான பெண்கள் இதை தொடர்ந்து சாப்பிட்டு வரலாம். இதில் புற்றுநோயை வராமல் தடுக்கும் மூலக்கூறுகள் உள்ளது.

இதில், புரதம், கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு ஃபோலிக் ஆசிட், ஒமேகா 3 வகை கொழுப்பு, மாவுச்சத்து, தயாமின், ரிபோஃபோமின், பீட்டா கரோட்டின், மெக்னீசியம், தாமிரம், துத்தநாகம் போன்ற ஊட்டச்சத்துக்கள் அடங்கியிருக்கிறது.

(சோயா பயறு வகையை ஊற வைத்து முளைகட்டி சாப்பிடும்போது அதை நன்றாக வேக வைத்து பயன்படுத்த வேண்டும். இதை முளைகட்டிய சோயாவை நேரடியாக எடுத்துக் கொள்ளும்போது அஜீரண தொந்தரவுகள் இருக்கும்.)

**முளைகட்டிய உளுந்து**

முளை கட்டிய உளுந்தை வேகவைத்து சாப்பிடும்போது உடல் சோர்வு நீங்கி, உற்சாகம் தரும் உணவாக உளுந்து இருக்கிறது. குறிப்பாக, நோயின் தாக்கத்திலிருந்து விடுபட்டவர்களின் உடல் சோர்வாக இருக்கும். அவர்கள் வலுப்பெறுவதற்கு உளுந்து உதவுகிறது. இது எலும்பு, தசை, நரம்புகளுக்கு ஊட்டமளிக்கிறது. மன அழுத்தத்தை போக்கி தூக்கமின்மை பிரச்னையை தீர்க்கிறது. இதில் அதிக அளவு புரதம் உள்ளது. பொட்டாசியம், கால்சியம், இரும்பு, நியாசின், தியாமின், ரிபோஃப்ளேவின், அமினோ அமிலங்களும் நிறைந்து காணப்படுகிறது.

# முளைகட்டிய பயறு செய்யும் முறை



பச்சைப்பயறு 100 கிராம் அளவு எடுத்துக்கொண்டு அதனை ஒரு பாத்திரத்தில் நன்றாக நீரில் ஊற வைக்க வேண்டும். 10 மணி நேரம் ஊறவைத்து, பின்பு தண்ணீரை வடிகட்டி பயரினை ஒரு நல்ல சுத்தமான காட்டன் துணியில் வைத்து கட்டிவிட வேண்டும்.

பின்பு 12 மணிநேரம் கழித்து பார்க்கிறபோது முழுவதுமாக முளை கட்டிய பயறு தயாராகிவிடும். முளை கட்டிய தானியங்களை பயன்படுத்தும் போது அதனுடைய முழுமையான புரதச்சத்தை நாம் பெறமுடியும் ஏனெனில் முளைகட்டுவதால் அதில் அதிகஅளவு புரதச்சத்து இருக்கும்.

**எப்படி சாப்பிட வேண்டும்?**

முளைகட்டிய தானியங்களை நேரடியாக சாப்பிடுவதென்றால் குறைந்த அளவு சாப்பிடுவது நல்லது. ஏனெனில், இது செரிமானம் அடைவதற்கு கொஞ்சம் நேரம் எடுத்துக்கொள்ளும். சில நேரங்களில் வயிறு உபாதைகள் ஏற்படவும் வாய்ப்பிருக்கிறது. உதாரணமாக, வயிற்றுப் பொருமல், வயிறு உப்புசம், ஜீரணம் ஆகாமல் அடிக்கடி ஏப்பம் வருதல், சில நேரங்களில் வயிறு இரைந்து பேதி செல்லல் போன்றவைகள் ஏற்படலாம்.

அதனால் முளைகட்டிய தானியங்களை லேசாக வேகவைத்து சாப்பிட்டால் ஒருவர் 50 கிராம் அளவு வரை சாப்பிடலாம். குறிப்பாக முளை கட்டிய பயறு வகைகளை சாப்பிட காலை நேரம் உகந்தது. மாலை வேளையிலும் தேநீர் சாப்பிடும் நேரத்தில் உட்கொள்ளலாம்...

லால்குடி
**வெ.நாராயணன்**
மாம்பாக்கம் சென்னை

# மீம்ஸ்

கல்யாணம் பண்ணிக்கிட்டா நாத்தனார் சண்டைதான் வருது...



எவனுக்காவது மச்சினிச்சிக்கிட்ட சண்டை வருதா...
யோசிக்கனும் மக்களே...




# விடுகதை



| | |
|---|---|
| பொட்டுப்போல் இலை இருக்கும், பொரிபோல் பூப் பூக்கும், தின்னக்காய் காய்க்கும், தின்னாப் பழம் பழுக்கும் அது என்ன? | முருங்கைமரம் |
| என்னைப் பார்க்க முடியும், ஆனால் எனக்கு எடை கிடையாது. என்னை ஒரு பாத்திரத்தில் போட்டால் அதன் அளவை குறைத்திடுவேன். நான் யார்? | துவாரம் |
| தொட்டு விட்டால் மூடிக் கொள்ளும் பச்சை மாளிகை ஜன்னல்கள் அது என்ன? | தொட்டா சுருங்கிச் செடி |
| அந்திவரும் நேரம், அவளும் வரும் நேரும் அது என்ன? | நிலா |
| பூமியிலே பிறக்கும், புகையாய்ப் போகும். அது என்ன? | பெட்ரோல் |

# ஜோக்ஸ்



"ஒன்னுமே தெரியாத ஸ்டுடண்ட் (students ) கிட்ட கொஸ்டின் பேப்பர் (questions papers ) கொடுக்குறாங்க..."

"எல்லாம் தெரிஞ்ச வாத்தியார் கிட்ட ஆன்சர் பேப்பர்(answer papers ) கொடுக்குறாங்க..."

"என்ன கொடும சார் இது?...."

================================================


"உங்க வீட்ல சிரிப்பு சத்தமாயிருக்கே, ஏன்?"

"எங்க வீட்டு டிவி ரிப்பேர், அதுதான்!"

================================================

"அந்தக் கட்சிக் கூட்டத்தில எல்லோரும் சேர்ந்து அழறாங்களே , ஏன்?"

"அங்கே 'துயர் மட்டக் குழு கூட்டம்' நடக்குதாம்"



================================================

"இன்னைக்கு நான் ஆபீஸ்ல பட்டினி கிடந்து வேலை செஞ்சேன்"

"அவ்வளவு பிசி ஒர்க்கா?"

"இல்ல; சாப்பாட்டு நேரத்தில என்னை யாரும் எழுப்பிவிடலை"

================================================

"தொழில் படுத்திடுச்சின்னீங்களே , என்ன தொழில்?"

"பாய் வியாபாரம்!"

================================================

டாக்டர்: "நீங்க உடம்பைக் குறைக்கணும்; இனிப்பைக் குறைக்கணும்; காரத்தைக் குறைக்கணும்"

நோயாளி: "டாக்டர், நீங்க ஃபீசை குறைக்கணும்"

================================================

ஒருவர்: "தாமஸ் ஆல்வா எடிசன் பல புதிய கண்டுபிடிப்புக்களைக் கண்டுபிடிக்காமலிருந்தால் என்னவாயிருக்கும்?"

மற்றவர்: "வேற ஒருத்தர் கண்டுபிடிச்சிருப்பார்"

# வாங்க சம்பாதிக்கலாம்



## எழுதுபொருள் நிறுவனத்தில் வேலை




தமிழக எழுதுபொருள், அச்சகத்தில் காலியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.
மெஷின் டெக்னீசியன் 10, எலக்ட்ரீசியன் 4, மெக்கானிக் 8, பிளம்பர் 1 என மொத்தம் 23 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: ஐ.டி.ஐ.,/டிப்ளமோ
வயது: 18-32 (8.4.2026ன் படி)
தேர்ச்சி முறை: ஸ்கில் தேர்வு / சான்றிதழ் சரிபார்ப்பு
விண்ணப்பிக்கும் முறை: விண்ணப்பத்தை பதிவிறக்கி, பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
The Commissioner, Department of Stationery and Printing, Commissioner's Office, 110, Anna Salai, Chennai - 600 002.
கடைசிநாள்: 8.4.2026
விவரங்களுக்கு: stationeryprinting.tn.gov.in

## நிலக்கரி நிறுவனத்தில் 667 காலியிடங்கள்




மத்திய அரசின் கீழ் செயல்படும் மகாநதி நிலக்கரி நிறுவனத்தில் (எம்.சி.எப்.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
ஜூனியர் ஓவர்மேன் 192, மைனிங் 448, சர்வேயர் 24 உட்பட மொத்தம் 667 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பிளஸ் 2 / டிப்ளமோ
வயது: 18-30 (6.4.2026ன் படி)
தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 1180. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 6.4.2026
விவரங்களுக்கு: mahanadicoal.in

## வானியல் நிறுவனத்தில்



'நேஷனல் சென்டர் பார் ரேடியோ அஸ்ட்ரோபிசிக்ஸ்' நிறுவனத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
அட்மின் டிரைனி 10, இன்ஜினியர் டிரைனி 5, டெக்னிக்கல் டிரைனி 6, டெக்னிக்கல் டிரைனி 3, சயின்டிபிக் அசிஸ்டென்ட் 3, கிளர்க் 3 உட்பட மொத்தம் 38 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: ஐ.டி.ஐ.,/டிப்ளமோ/ பி.இ., / பி.டெக்., / டிகிரி
வயது: 18-28 (20.3.2026ன் படி)
தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு/ ஸ்கில் தேர்வு/சான்றிதழ் சரிபார்ப்பு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
கடைசிநாள்: 20.3.2026
விவரங்களுக்கு: ncra.tifr.res.in

## என்.எல்.சி., நிறுவனத்தில் சுகாதார ஆய்வாளர் தேவை



நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் (என்.எல்.சி.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.
'சுகாதார ஆய்வாளர்' பிரிவில் மொத்தம் 16 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: தொடர்புடைய பிரிவில் டிப்ளமோ
வயது: 18-30 (2.4.2026ன் படி)
தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு.
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 486. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 236
கடைசிநாள்: 2.4.2026
விவரங்களுக்கு: nlcindia.in

## தேசிய உயிரியல் மையத்தில் லேப் டெக்னீசியன் பணி



தேசிய உயிரியல் மையத்தில் (என்.ஐ.பி.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
லேப் டெக்னீசியன் 25, சயின்டிஸ்ட் 3, ஜூனியர் சயின்டிஸ்ட் 12, அட்மின் அசிஸ்டென்ட் 1, உதவியாளர் 2, ஹிந்தி மொழிபெயர்ப்பாளர் 1 என மொத்தம் 44 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பிளஸ் 2 / பட்டப்படிப்பு (இளநிலை, முதுநிலை)
வயது: 18 -30 , 18 - 45 (8.4.2026ன் படி)
தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, ஸ்கில் தேர்வு.
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன். பின் இதை பிரின்ட் எடுத்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
The Director, National Institute of Biologicals, A- 32, Sector-62, Institutional Area Noida, U.P- 201 309.
கடைசிநாள்: 8.4.2026
விவரங்களுக்கு: nib.gov.in

## சிறுதொழில் நிறுவனத்தில் உதவியாளர் வாய்ப்பு



தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தில் (டான்சி) காலியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.
அலுவலக உதவியாளர் 7, டிரைவர் 4 என மொத்தம் 11 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: எட்டாம் வகுப்பு, டிரைவிங் லைசன்ஸ்
வயது: 18-34 (31.3.2026ன் படி)
தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு, நேர்முகத்தேர்வு.
விண்ணப்பிக்கும் முறை: இணைய தளத்தில் உள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கி, பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
Tamil Nadu Small Industries Corporation Limited (TANSI), No. 28, Thiru Vi Ka Industrial Estate, Guindy, Chennai - 600 032.
கடைசிநாள்: 31.3.2026
விவரங்களுக்கு: tansi.tn.gov.in

# பங்குச் சந்தை முதலீட்டாளர்களுக்கு ரூ.31 லட்சம் கோடி இழப்பு

மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் போர் பதற்றம் மற்றும் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்வு காரணமாக, இந்தியப் பங்குச் சந்தைகளில் நேற்று கடும் வீழ்ச்சி ஏற்பட்டது. இதனால், ஒரே நாளில் முதலீட்டாளர்களுக்கு சுமார் ரூ.12.78 லட்சம் கோடி அளவுக்கு இழப்பு ஏற்பட்டது.

வர்த்தக நேர இறுதியில் மும்பை பங்குச்சந்தை குறியீட்டெண் சென்செக்ஸ் 1,352 புள்ளிகள் சரிந்து 77,566 புள்ளிகளாக நிலைபெற்றது. தேசிய பங்குச் சந்தை குறியீட்டெண் நிஃப்டி 422 புள்ளிகள் சரிந்து 24,028 புள்ளிகளில் நிலைகொண்டது. பொதுத் துறை வங்கிகளின் பங்குகள் சுமார் 3.97 சதவீதம் சரிவைக் கண்டன.

இதுபோல வாகனத் துறை பங்குகள் குறியீடு 4% வரை சரிந்தது. எனினும், தகவல் தொழில் நுட்பத் துறை பங்குகள் மட்டும் ஓரளவுக்கு சரிவில் இருந்து மீண்டு ஏற்றத்துடன் வர்த்தகம் ஆனது. கடந்த பிப்ரவரி 28ம் தேதி அமெரிக்கா - ஈரான் இடையே போர் தொடங்கியதில் இருந்து இதுவரை முதலீட்டாளர்களின் சொத்து மதிப்பில் சுமார் ரூ.31 லட்சம் கோடி அளவுக்கு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

போர்ச் சூழல் காரணமாக ஏற்பட்டுள்ள நிச்சயமற்ற தன்மையால் வெளி நாட்டு முதலீட்டாளர்கள் இந்தியச் சந்தையில் இருந்து தங்கள் முதலீடுகளைத் தொடர்ந்து திரும்பப் பெற்று பெறுவது சந்தையின் செயல்பாட்டை வெகுவாக பாதித்துள்ளது.

## தங்கம் விலை பவுனுக்கு ரூ.560 உயர்வு



சென்னையில் நேற்று காலை வர்த்தகம் தொடங்கியதும் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.70 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.15,120-க்கும், பவுனுக்கு ரூ.560 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.1,20,960-க்கும் விற்பனை ஆகிறது. 24 காரட் தங்கம் விலை பவுனுக்கு ரூ.616 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.1,31,960-க்கு விற்பனை ஆகிறது. 18 காரட் தங்கம் விலை பவுனுக்கு ரூ.480 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.1,03,600-க்கு விற்பனை ஆகிறது.

வெள்ளி விலை இன்று மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.300-க்கும், கட்டி வெள்ளி ஒரு கிலோ ரூ.3,00,000-க்கும் சந்தையில் விற்பனை ஆகிறது. பிளாட்டினம் விலை கிராமுக்கு ரூ.133 குறைந்து, ஒரு கிராம் ரூ.6,459-க்கு விற்பனை ஆகிறது.

## ஈரான் போர் தாக்கம்: இந்திய ஏற்றுமதி துறைக்கு ரூ.92,000 கோடி பாதிப்பு

அமெரிக்கா, இஸ்ரேல் - ஈரான் இடையே தொடர்ந்து நீடிக்கும் போர் காரணமாக, ஹார்முஸ் நீரிணை பகுதியில் சரக்கு கப்பல் போக்குவரத்து தடைபட்டுள்ளதால் கச்சா எண்ணெய் விலை பன் மடங்கு உயர்ந்து வருகிறது.

இது அனைத்து துறைகளின் வளர்ச்சியிலும் பாதிப்பை ஏற்படுத்தும். மத்திய கிழக்கில் நடைபெறும் இந்த போர் பதற்றம் காரணமாக, இந்தியாவின் சரக்கு ஏற்றுமதி ரூ.75 ஆயிரம் கோடி முதல் ரூ.92 ஆயிரம் கோடி வரை பாதிப்பை சந்திக்கக்கூடும் என்று ஏற்றுமதியாளர்கள் சங்கங்கள் தெரிவித்துள்ளன. மேற்கு ஆசியாவில் நிலவும் மோதல் சூழல் ஏற்கெனவே ஆர்டர்கள், கப்பல் கட்டணம் மற்றும் சரக்கு நகர்வுகளை பாதித்து வருவதாக அவர்கள் கூறுகின்றனர்.

இந்த இடையூறுகள் தொடர்ந்தால், மார்ச் மாத ஏற்றுமதியிலும், ஒட்டு மொத்த 2026 நிதியாண்டின் ஏற்றுமதி புள்ளி விவரங்களிலும் இதன் தாக்கம் வெளிப்படையாகத் தெரியும் என்று தொழில் துறை பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். சரக்கு போக்குவரத்து செலவு கடுமையாக உயர்ந்துள்ளதாகவும், கப்பல் நிறுவனங்கள் ஒரு ஷிப்மெண்டுக்கு ரூ.1.38 லட்சம் முதல் முதல் ரூ.3.69 லட்சம் வரை கூடுதல் கட்டணம் விதிப்பதாகவும் ஏற்றுமதியாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.




இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்

whatsapp No
8122664699

## நிகழ்வுகளின் பூ.மாலை




**நெல்லை, மார்ச் 12:** தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக நடைபெற்றுவரும் திருக்குறள் திருப்பணிகள் திட்டத்தில் நெல்லை மாவட்டம் கவிஞர் பேரா நடத்திய 30-வார நிகழ்வுகளையும் தொகுத்து "நிகழ்வுகளின் பூ.மாலை"என்ற தலைப்பிட்ட நூல் 07.03.2026 மாலையில் பாளையங் கோட்டையில் கவிஞர் பேரா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வெளியிடப்பட்டது.

நெல்லை மண்டிலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் பெ.இளங்கோ வெளியிட,முதல் படியை அரசு அருங்காட்சியக காப்பாட்சியர் பா.ஜென்சி பெற்றுக்கொண்டார்.

மாநிலத்திலேயே முதன் முதலாக நிகழ்ச்சிகளை முடித்ததோடு, அதனை ஆவணமாக மிகக்குறைந்த நாளில் நூலாக அச்சிட்டு வெளியிட்டு அனைவரின் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார் கவிஞர் பேரா.

## ஒரு சவரனுக்கு 640 ரூபாய் சரிந்து



ஒரு சவரனுக்கு 640 ரூபாய் சரிந்து, ஒரு சவரன் ஒரு லட்சத்து 20,960 ரூபாய்க்கு விற்பனை ஆனது. ஒரு கிராமுக்கு 80 ரூபாய் குறைந்து, 15,120 ரூபாய்க்கு விற்பனை ஆனது. சென்னையில் வெள்ளி விலையில் மாற்றமில்லை. ஒரு கிராம் 295 ரூபாய்க்கும், ஒரு கிலோ இரண்டு லட்சத்து 95,000 ரூபாய்க்கும் விற்பனை ஆனது.

## வனத்துறை எச்சரிக்கை




ஆனைமலை அடுத்த ஆழியார் சின்னார்பதி அருகே அடிக்கடி சாலையில் ஊசிக்கொம்பன் காட்டு யானை உலா வருவதால் சுற்றுலா பயணிகளுக்கு பாதுகாப்பாக பயணம் மேற்கொள்ளுமாறு வனத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

## புதிய முறைக்கு மாறும் ஹோட்டல்கள்



காஞ்சிபுரத்தில் புதிய முறைக்கு மாறும் ஹோட்டல்கள் கட்டையை பயன்படுத்தி ப்ளோயர் அடுப்பு மூலம் உணவு தயாரித்து வருகின்றனர். காஞ்சிபுரத்தில் பிரபல சரவணா பாலா உணவகத்தில் கேஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டையொட்டி புதிய வரவாக வந்துள்ள கட்டையை பயன்படுத்தி ப்ளோயர் அடுப்பு மூலம் உணவக தயாரிப்பு செய்யப்பட்டு வருகிறது.

## மாசி மாதம் தேய்பிறை அஷ்டமி சிறப்பு வழிபாடு



**திருவண்ணாமலை, மார்ச் 12:** மாவட்டம் மார்ச் 11 துரிஞ்சாபுரம் ஒன்றியம் வேடந்தவாடி ஊராட்சியில் அமைந்திருக்கும் வேதமா எனும் நகரில் ஸ்ரீ வேதநாயகி உடனமர் வேதநாத ஈஸ்வரர் திருக்கோயில் அமைந்திருக்கும் சர்வ வேத பைரவருக்கு மாசி மாதம் தேய்பிறை அஷ்டமியை முன்னிட்டு ராமன் ஐயர் அவர்களால் சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர், இளநீர், பன்னீர்,சந்தனம், தேன்,பஞ்சாமிர்தம், வெட்டிவேர் வாசனை திரவியங்களால் சிறப்பு அபிஷேகங்கள் வண்ண மலர் மாலைகளால், செவ்வரளி மலர் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் சர்வ வேத பைரவரை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## திட்டக்குடியில் உதயநிதி ஸ்டாலின் சுற்றுப் பயணம்
# தொகுதி வாரியாக மாஸ் ப்ளான்



**கடலூர், மார்ச்.12:** திட்டக்குடி விருத்தாசலம் தொகுதி வாரியாக சுற்றுப் பயணம் செல்லும் உதயநிதி ஸ்டாலின், கட்சி நிர்வாகிகள் உள்பட பல்வேறு தரப்பு பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்.

சட்டமன்றத் தேர்தலை எதிர் கொள்வதற்கு ஆளும் கட்சியான திமுக முழு வீச்சில் தயாராகி வருகிறது. தமிழகத்தில் உள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளையும் எட்டு மண்டலங்களாக பிரித்து தேர்தல் பணிகளுக்காக பொறுப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு தொகுதிக்கும் மேற்பார்வையாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதனிடையே ஓரணியில் தமிழ்நாடு என்ற உறுப்பினர் சேர்க்கைஇயக்கத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையில் தொடங்கி வைத்தார். தமிழகம் முழுவதும் வீடு வீடாக சென்று உறுப்பினர் சேர்க்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு துணை முதல்வரும் இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் திட்டக்குடி விருத்தாசலம் சட்டமன்ற தொகுதி வாரியாக திமுக நிர்வாகிகளை சந்தித்து ஆலோசனை நடத்தினார். திட்டக்குடி சட்டமன்ற தொகுதி வாரியாக ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழகங்களைச் சேர்ந்த பாக முகவர்கள் உள்ளிட்ட நிர்வாகிகளை சந்தித்து சட்டமன்ற தேர்தல் தொடர்பாக ஆலோசனை நடத்தினார்.

ஓரணியில் தமிழ்நாடு பரப்புரையில் சிறப்பாக செயல்பட்ட பத்து நிர்வாகிகளை பாராட்டு தெரிவித்து அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

குறிப்பாக அனைவரின் கருத்துக்களையும் கேட்கப்பட வேண்டும் என்கின்ற ஜனநாயக நோக்கத்தில் கருப்பு பெட்டி வைக்கப்பட்டு படிவங்கள் வழங்கப்பட்டிருந்தன. இதன் மூலம் நிர்வாகிகள் தங்களது கருத்துக்கள், கோரிக்கைகள் மற்றும் ஆலோசனைகள் விரிவாக பகிர்ந்து கொள்ள முடியும்.

கருத்து பெட்டியில் இருந்து உதயநிதி ஸ்டாலின் சில படிவங்களை தேர்ந்தெடுத்து அவை குறித்து நிர்வாகிகளுடன் உரையாடி அவர்களின் கேள்விகளுக்கும் பதில் அளித்தார்.

அதுசமயம் கடலூர் மேற்கு மாவட்ட செயலாளரும், தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராஜேந்திரன், விருத்தாசலம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார், விருத்தாசலம் நகர்மன்ற தலைவர் சங்கவி முருகதாஸ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாரதிராஜா, திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


## நாகூரில் விறகு அடுப்புக்கு மாறிய உணவகங்கள்

**நாகபட்டினம், மார்ச்.12:** சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக நாகூரில் விறகு அடுப்புக்கு மாறிய உணவகங்கள்.

இதனால் நாகூர் முழுவதும் 10 கிலோ விறகு ரூ.150-க்கு விற்பனை செய்யப்படுகிறதது.


நாகை மாவட்டத்தில் நிலவும் கடுமையான சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக, நாகூர் அலங்கார வாசல் பகுதியில் செயல்படும் உணவகங்கள் மாற்று ஏற்பாடாக விறகு அடுப்பு பயன்பாட்டிற்கு மாறியுள்ளன.





சென்னை நாசியார் திருக்கூலம் வெஸ்ட் மாம்பலம் ஆதிகேசவ பெருமாள் கோவில்

## மண்டல அபிஷேக பூஜையில் நம் வாசவி அம்மன் சிறப்பு அலங்காரத்தில்



**கள்ளக்குறிச்சி, மார்ச் 12:** ஸ்ரீ வாசவி கன்னிகா பரமேஸ்வரி அம்மன் திருக்கோயில் கும்பாபிஷேகம் முன்னிட்டு நடைபெறும் மண்டலாபிஷேகத்தில் 38-ஆம் நாளில் நம் வாசவி அம்மனுக்கு சந்தனத்தால் அபிஷேகம் அம்மன் ஆண்டாள் சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## 10-ம் வகுப்பு பொதுத்தேர்வு தொடக்கம்



தமிழகத்தில் 20252026 கல்வியாண்டுக்கான 10-ம் வகுப்பு பொதுத்தேர்வு நேற்று (மார்ச் 11) தொடங்கியது. இந்த தேர்வுகள் ஏப்ரல் 6 ஆம் தேதி வரை நடைபெற உள்ளன. ஒவ்வொரு பாடத் தேர்விற்கும் இடையில் போதிய இடைவெளி வழங்கப்பட்டுள்ளதால், மாணவர்கள் அந்த நேரத்தை பயன்படுத்தி அடுத்த தேர்வுகளுக்குத் தயாராகி அதிக மதிப்பெண்கள் பெறலாம் என கல்வியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## ரவுசு மணி

வாழ்க்கை நேர்மையாக உள்ளவனை அழ வைக்கிறது ....

நேரத்திற்கு தகுந்தாற் போல் மாற்றிப் பேசுபவனை வாழ வைக்கிறது...



V. முத்து ராமகிருஷ்ணன்

## நரிக்குறவர் மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் புதுவை தமிழ்ச் சங்க தலைவர் வழங்கினார்



**வந்தவாசி, மார்ச் 12:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தெள்ளார் இராஜா நந்திவர்மன் கலைக் கல்லூரியில் நரிக்குறவ மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு இராஜா நந்திவர்மன் கல்லூரி தலைவரும், புதுவை தமிழ்ச் சங்க தலைவருமான கலைமாமணி முனைவர் வி.முத்து தலைமை தாங்கினார். ஸ்ரீகிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன் முன்னிலை வகித்தார்.

கல்லூரி முதல்வர் முனைவர் இரா. ஏழுமலை வரவேற்றார். தெள்ளார் பகுதியில் வசிக்கும் நரிக்குறவர் குடும்பத்தினரை சேர்ந்த 50 மாணவர்களுக்கு நபர்களுக்கு புத்தாடைகள் மற்றும் எழுதுபொருட்கள் உள்ளிட்ட நலத்திட்டங்களை புதுவை தமிழ்ச் சங்கத் தலைவர் கலைமாமணி முனைவர் வி.முத்து வழங்கி சிறப்புரையாற்றினார்.

மேலும் திருவண்ணாமலை திருக்குறள் தொண்டு மைய நிறுவனர் பாவலர் ப.குப்பன் பங்கேற்று, திருக்குறளின் மேன்மைகளை பற்றியும், நரிக்குறவ மாணவர்கள் திருக்குறளை வாசிப்பதற்கான பயிற்சியையும் அளித்தார். மேலும் திருவள்ளுவர் வேடமணிந்து சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்வில் வட்டார வள மைய பொறுப் பாளர் பாலாஜி வாழ்த்துரை வழங்கினார். இறுதியில் கல்லூரி பொருளாளர் எஸ். பழனிச்சாமி நன்றி கூறினார்.

**பா. சீனிவாசன்,வந்தவாசி.**

## ஆண்டிகருப்பர் கோயில் மாசி திருவிழாவை முன்னிட்டு சதுரகிரி மலை அடிவாரத்தில் மஞ்சுவிரட்டு



மேலூர் அருகே கோயில் திருவிழாவையொட்டி மஞ்சுவிரட்டு போட்டி உற்சாகமாக நடைபெற்றது. இதில் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.கொட்டாம்பட்டி அருகே வெள்ளினிப்பட்டி கிராமத்தில் ஆண்டிகருப்பர் கோயில் மாசி திருவிழாவை முன்னிட்டு அப்பகுதியில் உள்ள சதுரகிரி மலை அடிவாரத்தில் நேற்று மஞ்சுவிரட்டு வெகு விமர்சையாக நடைபெற்றது.


# சுற்றுலா: தமிழ்நாட்டில் பார்க்க வேண்டிய இடங்கள்

தமிழ்நாட்டில் உள்ள 15 பிரபலமான இடங்களின் சுருக்கமான பட்டியலைக் காணலாம்

நேற்றைய தொடர்ச்சி....

8. தஞ்சாவூர்

மகத்தான கலாச்சார மதிப்புள்ள இடமான தஞ்சாவூர், கைவினைப்பொருட்கள், புடவைகள், பழங்காலப் பொருட்கள் மற்றும் ஓவியங்களுக்கு மிகவும் பிரபலமானது. தஞ்சாவூர் ஆண்டு முழுவதும் வெப்பமண்டல வானிலையை அனுபவிக்கிறது. உலோக சிற்பங்களுக்கு பெயர் பெற்ற தஞ்சாவூர், தமிழ்நாட்டில் பார்க்க வேண்டிய பாரம்பரிய இடங்களில் ஒன்றாகும்.



பார்க்க வேண்டிய இடங்கள்: பிரகதீஸ்வரர் கோயில், கும்பகோணம், தஞ்சாவூர் அரண்மனை, கங்கைகொண்ட சோழபுரம் மற்றும் விஜயநகர் கோட்டை

செய்ய வேண்டியவை: புகைப்படம் எடுத்தல், கலாச்சாரம் பற்றி அறிந்து கொள்வது, வரலாற்று இடங்களைப் பார்வையிடுவது.

9. மகாபலிபுரம்

சிற்பங்கள் மற்றும் வரலாற்று நினைவுச்சின்னங்களுக்கு பரவலாகப் பெயர்பெற்ற மகாபலிபுரம், தமிழ்நாட்டின் பிரபலமான இடங்களில் ஒன்றாகும். 7 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கடற்கரை கோயில்கள், யுனெஸ்கோ பாரம்பரிய தளமாகும், மேலும் அதன் சிக்கலான வடிவமைப்புகளுக்கு பெயர் பெற்றது. மாமல்லபுரம் நடன விழா ஆண்டுதோறும் டிசம்பர் முதல் ஜனவரி வரை சுற்றுலாத் துறையால் ஏற்பாடு செய்யப்படுகிறது.

பார்க்க வேண்டிய இடங்கள்: சோழமடல் கலைஞர் கிராமம், திருக்கடல்மல்லை கோயில், புலி குகை, மகாபலிபுரம் கடற்கரை, முதலைக்கரை.

10. கோயம்புத்தூர்

'இந்தியாவின் மான்செஸ்டர்' என்றும் அழைக்கப்படும் கோயம்புத்தூர், தமிழ்நாட்டின் சுற்றுலாப் பயணிகளிடையே பிரபலமான இடமாகும். ஆண்டு முழுவதும் வானிலை இனிமையாக இருக்கும். பல்வேறு சுற்றுலாத் தலங்கள், நீர்வீழ்ச்சிகள் மற்றும் ஆறுகளால் சூழப்பட்ட இந்த நகரம், உங்கள் புலன்களைப் புதுப்பிக்கும். நொய்யல் ஆற்றின் கரையில் அமைந்துள்ள கோயம்புத்தூர், மேற்குத் தொடர்ச்சி மலைகளால் சூழப்பட்டுள்ளது. பார்க்க வேண்டிய இடங்கள்: மருதமலை கோயில், ஈச்சனாரி விநாயகர் கோயில், பேரூர் பட்டீஸ்வரர் கோயில், பரம்பிக்குளம் வனவிலங்கு சரணாலயம், சிறுவாணி அருவி

11. தூத்துக்குடி

தூத்துக்குடி என்று அழைக்கப்படும் இந்த நகரம், பார்வையிட மிகவும் அழகான இடங்களில் ஒன்றாகும். இது ஒரு வனவிலங்கு சரணாலயத்தையும், ஆராய ஒரு அழகான கடற்கரையையும் கொண்டுள்ளது. இது பல கண்கவர் தேவாலயங்கள் மற்றும் கோயில்களையும் கொண்டுள்ளது, இது தமிழ்நாட்டில் ஆன்மீக சுற்றுலா தலங்களைத் தேடும் ஆய்வாளர்கள் கட்டாயம் பார்க்க வேண்டிய இடமாக அமைகிறது.

பார்க்க வேண்டிய இடங்கள்: ஹரே தீவு, பனிமலையின் பசிலிக்கா, களக்காடு வனவிலங்கு சரணாலயம், திருச்செந்தூர் முருகன் கோயில் மற்றும் முத்து நகர் கடற்கரை

12. ராமேஸ்வரம்

ராமேஸ்வரம் தெற்கின் வாரணாசியாகக் கருதப்படுகிறது. இது துவாரகை, பூரி மற்றும் பத்ரிநாத் தவிர நான்கு சார் தர்மங்களில் ஒன்றாகும். தமிழ்நாட்டின் ராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள ராமேஸ்வரம், யாத்ரீகர்களிடையே பார்வையிட ஒரு பிரபலமான இடமாகும்.

பார்க்க வேண்டிய இடங்கள்: திருப்புல்லாணி, சேது, உத்திரகோசமங்கை, ஓலைக்குடா, தனுஷ்கோடி மற்றும் பாம்பன்

செய்ய வேண்டியவை: புலம்பெயர்ந்த பறவைகளைப் பார்ப்பது மற்றும் ஸ்கூபா டைவிங்.

13. திருநெல்வேலி

தாமிரபரணி நதியின் மேற்குக் கரையில் அமைந்துள்ள திருநெல்வேலி, தமிழ்நாட்டின் சிறந்த சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகும். சுற்றுலாப் பயணிகள் ஆராய்வதற்கு ஏராளமான சுவாரஸ்யமான மற்றும் வேடிக்கையான இடங்களைக் கொண்டுள்ளது. மூச்சடைக்க வைக்கும் நீர்வீழ்ச்சிகள், அழகிய இயற்கை அழகு கோயில்கள் மற்றும் உங்கள் குடும்பத்தினருடனோ அல்லது நண்பர்களுடனோ நீங்கள் ரசிக்கக்கூடிய பல இடங்கள் உள்ளன.

பார்க்க வேண்டிய இடங்கள்: பாபநாசம் அருவி, மாவட்ட அறிவியல் மையம், நெல்லையப்பர் கோயில், ஹோலி டிரினிட்டி கதீட்ரல் மற்றும் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில்.

14. ஆரோவில்

தமிழ்நாட்டில் ஆரோவில் என்ற கருத்து மிகவும் சுவாரஸ்யமான சுற்றுலாத் தலமாகும். உலகம் முழுவதிலுமிருந்து, பல்வேறு கலாச்சார பின்னணிகளைச் சேர்ந்த மக்கள், அமைதியுடனும் நல்லிணக்கத்துடனும் ஒன்றாக வாழ இங்கு வருகிறார்கள். பாண்டிச்சேரியிலிருந்து 15 கி.மீ தொலைவில் அமைந்துள்ள ஆரோவில், நகர வாழ்க்கையின் சலசலப்பில் இருந்து தப்பிக்க ஒரு சிறந்த இடமாகும்.

பார்க்க வேண்டிய இடங்கள்: மாத்ரிமந்திர், வெரிடே கற்றல் மையம், சாவித்ரி பவன், சாதனா வனம் மற்றும் நாடகக் கலைகள் மற்றும் ஆராய்ச்சிக்கான ஆதிசக்தி ஆய்வகம்.

15. வேலூர்

பாலார் ஆற்றங்கரையில் அமைந்துள்ள வேலூர் நகரம் பல புனித யாத்திரைத் தலங்கள் மற்றும் பழங்கால வரலாற்று நினைவுச்சின்னங்களைக் கொண்டுள்ளது. வேலூர் ஒரு உற்சாகமான கலாச்சார சூழலைக் கொண்டுள்ளது மற்றும் பல பிரபலமான சுற்றுலாத் தலங்களின் தாயகமாகும். வேலூர் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி உள்ளிட்ட இரண்டு முன்னணி நிறுவனங்களையும் இது கொண்டுள்ளது.

பார்க்க வேண்டிய இடங்கள்: அமிர்தி விலங்கியல் பூங்கா, பிரெஞ்சு பங்களா, அறிவியல் பூங்கா, வேலூர் கோட்டை, மற்றும் வைனு பாப்பு ஆய்வகம்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### இந்திய ரயில் நிறுவனத்தில் அப்ரெண்டிஸ் வாய்ப்பு

இந்திய போர்ட் ரயில், ரோப்வே நிறுவனத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

'அப்ரெண்டிஸ்' பிரிவில் சிவில் 6, எலக்ட்ரிக்கல் 2, மெக்கானிக்கல் 2 என மொத்தம் 10 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: டிப்ளமோ / பி.இ., / பி.டெக்.,

வயது: 18-23 (25.3.2026ன் படி)

தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு

ஸ்டைபண்டு: மாதம் ரூ. 10,900 / ரூ. 12,300

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

Chief General Manager (HR), Indian Port Rail & Ropeway Corporation Limited, Corporate Office: 4th Floor, Nirman Bhavan, Mumbai Port Trust Building, M.P. Road, Mazgaon (E), Mumbai - 400 010.

கடைசிநாள்: 25.3.2026 விவரங்களுக்கு: iprcl.in.

### அழைக்கிறது எழுதுபொருள் நிறுவனம்



தமிழக எழுதுபொருள், அச்சகத்தில் காலியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மெஷின் டெக்னீசியன் 10, எலக்ட்ரீசியன் 4, மெக்கானிக் 8, பிளம்பர் 1 என மொத்தம் 23 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: ஐ.டி.ஐ.,/டிப்ளமோ வயது: 18-32 (8.4.2026ன் படி)

தேர்ச்சி முறை: ஸ்கில் தேர்வு / சான்றிதழ் சரிபார்ப்பு

விண்ணப்பிக்கும் முறை: விண்ணப்பத்தை பதிவிறக்கி, பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். The Commissioner, Department of Stationery and Printing, Commissioner's Office, 110, Anna Salai, Chennai - 600 002. கடைசிநாள்: 8.4.2026 விவரங்களுக்கு: stationeryprinting.tn.gov.in

## சமையல் கியாஸ் சிலிண்டரை பதுக்கினால் எஸ்மா சட்டம் பாயும்: மத்திய அரசு

புதுடெல்லி, மார்ச் 12:

சமையல் கியாஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டை சமாளிக்க நாடு முழுவதும் எஸ்மா சட்டத்தை மத்திய அரசு அமல்படுத்தியுள்ளது.

மேற்காசிய போர் நிலவரம் காரணமாக கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

இதனால் பல்வேறு அவசரகால நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.

அந்த வகையில் அத்தியாவசிய பொருட்கள் பதுக்கலை தடுக்க நாடு முழுவதும் எஸ்மா சட்டம் அமல்படுத்தப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

பெட்ரோல், டீசல், சிலிண்டர் உள்ளிட்டவை தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய அத்தியாவசிய பொருட்கள் சட்டம் 1955-ஐ மத்திய அரசு அமல்படுத்தி உள்ளது.

இதன் மூலம் மக்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யும் பெட்ரோல், சிலிண்டர் ஆகியவை அனைவருக்கும் கிடைப்பதை அரசு உறுதி செய்ய முடியும்.

பொதுமக்களின் அத்தியாவசியத் தேவைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பதுக்கல் உள்ளிட்டவற்றில் ஈடுபட்டால் 3 மாதங்கள் முதல் 7 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கலாம். அபராதம் விதிக்கப்படுவதோடு கைது நடவடிக்கையும் எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எஸ்மா சட்டம் அமலானதையடுத்து மாநிலங்களுக்கு இடையிலான எரிபொருள் போக்குவரத்தை மத்திய அரசே நேரடியாக கண்காணிக்கும்.

மேலும் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் எரிபொருட்களின் அதிகபட்ச விலையை அரசே நிர்ணயிக்க எஸ்மா சட்டம் வழி வகுக்கும்.

## ரூ.50 லட்சம் செலவில்அறிவியல் மாமேதை ஜி.டி. நாயுடு சிலை: கோவை வ.உ.சி. பூங்காவில் ஸ்டாலின் திறந்தார்

சென்னை, மார்ச் 12:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில், கோயம்புத்தூர், அவினாசி பிரதான சாலையில் உள்ள வ.உ.சி. பூங்காவில் 50 லட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள அறிவியல் மாமேதை ஜி.டி. நாயுடுவின் உருவச் சிலையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.



தமிழ்நாடு தந்த அறிவியல் மாமேதைகளில் ஒருவரும், இயந்திரவியல் மற்றும் விவசாயம் சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொண்டு பல்வேறு அரிய கண்டுபிடிப்புகளை உருவாக்கியவரும் கல்வியாளராகவும், எளியோருக்கு உதவும் நற்குணம் வாய்ந்தவராகவும் விளங்கிய ஜி.டி. நாயுடுவுக்கு கோயம்புத்தூரில் திருவுருவச் சிலை நிறுவப்படும் என்று செய்தி மக்கள் தொடர்புத் துறையின் 2024-25ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, ஜி.டி. நாயுடுவின் உருவச் சிலையை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் இரா.வைத்தி நாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கோயம்புத்தூரிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் வெற்றிச்செல்வன், மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன், மாநகர காவல் ஆணையர் கண்ணன், ஜி.டி. நாயுடு மகன் ஜி.டி. கோபால், அவரது மனைவி சந்திரா, குமரகுரு கல்வி நிறுவனங்களின் தலைவர் பி.கே. கிருஷ்ணராஜ் வானவராயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 3550 மாணவ மாணவிகளுக்கு 'ஸ்மார்ட் வாட்ச்', 210 பயிற்சியாளர்களுக்கு கைக்கணினி துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, மார்ச் 12:

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் அத்லெட் மேலாண்மை திட்ட பயன்பாடு குறித்து பயிற்சியாளர்கள், விளையாட்டு விடுதி மேலாளர்கள், மாவட்ட விளையாட்டு இளைஞர் நலன் அலுவலர்கள், மற்றும் மண்டல முதுநிலை மேலாளர்களக்கான வழிகாட்டி நிகழ்ச்சி சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. துணை முதலமைச்சர் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் இயங்கிவரும் விளையாட்டு விடுதிகளில் தங்கி பயிற்சி பெற்றுவரும் 2,600 மாணவ, மாணவிகளுக்கு தலா 2,736 ரூபாய் வீதம் மொத்தம் 71.15 லட்சம் மதிப்பிலான உதவி உபகரணங்கள் தொகுப்பு, 2,600 மாணவ, மாணவிகளுக்கு




ஸ்மார்ட் வாட்ச், இந்தாண்டு விளையாட்டு விடுதியில் புதிதாக சேர்க்கப்பட்ட 950 மாணவ, மாணவிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 20.10 லட்சம் ரூபாய் மதிப்பிலான ஸ்மார்ட் வாட்ச் ஆகியவற்றை துணை முதலமைச்சர் வழங்கினார்.

இதேபோல 41 விடுதிகளில் தங்கிப் பயிற்சி பெற்று வரும் 2,600 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு மொத்தம் 39.59 லட்சம் ரூபாய் மதிப்பிலான ஸ்போர்ட்ஸ் சயின்ஸ் உபகரணங்கள், மொத்தம் 65.65 லட்சம் ரூபாய் செலவில் 210 பயிற்சியாளர்களுக்கு கைக்கணினி மற்றும் 41 விளையாட்டு விடுதிகளுக்கும் All -in -One கணினிகளை துணை முதலமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் விளையாட்டு மேம்பாட்டுத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, விளையாட்டு மேம்பாட்டு ஆணைய பயிற்றுநர்கள், விடுதிகளில் தங்கிப் பயிலும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மீஷோ நிறுவனத்துக்கு ரூ. 1,500 கோடி வருமான வரி நோட்டீஸ்

மும்பை, மார்ச் 12:

பிரபல இணையவழி வர்த்தக நிறுவனமான மீஷோவுக்கு, வட்டியுடன் சேர்த்து சுமார் ரூ.1,500 கோடி வருமான வரி செலுத்தக் கோரி வருமான வரித்துறை நோட்டீஸ் அனுப்பியது. 2023-24 மதிப்பீட்டு ஆண்டுக்கான இந்த வரிவிதிப்பு உத்தரவு கடந்த வாரம் பிறப்பிக்கப்பட்டதாக அந்நிறுவனம் பங்குச்சந்தை ஆவணத்தில் தெரிவித்தது.

வருமான வரித் துறை கணக்கீட்டில் செய்யப்பட்டுள்ள சில திருத்தங்கள் மற்றும் கூடுதல் வருவாய் மதிப்பீடுகளின் அடிப்படையில் இந்த வரி கோரப்பட்டுள்ளது.

இந்த வரி விதிப்பு உத்தரவை எதிர்த்து முறையீடு செய்யவுள்ளதாக மீஷோ நிறுவனம் அறிவித்தது.

ஏற்கெனவே, கடந்த 2022-23 மதிப்பீட்டு ஆண்டிலும் மீஷோ நிறுவனத்துக்கு இதேபோன்ற வருமான வரி நோட்டீஸ் வந்தபோது, கர்நாடக உயர்நீதிமன்றம் அதற்கு இடைக்காலத் தடை விதித்தது குறிப்பிடத்தக்கது.

வருமான வரி நோட்டீஸ் குறித்த செய்தி வெளியானதும், தேசிய பங்குச்சந்தையில் நிறுவனத்தின் பங்கு 10 சதவீதம் சரிந்து, வர்த்தக முடிவில் ரூ.143.34 எனும் விலையில் நிலைபெற்றது. நடப்பு நிதியாண்டின் 3-ம் காலாண்டில் நிறுவனத்தின் நிதிநிலை முடிவுகளையும் மீஷோ வெளியிட்டது. இந்த காலாண்டில் பண்டிகைக் காலச் செலவுகள் அதிகரித்ததால் நிறுவனத்தின் நஷ்டம் ரூ.490.6 கோடியாக அதிகரித்துள்ளது. முந்தைய 2024-25 நிதியாண்டின் இதே காலகட்டத்தில் நஷ்டம் ரூ.37.43 கோடியாக மட்டுமே இருந்தது. செயல்பாட்டு வருவாய் 31 சதவீதம் உயர்ந்து, ரூ. 3,517.5 கோடியாக அதிகரித்துள்ளது.

## பனியன் பேக்கிங் நிறுவனத்தில் தீ விபத்து

திருப்பூர், மார்ச் 12:

திருப்பூர் பனியன் பேக்கிங் நிறுவனத்தில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் பல லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் எரிந்து சேதமானது.

பீகார் மாநிலத்தை சேர்ந்தவர் தனஞ்ஜெயன். திருப்பூர் வளையங்காடு பகுதியில் குடியிருந்து வருகிறார். இவர் லட்சுமி நகர் பகுதியில் உள்ள 2 மாடி கட்டிடத்தின் 2-வது மாடியில் அயனிங் மற்றும் பேக்கிங் நிறுவனம் நடத்தி வருகிறார். இதில் 10-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்நிலையில் நேற்று இரவு வேலை முடிந்து நிறுவனமானது பூட்டப்பட்டு தொழிலாளர்கள் வீட்டிற்கு சென்றனர். இன்று காலை அந்த நிறுவனத்தில் இருந்து கரும்புகை வெளியேறியது. பின்னர் சிறிது நேரத்தில் மளமளவென தீப்பிடித்து எரிந்தது. இதனைப்பார்த்து அதிர்ச்சியடைந்த அப்பகுதி பொதுமக்கள் கொடுத்த தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த வடக்கு தீயணைப்பு நிலைய வீரர்கள் ஒரு மணி நேரத்திற்கு மேலாக போராடி தீயை அணைத்தனர். இருப்பினும் நிறுவனத்தில் இருந்த ஏராளமான பின்னலாடைகள், காட்டன் பாக்ஸ்கள், பாலி பேக்குகள் உள்ளிட்ட பொருட்கள் தீயில் எரிந்து சேதம் அடைந்தது. அவற்றின் மதிப்பு பல லட்சம் இருக்கும்.

மின் கசிவு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டதா? அல்லது வேறு ஏதாவது காரணமா? என்ற கோணத்தில் திருப்பூர் வடக்கு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

# தமிழ்நாடு அரசு-கலிபோர்னியா பல்கலைக்கழகம் இடையே முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்



**சென்னை, மார்ச் 12:**

தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் தலைமை செயலகத்தில், தமிழ்நாட்டின் மின்சார துறை வளர்ச்சி மற்றும் பசுமை எரிசக்தி பயன்பாட்டினை வலுப்படுத்தும் நோக்கில், தமிழ்நாடு அரசிற்கும் அமெரிக்காவின் புகழ்பெற்ற கலிபோர்னியா பல்கலைக்கழகம், பெர்க்லி இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு அரசின் எரிசக்தி துறை கூடுதல் தலைமை செயலாளர் மற்றும் அமெரிக்காவின் பெர்க்லியில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் துணை தலைவர்/ கல்வி திட்டமிடல் மற்றும் சர்வதேச அலுவலர் ஆகியோர் இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

கலிபோர்னியா பல்கலைக்கழகம், உலகளவில் எரிசக்தி ஆராய்ச்சி மற்றும் கொள்கை ஆய்வுகளில் முன்னணி கல்வி நிறுவனமாக திகழ்கிறது. பசுமை எரிசக்தி தொழில்நுட்பம், மின்சார சந்தை அமைப்பு, எரிசக்தி சேமிப்பு தொழில்நுட்பங்கள் மற்றும் காலநிலை கொள்கைகள் போன்ற துறைகளில் சிறந்த அனுபவம் கொண்டுள்ளது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் தமிழ்நாடு மின்சார துறையின் எதிர்கால வளர்ச்சியினை கருத்தில் கொண்டு, அதிகரித்து வரும் மின்தேவையை குறைந்த செலவில் வலுவான மற்றும் நிலைத்தன்மை கொண்ட மின்சார அமைப்பிற்கு திட்டமிடல், புதுபிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி மற்றும் ஒருங்கிணைப்பு, மின்கட்டமைப்புக்கு ஏற்ப மின்சார சேமிப்பு அமைப்புகள் மற்றும் மேம்பாடு, மின்சார சந்தை வடிவமைப்பு மற்றும் ஒழுங்குமுறை கொள்கை, மின்தொடரமைப்பு மற்றும் கட்டமைப்பை நவீனமயமாக்கல், காலநிலைக்கேற்ப நெகிழ்வு தன்மையுடன் கூடிய மின்சார அமைப்பு, தமிழ்நாடு மின்சார துறையில் பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அளித்தல் உள்ளிட்ட முக்கிய திட்டங்களில் ஒத்துழைப்பு ஏற்படுத்தப்பட உள்ளது. இந்த ஒத்துழைப்பு மூலம் அறிவு பரிமாற்றம், கூட்டு ஆய்வு மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டு, தமிழ்நாட்டில் நவீன, வலுவான மற்றும் நிலைத்தன்மை கொண்ட மின்சார அமைப்பை உருவாக்க இயலும். மேலும், இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் இருதரப்பும் இணைந்து தீர்மானிக்கும் தனி ஒப்பந்தங்கள் மூலம் செயல்படுத்தப்படும்.

# அரசு மருத்துவமனைகளில் விறகு, மின் அடுப்புகளை தயாராக வைக்க வேண்டும்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தல்

**சென்னை, மார்ச் 12:**

காஸ் தட்டுப்பாடு வரும் பட்சத்தில் அரசு மருத்துவமனைகளில் மின்சார ஸ்டவ், விறகு அடுப்புகளை தயார் நிலையில் வைக்குமாறு சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தியுள்ளார்.

சைதாப்பேட்டை எம்எல்ஏ தொகுதி வளர்ச்சி நிதி ரூ.1.15 கோடியில், சைதாப்பேட்டை அரசு மருத்துவ மனையில் அமைக்கப்பட்டுள்ள காத்திருப்புக் கூடத்தை சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று திறந்து வைத்தார்.

முதல்வர் மருத்துவக் காப்பீட்டு திட்ட நிதியின் மூலம் இயன்முறை பயிற்றுநர் நியமிக்கப்பட்டு, ரூ.1.50 லட்சத்தில் புதிய இயன்முறை கருவிகளின் பயன்பாடு, யோகா - இயற்கை மருத்துவப் பிரிவுக்கு ஒரு மருத்துவர் மற்றும் ஒரு மருத்துவ உதவியாளருடன் கூடிய சேவையை தொடங்கி வைத்தார்.

அப்போது, செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: காஸ் தட்டுப்பாடு தொடர்பாக துறைச் செயலர், அனைத்து மருத்துவக் கல்லூரி டீன்கள், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. இந்த வாரத்துக்கு காஸ் தட்டுப்பாடு பிரச்சினை இல்லை. கடுமையான தட்டுப்பாடு வரும்பட்சத்தில், இதற்கு மாற்று ஏற்பாடாக எலெக்ட்ரிக் ஸ்டவ், விறகு அடுப்புகள் போன்றவற்றை தயார் நிலையில் வைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# விளையாட்டு செய்திகள்

## ஒருநாள் போட்டி தரவரிசையில் மந்தனா முதலிடம்

**துபாய், மார்ச் 12:**

மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டி பேட்டர்களுக்கான தரவரிசை பட்டியலை ஐசிசி வெளியிட்டுள்ளது. இதில் இந்திய அணியின் தொடக்க வீராங்கனையான ஸ்மிருதி மந்தனா 790 புள்ளிகளுடன் முதலிடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளார். கேப்டன் ஹர்மன்பிரீத் கவுர் 652 புள்ளிகளுடன் 8-வது இடத்தில் தொடர்கிறார். அதேவேளையில் மற்றொரு நட்சத்திர வீராங்கனையான ஜெமிமா ரோட்ரிக்ஸ் ஓர் இடத்தை இழந்து 12-வது இடத்துக்கு தள்ளப்பட்டார். ஜிம்பாப்வே அணிக்கு எதிரான ஆட்டத்தில் 157 ரன்கள் விளாசிய நியூஸிலாந்து அணியின் புருக் ஹலிடே 644 புள்ளிகளுடன் 8 இடங்கள் முன்னேறி 11-வது இடத்தை பிடித்துள்ளார். மற்றொரு நியூஸிலாந்து வீராங்கனையான மேடி கிரீன் 584 புள்ளிகளுடன் 4 இடங்கள் முன்னேறி 23-வது இடத்தை அடைந்துள்ளார்.

## மகளிர் ஆசிய கோப்பை கால்பந்து: சீன தைபேவிடம் வீழ்ந்தது இந்திய அணி



**சிட்னி, மார்ச் 12:**

ஏஎஃப்சி மகளிருக்கான ஆசிய கோப்பை கால்பந்து தொடர் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்று வருகிறது. இதில் ‘சி’ பிரிவில் இடம் பெற்றுள்ள இந்திய மகளிர் அணி தனது கடைசி லீக் ஆட்டத்தில் நேற்று சீன தைபே அணியுடன் பலப்பரீட்சை நடத்தியது.

வெற்றி பெற்றாக வேண்டும் என்ற நெருக்கடியுடன் இந்த ஆட்டத்தில் இந்திய மகளிர் அணி 1-3 என்ற கோல் கணக்கில் தோல்வி அடைந்தது. இந்திய அணி தரப்பில் 39-வது நிமிடத்தில் மனிஷா கல்யான் கோல் அடித்தார். அதேவேளையில் 45+9-வது நிமிடத்தில் இந்திய அணியின் எலங்பம் பாந்தோய் சானு, சுய கோல் அடித்து ஏமாற்றம் அளித்தார். சீன தைபே அணி தரப்பில் 12-வது நிமிடத்தில் சு யு சன்னும், 77-வது நிமிடத்தில் யு ஷின் சென்னும் தலா ஒரு கோல் அடித்து அசத்தினர். இந்திய மகளிர் அணிக்கு இது ஹாட்ரிக் தோல்வியாக அமைந்தது. இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் வியட்நாம் அணியிடமும், 2-வது ஆட்டத்தில் ஜப்பான் அணியிடமும் தோல்வி அடைந்திருந்தது. 3 தோல்விகளின் மூலம் இந்திய அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தது. சீன தைபே அணிக்கு எதிராக ஆட்டத்தின் பெரும் பகுதியைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தும், கோல் அடிப்பதற்கான பல வாய்ப்புகளையும் இந்திய அணி உருவாக்கியது.

ஆனால் ஆட்டத்தின் இறுதிப் பகுதியில் அந்த வாய்ப்புகளை கோல்களாக மாற்ற இந்திய அணி தவறியது. முதல்முறையாக ஆசிய கோப்பை தொடருக்கு தகுதி பெற்றிருந்த இந்திய அணி மோசமான செயல் திறன் காரணமாக லீக் சுற்றுடன் வெளியேறி உள்ளது.

# மலேரியா, டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம்: கொசு உற்பத்தியை தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன? - நீதிமன்றம் கேள்வி

**சென்னை, மார்ச் 12:**

மலேரியா, டெங்கு காய்ச்சல் போன்ற நோய்கள் பரவும் அபாயம் உள்ளதால், தமிழகம் முழுவதும் கொசு உற்பத்தியைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து தமிழக அரசு பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக சென்னை கோட்டூர்புரத்தைச் சேர்ந்த விஜயராஜா என்பவர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில் கூறியிருப்பதாவது: சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சமீபகாலமாக கொசுக்களின் உற்பத்தி பன்மடங்கு அதிகரித்து வருகிறது. கொசுக்கடியால் குழந்தைகளும், முதியோரும் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். சாக்கடைகள் மட்டுமின்றி வீட்டுக்குள் தேங்கி கிடக்கும் கழிவு நீரிலும் கொசுக்களின் உற்பத்தி அதிகரித்து டெங்கு, மலேரியா, சிக்குன்குனியா போன்ற நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதேநிலைதான் தமிழகம் முழுவதும் உள்ளது.

எனவே, மழைநீர் வடிகால்கள், கழிவுநீர் கால்வாய்கள், கட்டுமானப் பகுதிகளில் தேங்கிக் கிடக்கும் கழிவுநீரை முறையாக அகற்றி தமிழகம் முழுவதும் கொசு உற்பத்தியைத் தடுக்கவும், வீரியமிக்க கொசுக்களை அழிக்கவும் உரிய நடவடிக்கை எடுக்க தமிழக அரசுக்கும், சென்னை மாநகராட்சிக்கும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு அவர் கோரியிருந்தார். இந்த மனு மீதான விசாரணை தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நடைபெற்றது. மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் கார்த்திகை பாலன் ஆஜராகி, கொசு உற்பத்தியால் தமிழகத்தில்தான் அதிகமான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன என்பது குறித்த புள்ளிவிவரங்களை சமர்ப்பித்தார்.

அதைத்தொடர்ந்து, தமிழகம் முழுவதும் கொசு உற்பத்தியைத்தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறித்து தமிழக அரசும், சென்னையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை குறித்து சென்னை மாநகராட்சி நிர்வாகமும் 3 வார காலத்தில்பதில் அளிக்க உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை தள்ளிவைத்துள்ளனர்.

# தமிழகத்தில் ஆர்டர்லி நடைமுறை தொடர்ந்தால் அதிகாரிகள் மட்டுமின்றி ஆட்சியர்கள் மீதும் நடவடிக்கை: ஐகோர்ட் எச்சரிக்கை

**சென்னை, மார்ச் 12:**

தமிழகத்தில் ஆர்டர்லி நடைமுறை இன்னும் தொடர்ந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மட்டுமின்றி ஆட்சியர்கள் மீதும் பணிவிதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்படும் என நீதிபதிகள் எச்சரித்துள்ளனர்.

தமிழகத்தில் காவல் துறை மற்றும் சிறைத் துறையில் ஆர்டர்லி முறையை முற்றிலுமாக ஒழிப்பது தொடர்பான வழக்கு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்ரமணியம், கே.சுரேந்தர் ஆகியோர் அடங்கிய அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது தமிழகத்தில் ஆர்டர்லி முறையை ஒழித்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த அரசாணையின் அடிப்படையில் ஆர்டர்லி முறை மாநிலம் முழுவதும் முழுமையாக ஒழிக்கப்பட்டு இருப்பதை உறுதி செய்ய காவல் துறை அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தமிழக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து ஆர்டர்லி முறை தொடர்பாக வரும் புகார்கள் மீது விசாரணை நடத்தி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் உத்தரவிட்ட நீதிபதிகள், “இந்த விவகாரத்தில் உயரதிகாரிகள் கூட்டணி அமைத்து செயல்பட்டால் கடுமையாக கருதப்படும்” என்றனர்.

மேலும், “ஆர்டர்லி நடைமுறையை ஒழிக்கும் கொள்கையை அமல்படுத்தவில்லை என்றால், ஆட்சியர்கள் மட்டுமல்லாது சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்படும்” என எச்சரித்து விசாரணையை மார்ச் 23-க்கு தள்ளிவைத்துள்ளனர்.

# சிலிண்டர் தட்டுப்பாடு: பல்வேறு தரப்பினருடன் அமைச்சர் சக்கரபாணி ஆலோசனை

**சென்னை, மார்ச் 12:**



அமெரிக்கா-இஸ்ரேல் போர் காரணமாக ஹார்முஸ் நீரிணையை மூடுவதாகவும், மீறிகப்பலை இயக்கினால் சுட்டு வீழ்த்துவோம் என்றும் ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதன்காரணமாக சர்வதேச அளவில் சமையல் கியாசுக்கு கடும்தட்டுப்பாடுஏற்படும்நிலை உருவாகி உள்ளது. அனைத்து நாடுகளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை துரிதப்படுத்தி வருகின்றன.

இந்தநிலையில் வணிக பயன்பாட்டுக்கான கியாஸ் சிலிண்டர் வினியோகத்தை தற்காலிகமாக நிறுத்துவதாக இந்திய எண்ணெய் நிறுவனம் அறிவித்துள்ளது. அமெரிக்கா-ஈரான் போர் எதிரொலியால் தமிழகத்தில் வணிக கியாஸ் சிலிண்டர் வினியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் 12 லட்சம் ஓட்டல்கள், டீக்கடைகளை மூடும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், கியாஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டால் மாநிலத்தின் பல இடங்களில் ஓட்டல்கள் மூடப்பட்டுவரும் நிலையில், சென்னை தலைமைச் செயலகத்தில் உணவுத்துறை அமைச்சர் சக்கரபாணி பல்வேறு தரப்பினருடன் ஆலோசனைநடத்திவருகிறார். ஓட்டல் சங்க நிர்வாகிகள், எச்.பி, பாரத், இண்டேன் உள்ளிட்ட எண்ணெய்நிறுவன பிரநிதிகள், சிறு மற்றும் குறு தொழில் நிறுவன பிரநிதிதிகள் கலந்து கொண்டுள்ளனர். சிலிண்டருக்குபதிலாகமாற்றாக வேறு வழியை கையாள்வது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

# க்ரைம் கார்னர்

## ஆந்திரா: காரில் கடத்திய 530 கிலோ கஞ்சா பறிமுதல்; 2 பேர் கைது

**சென்னை, மார்ச் 12:**

சென்னை மண்டல மத்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவு போலீசார், ஆந்திராவில் அந்த மாநில போலீசாருடன் இணைந்துராஜமுந்திரி-பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் கஞ்சா கடத்தப்படுவதாக கிடைத்த ரகசிய தகவலின்படி தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது சந்தேகத்தின் பேரில் ஒரு சொகுசு காரை மடக்கி சோதனை செய்தபோது அதில் 530 கிலோ கஞ்சா கடத்தி வரப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து அந்த கஞ்சாவை போலீசார் பறிமுதல் செய்தனர். மேலும் காரில் இருந்த 2 பேரை கைது செய்து விசாரணை நடத்தினர். அதில் அவர்கள் ஆந்திர மாநிலம் விஜயநகரம் பகுதியை சேர்ந்த ஜெகதீஸ்வரராவ் (வயது 47) மற்றும் கோவர்தன்(30) என்பது தெரியவந்தது. கஞ்சா கடத்தல் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து கைது செய்யப்பட்ட 2 பேரிடமும் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சிறுவர்களுக்கு கஞ்சா விற்பனை செய்த வாலிபர் கைது

**தூத்துக்குடி, மார்ச் 12:**

தூத்துக்குடி மாவட்டம், ஆறுமுகனேரி பேயன்விளை பகுதியில் சிறுவர்களை குறிவைத்து கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள் விற்பனை நடைபெறுவதாக காவல்துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதனடிப்படையில் சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் தாமோதரன் தலைமையிலான போலீசார் அப்பகுதியில் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது அங்கு சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த ஒருவரைப் பிடித்து போலீசார் விசாரணை நடத்தினர். விசாரணையில் அவர் ஆலந்தலை சுனாமி நகரைச் சேர்ந்த ஜெகநாதன் மகன் மணிகண்டன் (வயது21) என்பது தெரியவந்தது. மேலும் அவர் அப்பகுதியில் உள்ள சிறுவர்களுக்கு போதைப்பொருட்களை விற்பனை செய்து வந்ததும் உறுதி செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட மணிகண்டனைச் சோதனை செய்ததில், அவர் வைத்திருந்த பையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 150 கிராம் கஞ்சா மற்றும் போதைப்பொருட்களை அடைக்கப் பயன்படும் 10 ‘ஜிப் லாக்’ கவர்கள் இருப்பது கண்டறியப்பட்டது. இதையடுத்து போலீசார் அவற்றை பறிமுதல் செய்து, மணிகண்டனை சிறையில் அடைத்தனர்.

## அரிசி மூட்டைகளுக்கிடையே பதுக்கி வைத்து ரூ.2.65 கோடி கஞ்சா கடத்திய 2 பேர் கைது

**சென்னை, மார்ச் 12:**

அரிசி மூட்டைகளுக்கு இடையே பதுக்கி வைத்து, ஆந்திராவிலிருந்து தமிழகத்துக்கு ரூ.2.65 கோடி மதிப்புள்ள கஞ்சாவை கடத்தி வந்த இருவரை போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு போலீஸார் கைது செய்துள்ளனர்.

வெளி மாநிலங்களிலிருந்து தமிழகத்துக்கு போதைப் பொருள் கடத்தப்பட்டு வருவதாக மத்திய போதைப்பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு போலீஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன் அடிப்படையில் திருவள்ளூர் மாவட்டம் செங்குன்றம் அருகே போலீஸார் கண்காணித்தனர்.

அப்போது அந்த வழியாக ஆந்திராவிலிருந்து அரிசி மூட்டைகளை ஏற்றிக் கொண்டு தமிழகம் நோக்கி வந்த சரக்கு வாகனத்தை நிறுத்தி சோதித்தனர். அப்போது அரிசி மூட்டைகளுக்கு இடையே பண்டல் பண்டலாக சுமார் 530 கிலோ கஞ்சா பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது.

அதை பறிமுதல் செய்த போலீஸார் கஞ்சா கடத்தி வந்த ஆந்திராவைச் சேர்ந்த கோட்டகுண்டு ஜகதீஷ்வர் ராவ், அதே மாநிலத்தைச் சேர்ந்த பாங்கி கோவர்தன் ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்கள் கடத்தி வந்த கஞ்சாவின் சந்தை மதிப்பு ரூ.2.65 கோடி என போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் கடத்தலுக்கு பயன்படுத்திய சரக்கு வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டது. இந்த கஞ்சா கடத்தலின் பின்னணியில் உள்ள சர்வதேச கடத்தல் கும்பல் குறித்து போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு போலீஸார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

# வணிகச் செய்திகள்

## இந்திய பங்குச் சந்தை முதலீட்டாளர்களுக்கு ஒரே நாளில் ரூ.6 லட்சம் கோடி இழப்பு

**மும்பை, மார்ச் 12:**

மும்பை: மேற்கு ஆசியாவில் நடைபெற்று வரும் போர் காரணமாக இந்திய பங்குச் சந்தையில் சென்செக்ஸ் 1,300+ புள்ளிகள் சரிந்தன. நிஃப்டி கிட்டத்தட்ட 400 புள்ளிகள் வீழ்ச்சி கண்டன. இதனால், முதலீட்டாளர்களுக்கு இன்று ஒரே நாளில் ரூ.6 லட்சம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்திய பங்குச்சந்தை (புதன்கிழமை) வர்த்தக தொடக்கத்தில் பெரிய அளவில் சரியவில்லை. ஆனால், அடுத்தடுத்த வர்த்தக நேரங்களில் கடும் சரிவை சந்தித்தது. இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து ஈரானுக்கு எதிராக மேற்கொண்டு வரும் போர் காரணமாக எண்ணெய் விநியோகத்தில் பாதிப்பும், அதனால் பணவீக்கம் அதிகரிக்கக் கூடும் என்ற அச்சமுமே இந்திய பங்குச் சந்தையில் இன்றைய வீழ்ச்சிக்கு முதன்மைக் காரணங்கள். மும்பை பங்குச் சந்தையில் இன்று மாலை வர்த்தகம் நிறைவடையும்போது சென்செக்ஸ் 1,342.27 புள்ளிகள் சரிந்து 76,863.71 ஆக நிலை கொண்டது. அதே நேரத்தில், தேசிய பங்குச் சந்தையில் நிஃப்டி 394.75 புள்ளிகள் சரிந்து 23,866.85 ஆக நிலை கொண்டது. இன்றைய வர்த்தகத்தில் ஆட்டோ மொபைல், வங்கி நிறுவனப் பங்குகள் வெகுவாக வீழ்ச்சி கண்டன. முதலீட்டாளர்களுக்கு இன்று ஒரே நாளில் ரூ.6 லட்சம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

# சார்தாம் யாத்திரை: 47 கோயில்களில் ஹிந்து அல்லாதோர் நுழைய தடை!



**புதுடெல்லி, மார்ச் 12:**

உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள பத்ரிநாத், கேதர்நாத் ஆகிய புனித தலங்கள் உள்பட 47 கோவில்களில் ஹிந்து அல்லாதோர் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

உத்தரகாண்ட் மாநிலத்தில் புகழ்பெற்ற சார்தாம் யாத்திரை அடுத்த மாதம் (ஏப். 19) தொடங்கவுள்ளது. இந்த யாத்திரையானது அங்குள்ள யமுனோத்ரி, கங்கோத்ரி, கேதார்நாத், பத்ரிநாத் ஆகிய நான்கு தலங்களை தரிசிக்கும் விதமாக மேற்கொள்ளப்படுகிறது. இதில், ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான மக்கள் கலந்துகொள்கின்றனர். சார்தாம் யாத்திரையை பத்ரி - கேதர் கோயில் குழுமம் முன்னெடுக்கிறது. சார்தாம் யாத்திரையின் தொடக்கமாக கங்கோத்ரி, யமுனோத்ரி ஆகிய தலங்களின் கதவுகள் வருகிற ஏப். 19 திறக்கப்படவுள்ளதால் அதற்கான பதிவு செய்யும் நடைமுறை மார்ச் 6 அன்று தொடங்கியது. இந்நிலையில் பத்ரிநாத், கேதர்நாத் ஆகிய புனித தலங்கள் உள்பட 47 கோவில்களில் ஹிந்து அல்லாதோர் நுழைய கோயில் குழுமம் சார்பில் தடை விதிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த முடிவு நேற்று (மார்ச் 10) நடைபெற்ற கோயில் பட்ஜெட் கூட்டத்தின்போது நிர்வாகத் தலைவர் ஹேமந்த் திவிவேதி தலைமையில் எடுக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி பேசிய அவர், "ஹிந்துத்துவம் மற்றும் சனாதன தர்மத்தை நம்புவோரும், பாபா கேதர்நாத் மற்றும் பத்ரி விஷால் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்களும் இங்கு வரவேற்கப்படுகிறார்கள். மேலும், சனாதனத்தின் மீது நம்பிக்கை அற்றவர்கள் கோயில் வளாகத்தினுள் நுழைவது கண்டிப்பாகத் தடை செய்யப்படுகிறது. இந்தக் கோயில்கள் நிர்வாகக் குழுவின் அதிகார வரம்பிற்குட்பட்டது. எனவே, அதன் புனிதத்தை நிலைநிறுத்துவதற்கான உரிமையை நாங்கள் பயன்படுத்துகிறோம்" என்று தெரிவித்தார்.

## மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் மீது காரசார விவாதம்

**புதுடெல்லி, மார்ச் 12:**

மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு எதிராக எதிர்க்கட்சிகளால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம் மீது நேற்று காரசார விவாதம் நடைபெற்றது.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் ராகுல் காந்தி பேச சபாநாயகர் ஓம் பிர்லாஅனுமதி வழங்கவில்லை என எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டின. இதையடுத்து, ஓம் பிர்லாவுக்கு எதிராக காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சிகள் சார்பில் நம் பிக்கையில்லா தீர்மான நோட்டீஸ் வழங்கப்பட்டது.

இந்த சூழலில் நேற்று அவையை நடத்திய பாஜக மூத்த எம்.பி. ஜெகதாம்பிகா பால், ஓம் பிர்லாவுக்கு எதிரான நம் பிக்கையில்லா தீர்மான நோட்டீஸ் மீது 10 மணி நேரம் விவாதம் நடத்த அனுமதி வழங்கினார். அப்போது, ஜெக தாம்பிகா பால் அவையை நடத்த எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து, நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு பேசும்போது, "மக்களவை சபாநாயகரை நீக்கக் கோரும் தீர்மானம் விவாதிக்கப் படும்போது, ஓம் பிர்லாவால் நியமிக்கப்பட்ட தலைவர்கள் குழுவில் இடம்பெற்றுள்ள ஜெகதாம்பிகா பால் அவையை நடத்தலாம்" என்றார். இதையடுத்து, நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு விவாதத்தை தொடங்கி வைத்து பேசினார்.

## மக்களவையில் ஊதியம், சலுகை பெறாத 2 எம்பிக்கள் - ஆர்டிஐ தகவல்

**புதுடெல்லி, மார்ச் 12:**

18-வது நாடாளுமன்ற மக்களவையில் தற்போது 541 எம்பிக்கள் உள்ளனர். மொத்தம் உள்ள 543 இடங்களில் இரண்டு இடங்கள் காலியாக உள்ளன. ஆர்டிஐ-யில் வெளியானத் தகவலின்படி மொத்தம் 481 எம்பிக்கள் தங்கள் மாத ஊதியங்களைப் பெறுகின்றனர். இவர்களில் இரண்டு எம்பிக்கள் தங்கள் மாத ஊதியத்தை வேண்டாம் எனக் கூறிவிட்டனர். பாஜகவின் நவீன் ஜிண்டாலும், காங்கிரஸின் டாக்டர் பிமோல் அகோய்ஜாம் ஆகிய இருவரும் இதில் இடம் பெற்றுள்ளனர். இவர்களில் பாஜகவின் நவீன், ஹரியானாவின் குருஷேத்ரா தொகுதி எம்பி ஆவார். பிரபலத் தொழிலதிபரான இவர், ஹரியனாவில் புகழ்பெற்ற குருஷேத்ரா பல்கலைக்கழகம் நிறுவி அதன் வேந்தராகவும் உள்ளார். இதற்கு முன் ஜிண்டால், 2004-ல் எம்பியாக தேர்வாகி 2014 வரை அப்பதவியை வகித்திருந்தார்.

மற்றவரான காங்கிரஸின் பிமோல், மணிப்பூரின் இம்பால் தொகுதி எம்பி. இவர், டெல்லியின் ஜவஹர்லால் நேரு பல்கலைகழகத்தின் சமூக அறிவியல் துறை பேராசிரியர். மணிப்பூரைச் சேர்ந்த இவர் அதன் மைத்தி சமூகத்தைச் சேர்ந்தவர். இந்த இரண்டு எம்பிக்களும் தங்கள் ஊதியத்தை மட்டும் அன்றி தனக்காக அரசு அளிக்கும் இதர சலுகைகளையும் பெற மறுத்துவிட்டனர். இதன்மூலம், பாஜகவின் ஜிண்டாலும், காங்கிரஸின் பிமோலும் தங்கள், பொது சேவையில் அசாதாரண அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளனர். இவர்களது தேர்தல் பிரமாணப் பத்திரங்களின்படி, இருவரது சொத்துகளில் அதிக வேறுபாடும் காணப்படுகிறது. தொழிலதிபரான நவீன் ஜிண்டாலுக்கு ரூ.1,241 கோடி மதிப்புள்ள சொத்துகள் உள்ளன. பேராசிரியரான முனைவர் பிமோல் அகோய்ஜாமுக்கு ரூ.97 லட்சம் சொத்துகள் மட்டுமே உள்ளன. இருவருக்கும் இடையே இந்த நிதி இடைவெளி இருந்தபோதிலும், இருவரும் சம்பளம் பெறாமல் பணியாற்றுவதாக உறுதியளித்துள்ளனர்.

# இந்தியாவில் சிறுத்தை புலிகளின் எண்ணிக்கை 50-ஐ கடந்து சாதனை



**போபால், மார்ச் 12:**

மத்தியப் பிரதேசத்தின் குன்னோ தேசியப் பூங்காவில் நமீபியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட 'ஜவாலா' என்ற சிறுத்தை ஐந்து குட்டிகளை ஈன்றுள்ளது.

1952-ல் இந்தியாவில் சிறுத்தை இனம் அழிந்துவிட்டதாக அறிவிக்கப்பட்ட பிறகு, 70 ஆண்டுகளுக்குப் பின் தற்போதுதான் அதன் எண்ணிக்கை 50-ஐத் தாண்டியுள்ளது.

இந்த மகிழ்ச்சியான செய்தியை மத்திய சுற்றுச்சூழல் துறை மந்திரி பூபேந்தர் யாதவ் சமூக வலைதள பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

இந்தியாவில் பிறந்து வளர்ந்த சிறுத்தைகுட்டிகளின் எண்ணிக்கை 33 ஆக உயர்ந்துள்ளது, இந்திய மண்ணில் ஈன்றெடுக்கப்பட்ட 10-வது வெற்றிகரமான பிரசவம் இதுவாகும். இந்தியாவின் சிறுத்தை பாதுகாப்பு பயணத்தில் ஒரு முக்கியமான மைல்கல்.

இந்த சாதனை கால்நடை மருத்துவர்கள், கள ஊழியர்கள் மற்றும் வன ஊழியர்கள் என அனைவரின் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது. இந்தக் குட்டிகளின் வருகையுடன், இந்தியாவில் மொத்த சிறுத்தை எண்ணிக்கை தற்போது 53 ஐ எட்டியுள்ளது.

# ரூ.8.7 லட்சம் கோடி மதிப்பில் ஜலஜீவன் திட்ட விரிவாக்கம்; மத்திய அமைச்சரவை ஒப்புதல்

**புதுடெல்லி, மார்ச் 12:**

நாட்டில் கிராமப்புற பகுதிகளில் வசிக்கும் அனைத்து வீடுகளுக்கும் பாதுகாப்பான மற்றும் போதிய அளவிலான குடிநீர் வழங்குவதற்காக 2019-ம் ஆண்டு பிரதமர் மோடியால், ஜலஜீவன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், ரூ.8.7 லட்சம் கோடி மதிப்பில் 2028-ம் ஆண்டு டிசம்பர் வரையில், இத்திட்ட விரிவாக்கம் மேற்கொள்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதனை மத்திய மந்திரி அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இதுபற்றி அவர் கூறும்போது, உள்கட்டமைப்பு உருவாக்கம் முதல் குடிநீர் வினியோகம் வரையிலான ஜலஜீவன் திட்ட மறுகட்டமைப்பு மற்றும் அதனை அமல்படுத்துவதற்கான மத்திய ஜலசக்தி அமைச்சகத்தின் முன்மொழிவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது என்றார்.

இதனுடன், நீடித்த கிராமப்புற குழாய் தண்ணீர் வினியோகத்திற்கான சுற்றுச்சூழலியல் அமைப்புக்கும், குடிநீர் நிர்வாகத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது என்று கூறினார். இந்த ஜலஜீவன் திட்ட மறுகட்டமைப்புக்காக, கட்டமைப்பு சீர்திருத்தங்களில் கவனம் செலுத்தப்படும். இதனை முன்னிட்டு, மொத்தம் ரூ.8.69 லட்சம் கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது. இதில், மத்திய அரசின் நிதியுதவி மொத்தம் ரூ.3.59 லட்சம் கோடியாக இருக்கும். கடந்த 2019-20-ம் ஆண்டில் மத்திய அரசின் நிதியுதவி மொத்தம் ரூ.2.08 லட்சம் கோடியாக இருந்தது. அதனை விட தற்போது 1.5 லட்சம் கோடிக்கும் கூடுதலாக அரசு நிதியொதுக்கி உள்ளது. இதன்படி தேசிய அளவில் சீரான, சுஜலாம் பாரத் என்ற டிஜிட்டல் கட்டமைப்பு உருவாக்கப்படும். அதன் கீழ் ஒவ்வொரு கிராமமும் அந்தந்த சேவை பகுதிக்கான தனித்த அடையாள எண் ஒதுக்கப்பெறும். இதனால், ஓரிடத்தில் இருந்து குழாய்க்கு குடிநீர் விநியோக திட்டம் ஆனது முழுமையாக டிஜிட்டல் வடிவில் தகவல்கள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு செயல்பாட்டுக்கு வரும்.

## இனி ரூ.20 லட்சம் வரை சொத்து பதிவுக்கு 'பான்' எண் தேவையில்லை

**புதுடெல்லி, மார்ச் 12:**

சொத்து வாங்கு பவர்கள், அதற்கான பத்திரப்பதிவின்போது, 'பான்' எனும் வருமான வரி நிரந்தர கணக்கு எண் விவரங்களை அளிக்கும் நடைமுறை இருந்து வருகிறது. 'பான்' எண் இல்லாதவர்கள், அதற்குரிய தனி படிவத்தில் உறுதிமொழி அளிக்க வேண்டும். இதில், தற்போதைய நிலையில், ரூ.10 லட்சம் வரையிலான சொத்துகளை பதிவு செய்யும்போது, 'பான்' எண் அளிப்பது கட்டாய நடைமுறையாக உள்ளது.

இந்த நிலையில், வருமான வரி சட்ட விதிகளில் மத்திய அரசு திருத்தம் மேற்கொண்டுள்ளது. இந்த புதிய விதிகள் ஏப்ரல் 1-ந் தேதி முதல் அமலுக்கு வரவுள்ளன. இதில், 'பான்' எண் அளிப்பதற்கான பல்வேறு வரம்புகள் மாற்றப்பட்டு உள்ளன. இதன்படி, ரூ.20 லட்சம் மதிப்பு வரையிலான சொத்துக்களை பதிவு செய்ய, 'பான்' எண் அளிப்பதில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனவே, ரூ.20 லட்சத்திற்கு மேற்பட்ட பத்திரங்களை பதிவு செய்யும்போது மட்டும், 'பான்' எண் தெரிவித்தால் போதும். இதில், சொத்து வாங்குவது, விற்பது, பரிசாக கொடுப்பது, கூட்டாக மேம்படுத்துவது ஆகிய நடவடிக்கைகளுக்கு, இந்த விலக்கு பொருந்தும் என புதிய விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாடு முழுவதும் வர்த்தக எல்பிஜி சிலிண்டர் தட்டுப்பாடு: ஓட்டல்கள், உணவகங்கள் கடும் பாதிப்பு



**புதுடெல்லி, மார்ச் 12:**

வர்த்தக எல்பிஜி சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஓட்டல்களில் உணவு வகைகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளன. சில நாட்களுக்கான சிலிண்டர்கள் மட்டுமே கையிருப்பில் உள்ளதால், மிகுந்த நெருக்கடியை உணர்வதாக ஓட்டல்கள் நிர்வாகங்கள் பலவும் கவலை தெரிவித்துள்ளன. பல இடங்களில் ஓட்டல்கள் மூடப்பட்டு வருகின்றன.

இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து கடந்த பிப்.28-ம் தேதி ஈரான் மீது தாக்குதலை தொடங்கின. இதையடுத்து, ஈரான் தரப்பில் பதில் தாக்குதல் தொடங்கியது.

இரு தரப்பும் தொடர்ந்து தாக்குதல்களை மேற்கொண்டு வரும் நிலையில், இதன் காரணமாக கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு விநியோகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஹோர்முஸ் ஜலசந்தி வழியாக சரக்கு கப்பல்கள் செல்வது பாதிக்கப்பட்டுள்ளதால் நிலைமை மிகவும் மோசடைந்துள்ளது.

இந்தியா தினசரி பயன்படுத்தும் 195 மில்லியன் ஸ்டாண்டர்ட் கியூபிக் மீட்டர் (MMSCMD) எரிவாயுவில் சுமார் பாதியை இறக்குமதி செய்கிறது. ஹோர்முஸ் நீரிணை மூடக்கப்படுவதற்கு முன்பு, மத்திய கிழக்கிலிருந்து இந்தியா தினசரி சுமார் 60 MMSCMD எரிவாயுவைப் பெற்று வந்தது.

இந்நிலையில், இந்தியாவில் எல்பிஜி சிலிண்டர்கள் விநியோகம் தொடர்பாக அரசு தரப்பில் நேற்று (திங்கள்கிழமை) வழங்கப்பட்ட வழிகாட்டுதலில், "எரிவாயு கிடைக்கும் அளவைப் பொறுத்து, கடந்த ஆறு மாத சராசரி பயன்பாட்டின் அடிப்படையில் முக்கிய துறைகளுக்கு அளவான விநியோகம் செய்யப்படும். முன்னுரிமை அடிப்படையில், முதலில் வீடுகளுக்கும் போக்குவரத்து எரிபொருளாக பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கும் 100% இயற்கை எரிவாயு வழங்கப்படும்.

உற்பத்தி துறை மற்றும் பிற தொழில்துறை பயனாளர்களுக்கு 80% எல்பிஜி விநியோகிக்கப்படும். சிறு தொழில்கள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு சுமார் 80% அளவிலேயே எரிவாயு விநியோகிக்கப்படும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக எல்பிஜி சிலிண்டர்களை நம்பி உணவகங்கள் இருப்பதால் தற்போது அவற்றின் சேவை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. நாட்டின் பல்வேறு நகரங்களில் ஓட்டல்கள் மற்றும் உணவகங்கள், உணவு வகைகளின் எண்ணிக்கையை குறைத்துள்ளன. அதிக எரிபொருள் தேவைப்படும் பூரி, ஃப்ரைட் ரைஸ், சைட் டிஷ்சஸ் போன்ற உணவுகளை மெனுவில் இருந்து தற்காலிகமாக நீக்கி இருப்பதாக பல்வேறு உணவகங்கள் தெரிவித்துள்ளன.

## 6 ஆண்டுகளில் 1,050 பயங்கரவாத தாக்குதல்கள்; மக்களவையில் அரசு தகவல்

**புதுடெல்லி, மார்ச் 12:**

நாடாளுமன்றத்தின் மக்களவையில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் எம்.பி. ககோளி கோஷ் தஸ்திதார் எழுப்பிய கேள்வி ஒன்றிற்கு மத்திய உள்விவகார துறை இணை மந்திரி நித்யானந்த ராய் எழுத்து வடிவில் பதில் அளித்துள்ளார்.

அதில், நாட்டில் 2017 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையேயான காலகட்டத்தில் 1,050 பயங்கரவாத தாக்குதல்கள் அல்லது சம்பவங்கள் நடந்துள்ளன. இதில் பொதுமக்கள் மற்றும் வீரர்கள் காயம் மற்றும் மரணம் அடைந்துள்ளனர். இதன்படி நாடு முழுவதும் பொதுமக்களில் 243 பேர் மரணம் அடைந்துள்ளனர். 599 பேர் காயம் அடைந்தனர் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதே காலகட்டத்தில் பாதுகாப்பு படையினரில் 288 பேர் மரணம் அடைந்தனர். 802 பேர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதேபோன்று, பயங்கரவாதிகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான விவரங்களையும் அவர் வெளியிட்டார். இதன்படி, 687 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். 616 பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டு உள்ளனர்.இந்நிலையில் சமையல் எரிவாயு சிலிண்டருக்கு தட்டுப்பாடு விவகாரத்தில் பிரதமர் மோடி தலையிட்டு தீர்வு காண சென்னை ஓட்டல் உரிமையாளர் சங்கங்கள் கடிதம் எழுதி உள்ளது குறிப்பிடத்தக்கது.

## மதுபானக் கொள்கை வழக்கு: விடுதலையை எதிர்த்து சிபிஐ வழக்கு: கெஜ்ரிவால் பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு

**புதுடெல்லி, மார்ச் 12:**

டெல்லி மதுபானக் கொள்கை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றம் செய்ததற்கான உரிய ஆதாரங்கள் இல்லை எனக் கூறி, அரவிந்த கெஜ்ரிவால், மணிஷ் சிசோடியா உள்பட 23 பேரை கடந்த வாரம் சிறப்பு கோர்ட்டு விடுவித்தது. இந்த நிலையில், கெஜ்ரிவால் உள்பட 23 பேரின் விடுதலையை எதிர்த்து டெல்லி ஐகோர்ட்டில் சிபிஐ மேல்முறையீடு செய்தது. இந்த மனு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, சிபிஐ சார்பாக ஆஜரான மத்திய அரசு வழக்கறிஞர் துஷார் மேத்தா, 'கெஜ்ரிவால் மற்றும் மணிஷ் சிசோடியாவை சிறப்பு கோர்ட் விடுதலை செய்தது சட்டத்திற்குப் புறம்பானது. வழக்கின் உண்மைத்தன்மையை முழுமையான விசாரணை மூலம் கண்டறியாமல், வழக்கின் ஆரம்பக்கட்டத்திலேயே அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். இது தவறானது" என்று கூறினார். இதையடுத்து, சிபிஐயின் மனுவை விசாரணைக்கு ஏற்பதாக கூறிய கோர்ட்டு, இது தொடர்பாக பதிலளிக்குமாறு கெஜ்ரிவால், மணிஷ் சிசோடியாவுக்கு நோட்டீஸ் அனுப்பி உத்தரவிட்டது. மேலும், இந்த வழக்கின் விசாரணை வரும் 16-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## கோடையில் மின் தடை கூடாது: அதிகாரிகளுக்கு ஆந்திர அமைச்சர் உத்தரவு

**அமராவதி, மார்ச் 12:**

ஆந்திர உள்துறை அமைச்சர் அனிதா அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், மின்வாரிய துறை அதிகாரிகள், விபத்து தடுப்பு துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

அப்போது அமைச்சர் அனிதா 'ஹீட் வேவ் ஆக்ஷன் பிளான் -2026' திட்டத்தை அறிமுகப்படுத்தி பேசியதாவது: மத்திய ஆந்திரா, ராயல சீமா மாவட்டங்களில் இந்த ஆண்டு வழக்கத்தை விட அதிக வெப்பம் இருக்கும் என வானிலை ஆராய்ச்சி மையம் எச்சரித்துள்ளது.

இதனை கருத்தில் கொண்டே 2026 திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது. அதன்படி, பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை, குழந்தைகள், முதியோர் கள் பாதிக்கப்படாதவாறு அவர் களுக்கு ஆலோசனை வழங்குவது போன்றவற்றை கடைப் பிடிக்க வேண்டும். தண்ணீர், மோர்ப் பந்தல்கள் அமைப் பது, தண்ணீர் தட்டுப்பாடு, மின் தடை வராமல் கவனமாக இருக்க வேண்டும். மாநிலம் முழுவதும் மின் தடை என்ற பேச் சுக்கே இடம் இருக்க கூடாது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## கம்பாலா எருமை பந்தயத்துக்கு தடை கோரிய மனு தள்ளுபடி

**புதுடெல்லி, மார்ச் 12:**

பீட்டா அமைப்பு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு வில், கர்நாடாகவின் கடலோர மாவட்டங்களில் கம்பாலா எருமைப் பந்தயம் நடத்தும் வகையில் விலங்குகள் வதை தடுப்புச் சட்டம் திருத்தப்பட்டது.

ஆனால், பெங்களூரு, ஷிவ்மோகா ஆகிய மாநகரங் களில் கம்பாலா எருமைப் பந்தயம் நடத்தப்படுவது விலங் குகள் வதை தடுப்புச் சட்டத்துக்கும், உச்ச நீதிமன்ற தீர்ப் புகளுக்கும் எதிரானது என்பதால், எருமைப் பந்தயத்துக்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது. இந்த மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

## மேகாலயாவில் வன்முறை: துப்பாக்கிச் சூட்டில் 2 பேர் உயிரிழப்பு

**ஷில்லாங், மார்ச் 12:**

மேகாலயாவில், 'கேரோ ஹில்ஸ் தன்னாட்சி மாவட்டக் கவுன்சில்' தேர்தல் ஏப்ரல் 10-ல் நடைபெறுகிறது. இதற்கான வேட்பு மனுத் தாக்கல் கடந்த வாரம் தொடங்கியது. வேட்பு மனுவுடன் பழங்குடியினத்தவர் என்பதற்கான சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயம் என அறிவிக்கப்பட்டது. இதை கேரோ பழங்குடியின அமைப்புகள் வரவேற்றன. ஆனால், பழங்குடியினர் அல்லாத தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்து போராடுகின்றனர்.

இந்நிலையில், துரா பகுதியில் உள்ள துணை ஆணையர் அலுவலகத்தை நேற்று முன்தினம் போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டனர். கலவரம் வெடித்ததால் இரவு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எனினும், தடையை மீறி ஏராளமானோர் இரவு முழுவதும் கலவரத்தில் ஈடுபட்டனர். அவர்களை கலைக்க போலீஸார் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 2 பேர் உயிரிழந்தனர். இந்நிலையில், அங்கு ராணுவம் குவிக்கப்பட்டுள்ளது.

# போர்ச் சூழலில் லாபம் ஈட்டும் ஜி-7 நாடுகள் எண்ணெய் இருப்புகளை விற்பனை செய்ய திட்டம்

**வாஷிங்டன், மார்ச் 12:**

சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்து வரும் நிலையில் தங்கள் சேமிப்பில் உள்ள கச்சா எண்ணெய்யை விற்பனை செய்ய சர்வதேச எரிசக்தி முகமையுடன் (IEA) இணைந்து ஜி-7 நாடுகள் திட்டமிடுகின்றன. திங்கட்கிழமை ஆசிய வர்த்தகத்தில் கச்சா எண்ணெய் விலை 24 சதவிகிதம் உயர்ந்து பேரல் 119 டாலர் வரை எட்டியது. இந்தச் சூழலில் உலகின் பெரும் பணக்கார நாடுக ளின் கூட்டமைப்பான ஜி-7 அவர்கள் வசம் உள்ள கச்சா எண்ணெய்யை விற்பனை செய்து போர்க் காலத்தில் அதிக லாபம் பார்க்க திட்டமிட்டு வருகின்றன. அமெரிக்கா உட்பட மூன்று நாடுகள் இந்த முடிவுக்கு ஏற்கெனவே ஆதரவு தெரிவித்துள்ளன. சர்வதேச எரிசக்தி முகமை அமைப்பின் உறுப்பு நாடுகளிடம் உள்ள 1.2 பில் லியன் பேரல் இருப்பில் இருந்து, சுமார் 300 முதல் 400 மில்லி யன் பேரல்களை (சுமார் 25% முதல் 30%) சர்வதேசச் சந்தையில் விற்பனை செய்து லாபம் பார்க்க அமெரிக்க அதிகாரிகள் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

# ‘ஆபரேஷன் சிந்தூர்’ தாக்குதலில் சேதமடைந்த பாகிஸ்தான் விமானப்படைத் தளம் இடிப்பு

**புதுடெல்லி, மார்ச் 12:**

கடந்த ஆண்டு இந்திய விமானப் படை நடத்திய ‘ஆபரேஷன் சிந்தூர்’ தாக்குதலில் பாகிஸ்தானின் முக்கிய முரித் விமானப்படைத் தளம் பலத்த சேதமடைந்தது. அதை மறுசீரமைக்கும் முயற்சி தோல்வியடைந்த நிலையில், முழுமையாக இடித்துத் தரைமட்டம் ஆக்கப்பட்டுள்ளது செயற்கைக் கோள் புகைப்படம் மூலம் அம்பலமாகியுள்ளது.

பாகிஸ்தானின் சக்வால் பகுதிக்கு அருகே அமைந்துள்ளது முரித் விமானப்படைத் தளம். இது, அந்நாட்டின் மிக முக்கியமான கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையமாக விளங்கியது. கடந்த 2025, மே 10-ல் அதிகாலை 2 மணி முதல் 5 மணிக்குள் இந்திய விமானப்படை நடத்திய துல்லிய தாக்குதலில் பாகிஸ்தானின் 10 விமானப்படைத் தளங்கள் நிலைகுலைந்தன.

அதில் முரித் தளமும் ஒன்று. தாக்குதலுக்குப் பிறகு அத்தளம் தார்பாய்களால் மூடப்பட்டு, ரகசியமாகப் பழுது பார்க்கப்பட்டு வந்தது. இது குறித்த சமீபத்திய செயற்கைக் கோள் படங்களை ஆய்வு செய்த பாதுகாப்புத் துறை நிபுணர் டேமியன் சைமன் பாகிஸ்தானின் பழுதுபார்க்கும் பணி தோல்வியடைந்ததை உறுதிப்படுத்தியுள்ளார். கடந்த பிப்ரவரி 28ம் தேதி எடுக்கப்பட்ட படங்களில், முரித் விமானப் படைத் தளத்தில் சிதைந்த கட்டுமானக் கழிவுகளும், சிவந்த மண் தரை மட்டுமே எஞ்சியிருப்பது தெரிகிறது.

அதாவது, இந்தியத் தாக்குதலின் தாக்கம் கட்டிடத்தின் மேற்கூரையைத் தாண்டி, அதன் அடித்தளம் வரை கடுமையாகப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதால் அதைச் சீரமைக்க முடியாமல் பாகிஸ்தான் ராணுவம் முழுமையாக இடித்துள்ளது.

இந்திய விமானப் படையின் வலிமையான தாக்குதலின் பாதிப்பில் இருந்து பாகிஸ்தானால் மீள முடியவில்லை என்பதை இந்தச் செயற்கைக்கோள் ஆதாரங்கள் உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளன.

# சுவிட்சர்லாந்து: நடுரோட்டில் பற்றி எரிந்த பஸ் - 6 பேர் பலி

**பெர்ன், மார்ச் 12:**

ஐரோப்பிய நாடான சுவிட்சர்லாந்தின் பிரிபொங் மாகாணம் கெர்சர் நகரில் நேற்று மாலை பஸ் சென்றுகொண்டிருந்தது. அந்த பஸ்சில் 11 பேர் பயணித்தனர்.

இந்நிலையில், கெர்சர் நகர சாலையில் சென்றுகொண்டிருந்த பஸ்சில் திடீரென தீப்பற்றியது. தீ மளமளவென பஸ் முழுவதும் பரவியது. இதனால் அதிர்ச்சியடைந்த பயணிகள் பஸ்சில் இருந்து வெளியேற முயன்றனர். 5 பயணிகள் படுகாயங்களுடன் உயிர் தப்பினர். ஆனாலும், இந்த தீ விபத்தில் பஸ்சில் இருந்த 6 பயணிகள் உடல்கருகி உயிரிழந்தனர்.

தகவலறிந்து விரைந்து சென்ற தீயணைப்புத்துறையினர் பஸ்சில் பற்றி எரிந்த தீயை அணைத்தனர். மேலும், காயமடைந்த 5பேரையும் மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமத்தனர். பஸ்சில் தீ பற்றியது எப்படி? இதில் சதிச்செயல் உள்ளதா? என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# துபாய் விமான நிலையம் அருகே ட்ரோன் தாக்குதல்: இந்தியர் உட்பட 4 பேர் காயம்

**துபாய், மார்ச் 12:**

ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாய் நகரில் உள்ள சர்வதேச விமான நிலையத்துக்கு அருகே ஈரான் ஏவிய இரண்டு ட்ரோன்கள் விழுந்ததில், ஒரு இந்தியர் உட்பட 4 பேர் காயமடைந்தனர்.



ஈரான் மீது இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. பதிலுக்கு ஈரான், இஸ்ரேல் மீதும், மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க நிலைகள் மீதும் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இந்நிலையில், ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாய் நகரில் உள்ள சர்வதேச விமான நிலையத்துக்கு அருகே ஈரான் ஏவிய இரண்டு ட்ரோன்கள் விழுந்தன. இதில், கானா நாட்டைச் சேர்ந்த இருவர், வங்கதேசத்தைச் சேர்ந்த ஒருவர், இந்தியாவைச் சேர்ந்த ஒருவர் என மொத்தம் 4 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில், ஈரான் ஏவிய ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை தடுத்து நிறுத்தி வருவதாக ஐக்கிய அரபு அமீரகத்தின் பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது. இந்த தாக்குதல், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு எதிரான ஈரானின் பதில் நடவடிக்கைகளின் ஒரு பகுதி என கூறப்படுகிறது. இரண்டு ட்ரோன்கள் துபாய் விமான நிலையம் அருகே விழுந்தாலும், விமான போக்குவரத்து வழக்கம்போல நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய அரபு அமீரத்தின் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், “கேட்கப்படும் பெரிய சத்தங்கள் அனைத்தும் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை தடுக்க வான்வழி பாதுகாப்பு அமைப்புகள் செயல்படுவதன் விளைவாகும்” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகம் மட்டுமின்றி, பஹ்ரைன், கத்தார் உள்ளிட்ட வளைகுடா நாடுகளுக்கு எதிராகவும் ஈரான் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் மூலம் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இதனால் சில கட்டமைப்புகள் சேதமடைந்துள்ளதோடு, எண்ணெய் உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நாடுகள் தெரிவித்துள்ளன.

# ஈரானின் புதிய உச்ச தலைவரை நாங்கள் மதிக்கிறோம்: வட கொரியா

**பியாங்யாங், மார்ச் 12:**



ஈரானின் புதிய உச்ச தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டதை வட கொரியா மதிக்கிறது என்று அந்நாட்டின் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

பிப்ரவரி 28 அன்று அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி கொல்லப்பட்டார். அதனையடுத்து அவரின் மகன் மோஜ்தபா காமேனி ஈரானின் புதிய உச்ச தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதுகுறித்து வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் கூறியதாக அதிகாரப்பூர்வ கொரிய மத்திய செய்தி நிறுவனம் (KCNA)வெளியிட்ட செய்திக்குறிப்பில், ‘ஈரானிய மக்கள் தங்கள் உச்ச தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான உரிமைகளையும்விருப்பத்தையும் நாங்கள் மதிக்கிறோம். அமெரிக்காவும் இஸ்ரேலும் பிராந்திய அமைதி மற்றும் பாதுகாப்பு அடித்தளங்களை அழித்து வருகின்றன. மேலும், உலகளவில் ஸ்திரமின்மையை அதிகரித்து வருகின்றன.

அமெரிக்காவும், இஸ்ரேலும் ஈரானின் அரசியல் அமைப்பு மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை மீறியதுடன், அதன் சமூக அமைப்பை அழிக்கவும் முயற்சிக்கிறது. இத்தகைய நடவடிக்கைகளை உலக நாடுகள் கண்டிக்கவும், நிராகரிக்கவும் வேண்டும். ஏனெனில் இவற்றை ஒருபோதும் பொறுத்துக்கொள்ள முடியாது” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட கொரியாவின் அணுசக்தி திட்டத்தை அகற்ற அமெரிக்கா பல ஆண்டுகளாக முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஆனால் அதனை பொருட்படுத்தாமல் வடகொரியா அணு ஆயுத தயாரிப்பில் தொடர்ந்து முன்னேறி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# ரிலையன்ஸ் ஆதரவுடன் டெக்சாஸில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைகிறது: ட்ரம்ப் அறிவிப்பு

**வாஷிங்டன், மார்ச் 12:**

அமெரிக்காவின் டெக்சாஸில் 300 பில்லியன் டாலர் மதிப்பில், ரிலையன்ஸ் நிறுவனத்தின் ஆதரவுடன் புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தொடங்கப்படும் என அதிபர் ட்ரம்ப் அறிவித்தார்.

இதுகுறித்து ட்ரூத் சமூக வலைதளத்தில் டொனால்டு ட்ரம்ப் வெளியிட்ட பதிவில், “அமெரிக்க எரிசக்தி உற்பத்தியை அதிகரிப்பதையும், சர்வதேச கூட்டாளிகளுடனான பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட 300 பில்லியன் டாலர் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக டெக்சாஸின் பிரவுன்ஸ்வில்லில் புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும்.

இந்த மகத்தான முதலீட்டுக்கு இந்தியாவில் உள்ள எங்கள் கூட்டாளிகளுக்கும், அவர்களின் மிகப்பெரிய தனியார் எரிசக்தி நிறுவனமான ரிலையன்ஸுக்கும் நன்றி. இந்தத் திட்டம் நாட்டின் எரிசக்தித் துறையில் ஒரு முக்கிய மைல்கல்லாக இருக்கும்.

இப்போது அமெரிக்கா உண்மையான ஆற்றல் ஆதிக்கத்திற்குத் திரும்புகிறது. இன்று டெக்சாஸின் பிரவுன்ஸ்வில்லில் 50 ஆண்டுகளில் முதல் புதிய அமெரிக்க எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைகிறது என்பதை அறிவிப்பதில் பெருமைப்படுகிறேன்.

300 பில்லியன் டாலர் மதிப்புள்ள இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தம் அமெரிக்க வரலாற்றில் மிகப்பெரியது. இது ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கி தெற்கு டெக்சாஸில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும். பிரவுன்ஸ்வில் துறைமுகத்தில் அமையும் இந்த புதிய சுத்திகரிப்பு நிலையம் அமெரிக்க சந்தைகளுக்கு முக்கிய பங்களிக்கும். நமது தேசிய பாதுகாப்பை வலுப்படுத்துவதுடன், அமெரிக்க எரிசக்தி உற்பத்தியையும் அதிகரிக்கும். ‘அமெரிக்கா முதலில்’ என்பதுதான் எங்களின் கொள்கை, அனுமதிகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் வரிகளைக் குறைத்தல் ஆகியவற்றின் காரணமாகவே, பில்லியன் கணக்கான டாலர் ஒப்பந்தங்கள் நமது நாட்டிற்கு மீண்டும் வருகின்றன” என்றார்.

மத்திய கிழக்கில் ஈரானுக்கும், இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவுக்கும் இடையே கடுமையான மோதல் நிலவி வரும் நிலையில், ட்ரம்ப்பின் இந்த புதிய அறிவிப்பு வந்துள்ளது.

# எண்ணெய்க் கிணறுகள் பற்றி எரிவதால் டெஹ்ரானை சூழ்ந்த கருமேகங்கள்: மூச்சுவிட முடியாமல் பொதுமக்கள் அவதி

**தெஹ்ரான், மார்ச் 12:**

எண்ணெய்க் கிணறுகள் பற்றி எரிவதால் டெஹ்ரானை கருமேகங்கள் சூழ்ந்துள்ளன. இதனால் மூச்சுவிட முடியாமல் அவதிப்படுவதாக பொதுமக்கள் கண்ணீர் வடித்து வருகின்றனர்.

ஈரான், அமெரிக்கா - இஸ்ரேல் இடையே போர் தொடங்கி நேற்று 11-வது நாளை எட்டியது. ஈரானின் எண்ணெய்க் கிணறுகள் மீது இஸ்ரேல் விமானப் படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதால் அவை பற்றி எரிகின்றன. இதன் காரணமாக டெஹ்ரானிலும், டெஹ்ரானைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வானில் கருமேகங்கள் சூழ்ந்துள்ளன. இதனால் சுற்றுச்சூழலுக்கு பெரும் கேடு ஏற்பட்டுள்ளது.



பொதுமக்கள் வசிக்கும் வீடுகளிலும் கூட கரும்புகை சூழ்ந்துள்ளது. பொதுமக்கள் சிகிச்சை பெறும் மருத்துவமனையிலும் கூட புகை மேகங்கள் சூழ்ந்துள்ளன. இதனால் அங்குள்ள நோயாளிகள் மூச்சுவிட முடியாமல் திணறி வருவதாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக இந்தியாவில் வசிக்கும் அப்கைன் காகி என்ற ஈரான் நாட்டைச் சேர்ந்தவர் கூறியதாவது: எனது குடும்பத்தார் இப்போது மத்திய டெஹ்ரான் பகுதியில் உள்ளனர். காலை 10 மணிக்கு கூட அங்கு இரவு நேரத்தில் இருப்பது போன்ற நிலை இருக்கிறது. எண்ணெய் கிணறுகள் பற்றி எரிவதால் எங்கும் புகைமேகம் சூழ்ந்துள்ளது.

வீடுகளில் இருப்பவர்களே மூச்சு விடுவதற்கு திணறும் போது வெளியே வருபவர்களின் நிலையை சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை. இந்த போரால் அங்குள்ள மக்கள் மிகவும் அவதிப்பட்டு வருகின்றனர். எங்களுக்கு உதவி செய்ய யாருமில்லை. குழந்தைகள், முதியோர், செல்லப் பிராணிகள் உட்பட அனைவருமே சிரமப்படுகிறோம். இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதல் மிகவும் தீவிரமானவை. இதனால் எண்ணெய்க் கிணறுகள் மிகவும் சேதமடைந்து பற்றி எரிகின்றன. மருத்துவமனை, வீடுகளிலும் புகை மேகங்கள் சூழ்ந்துள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

மும்பையில் வசிக்கும் மற்றொரு ஈரான் நாட்டைச் சேர்ந்தவர் கூறும்போது, “டெஹ்ரானில் வசிக்கும் அனைத்து மக்களும் முகக்கவசம் அணியுமாறு அரசு தெரிவித்துள்ளது. அங்குள்ள எனது தந்தையிடம் சில விநாடிகள் மட்டுமே பேச முடிந்தது. காற்றில் கடுமையான எண்ணெய் துர்நாற்றம் வீசுகிறது. ஆனால் காற்றை விட, நச்சுத்தன்மை வாய்ந்த கருப்பு மழைத் துளிகள் தான் அதிக சேதத்தை ஏற்படுத்துகின்றன. மோசமான நிலையை எங்கள் குடும்பத்தார் அங்கு அனு பவித்து வருகின்றனர்” என்றார்.

# ஹார்மூஸ் ஜலசந்தி அருகே ஈரானின் 16 கண்ணிவெடி படகுகளை தாக்கி அழித்தது அமெரிக்கா

**வாஷிங்டன், மார்ச் 12:**


ஈரான் மீது அமெரிக்கா-இஸ்ரேல் இணைந்து தொடுத்துள்ள போர் தீவிரமடைந்து வருகிறது. இன்று 12-வது நாளாக நீடிக்கும் இப்போரில் இருதரப்பும் தாக்குதல்களை தொடர்ந்து வருகின்றன. இதில் ஈரான் ராணுவ உள்கட்டமைப்புகள், போர்க்கப்பல்கள், விமானங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் ஈரானின் 44 போர்க்கப்பல்கள் அழிக்கப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்தது.

இந்த நிலையில் கடலில் கண்ணிவெடிகளை பதிக்கும் 16 ஈரான் கப்பல்களை தாக்கி அழித்ததாக அமெரிக்க ராணுவம் அறிவித்துள்ளது. ஹார்முஸ் ஜலசந்தி அருகே 16 கண்ணிவெடி பதிக்கும் கப்பல்கள் உட்பட பல ஈரான் கடற்படை கப்பல்களை தாக்கி அழித்துள்ளதாக அமெரிக்க ராணுவ மத்திய கட்டளை பிரிவு தெரிவித்துள்ளது. மேலும் கப்பல்கள் தாக்கி அழிக்கப்படும் வீடியோ காட்சிகளையும் வெளியிட்டது.

உலகின் கச்சா எண்ணெய் விநியோகத்தில் 20 சதவீதம் நடைபெறும் ஹோர்முஸ் ஜலசந்தி கடல் பகுதியில் ஈரான் கண்ணிவெடிகளை வைத்திருந்தால் அதை உடனடியாக அகற்ற வேண்டும் என்றும், தவறினால் முன்பு கண்டிராத அளவில் தாக்குதல் நடத்தப்படும் என்றும் அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரித்திருந்த நிலையில் 16 கண்ணிவெடி படகுகள் அழிக்கப்பட்டுள்ளன.

# ஈரானில் பெய்யும் கருப்பு மழையால் சுவாச பிரச்சினைகள் அதிகரிக்கும்: உலக சுகாதார மையம்

**ஜெனிவா, மார்ச் 12:**




ஈரானில் கருப்பு மழை பெய்த நிலையில், “கருப்பு மழையும் அதனுடன் கலந்து வரும் அமிலமும் மக்களுக்கு ஆபத்தானது. குறிப்பாக சுவாச பிரச்சினைகள் ஏற்படும் அபாயம் உள்ளது” என்று உலக சுகாதார மையம் எச்சரித்துள்ளது.

கடந்த திங்கள் கிழமை, ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமும் எண்ணெய் சேகரிப்பு மையமும் தாக்கப்பட்டதை அடுத்து, அவை தீப்பிடித்து எரியத் தொடங்கின. இதனால், தலைநகரை கருப்புப் புகை மூடியது. இதையடுத்து பெய்த மழை, கருப்பு நிறுத்தில் இருந்துள்ளது.

காற்றில் கருந்துகள்கள் கலந்துள்ளதாலும் கருப்பு மழையுடன் அமிலம் கலந்து இருப்பதாலும் பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வரவேண்டாம் என்று ஈரான் அரசு, அறிவுறுத்தியது.

இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து தெஹ்ரானில் உள்ள தனது அலுவலகத்துடன் இணைந்து உலக சுகாதார மையம் ஆய்வு மேற்கொண்டது. இதையடுத்து ஜெனிவாவில் செய்தியாளர்களிடம் பேசிய உலக சுகாதார அமைப்பின் செய்தித் தொடர்பாளர் கிறிஸ்டியன் லிண்ட்மியர், “கருப்பு மழையும் அதனுடன் வரும் அமில மழையும் மக்களுக்கு ஆபத்தானது. குறிப்பாக சுவாச பிரச்சினைகள் ஏற்படும் அபாயம் உள்ளது. ஈரான் மக்கள் வீட்டிற்குள் இருக்க வேண்டும் என அந்நாட்டு அரசு அறிவுறுத்தியுள்ளதற்கு உலக சுகாதார மையம் ஆதரவு அளிக்கிறது. தாக்குதல்களால் எண்ணெய் சேமிப்பு நிலையங்களிலும் சுத்திகரிப்பு நிலையங்களிலும் தீ விபத்துகள் ஏற்பட்டுள்ளதால், காற்றின் தரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விஷத்தன்மை நிறைந்த ஹைட்ரோகார்பன்கள், சல்பர் ஆக்சைடுகள் மற்றும் நைட்ரஜன் சேர்மங்கள் அதிக அளவில் காற்றில் வெளியேறியுள்ளன” என தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் குறித்து அறிவியலாளர்கள் கூறும்போது, “இந்த புகை அல்லது தூசித் துகள்களை மூச்சில் இழுப்பதாலும், அவை தோலில் படுவதாலும் தலைவலி, கண் எரிச்சல், தோல் எரிச்சல், சுவாசிப்பதில் சிரமம் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். நீண்ட காலம் இவ்வாறான சுகாதாரமற்ற காற்றை சுவாசித்தால், சில வகை புற்றுநோய்கள் ஏற்படுவதற்கான அபாயமும் உள்ளது” என தெரிவித்துள்ளனர்.



# "தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கு முழு அர்ப்பணிப்போடு இருக்கிறது மத்திய அரசு"

# பிரதமருக்கு முதல்வர் கடிதம்



# சிலிண்டர் தட்டுப்பாடு: பல்வேறு தரப்பினருடன் அமைச்சர் ஆலோசனை

# இந்தியாவில் சிறுத்தை புலிகளின் எண்ணிக்கை 50-ஐ கடந்து சாதனை

# இனி ரூ.20 லட்சம் வரை சொத்து பதிவுக்கு 'பான்' எண் தேவையில்லை


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com Tamilnaduepaper

சென்னை 12.03.2026 வியாழக்கிழமை இலவச இ–பேப்பர்